பெருநகர சென்னை மாநகராட்சி மன்றம்
திருவள்ளுவராண்டு 2057, ஆனி மாதம் 10 – ஆம் நாள்,
2026-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24-ஆம் நாள்
புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில்
உள்ள மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்ட
நிகழ்ச்சிகள்

மாண்புமிகு மேயர்

முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து.

(அவையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது)

திருக்குறள். 11 – "செய்ந்நன்றியறிதல்" என்கிற அதிகாரம். குறள் எண். 106.

"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. "

மாசற்றவர்களின் உறவை மறக்கவும் கூடாது; துன்பத்தில் துணை நின்றவர் நட்பை துறக்கவும் கூடாது.

2026-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24-ஆம் நாள் புதன்கிழமை இம்மன்றத்தின் சாதாரண கூட்ட நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.

(தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை மாண்புமிகு மேயர் அவர்கள் படிக்க மன்ற உறுப்பினர்கள் அனைவரும் திரும்ப சொல்லுதல்)

தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாக கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற,

சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழு பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

இரங்கல் தீர்மானம்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2006 முதல் 2011 வரை, பழைய 57வது வார்டு, மண்டலம்-4ல் மாமன்ற உறுப்பினராகவும், நிலைக்குழு (நகரமைப்பு) உறுப்பினராகவும், சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி, முன்னாள் 98வது வட்ட கழக செயலாளராகவும், சீரிய முறையில் சிறப்பாக அவர் வகித்த பதவியில், பொதுமக்களுக்கு பணியாற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றவருமான, முன்னாள் மாமன்ற உறுப்பினர் திரு.காஞ்சி செ.துரை அவர்கள் 27.04.2026 அன்று இயற்கை எய்தினார்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 2001 முதல் 2006 வரையிலும், 2011 முதல் 2016 வரையிலும், வார்டு-121, மண்டலம்-9ல் மாமன்ற உறுப்பினராகவும், நியமனக்குழு உறுப்பினராகவும், சீரிய முறையில் சிறப்பாக அவர் சார்ந்துள்ள கட்சிக்கும், பொதுமக்களுக்கும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றவருமான முன்னாள் மாமன்ற உறுப்பினர் திருமதி. A. நூர்ஜஹான் அவர்கள் 14.05.2026 அன்று இயற்கை எய்தினார். என்கிற செய்தி அறிந்து இந்த மாமன்றம் ஆழ்ந்த துயரமும், அதிர்ச்சியும் அடைகிறது. இவர்களை இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இம்மாமன்றம் தெரிவித்து கொள்வதுடன் மறைந்த முன்னாள் மாமன்ற உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் அமைதி கடைபிடிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். **(அவையில் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் அமைதி கடைபிடித்தல்)**

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர், மாண்புமிகு தளபதி அவர்கள் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சராக இருந்து ஆற்றிய

அரும்பணிகள் எல்லாம் தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்க்காகவும் இருந்தது என்பதை அறிவோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில், புதுடெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் பேசிய போது, உலக அளவில் நிச்சயமற்ற பொருளாதார சூழல்களுக்கு இடையிலும், இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் தமிழ்நாடு என்றார். இந்தியாவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 42 சதவிகிதம் தமிழ்நாட்டில் பணிபுரிகிறார்கள் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதி ஆயோக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 22 சட்டமன்ற தொகுதிகளிலும், இம்மாநகராட்சியில் நமது நிர்வாகம் பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு வார்டுகளிலும் எண்ணற்ற பணிகளை சிறப்புடன் செய்துள்ளோம். பெண்களுக்கான தனி உடற்பயிற்சி கூடங்கள், பூங்காக்கள், மழைநீரை சேமிக்கும் வகையில் ஸ்பாஞ்ச் பூங்காக்கள், பூங்காக்களில் நடைபயிற்சி மேற்கொள்ளும் வகையில் நடைபாதைகள், சென்னை மாநகரில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காமல் இருக்கும் வகையில், மழைநீர் வடிகால்வாய்கள், ஏழை, எளிய மக்களின் நலன் சார்ந்து குறைந்த வாடகைகளில் நவீன முறையில் எண்ணற்ற சமுதாய நல கூடங்கள், தனியார் பள்ளிகளுக்கு இணையாக பள்ளி கட்டிடங்கள், புதியதாக தார் சாலைகள், கால்வாய்களின் குறுக்கே பாலங்கள், போக்குவரத்து நெரிசலை குறைக்க மேம்பாலங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை செய்து கொடுத்தோம். மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களது வார்டுகளுக்கு தேவையானதை செய்து கொடுத்தார்கள் என்பதை அனைவரும் அறிவோம். மாமன்ற உறுப்பினர்கள், மக்கள் பணியில் எந்தவிதமான தொய்வும் ஏற்படாமல் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டு கொள்கிறேன்.

அடுத்து, கேள்வி நேரம். முதலில், மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ஆ.வ. ஆறுமுகம் அவர்கள், வார்டுகுழு தலைவர், வார்டு எண் – 20.

திரு. ஆ.வ. ஆறுமுகம்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நியமனக்குழு

உறுப்பினர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

மண்டலம்-2 மணலி TPP சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 4 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடம் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என 60 ஆண்டுகளாக குப்பை கொட்டும் இடமாக இருந்தது. அதை CPCL நிறுவனம் வாகனம் நிறுத்தும் இடமாக கட்டப்பட்டு சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்த நிலையில், தற்போது CPCL நிறுவனத்தின் பணிகள் பூர்த்தி அடைந்து விட்டது. எனவே, அந்த வாகனம் நிறுத்தும் இடத்தை CPCL நிருவாகத்திடமிருந்து சென்னை மாநகராட்சியின் வசம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மாண்புமிகு மேயர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

பதில்

மண்டலம்–2, வார்டு எண்–20-ல் அமைந்துள்ள Survey No. 278/5 Part மற்றும் 278/2 ஆகிய நிலங்கள் மொத்தம் சுமார் 9 ஏக்கர் பரப்பளவு கொண்டவை. இந்த நிலம் 1975 ஆம் ஆண்டு முதல், மணலி பேரூராட்சி மற்றும் பின்னர் மணலி நகராட்சி நிர்வாகத்தின் கீழ் குப்பை கழிவுகள் கொட்டும் வளாகமாக சுமார் 51 ஆண்டுகளாக பயன்பாட்டி இருந்தது.

மணலி நகராட்சி 2011 ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதை தொடர்ந்து, இப்பகுதியில் இருந்த குப்பை கழிவுகள் முழுமையாக அகற்றப்பட்டன. அதன் பின்னர் புல எண் 278/5A-இல் பெருநகர சென்னை மாநகராட்சியின் லாரி நிலையம், C & D (Waste) மையம் மற்றும் இடுகாடு போன்ற அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மீதமுள்ள நிலப்பரப்பில் வாகன நிறுத்துமிடம் அமைப்பதற்காக DPR (Detailed Project Report) திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியின் போது, வருவாய் துறையின் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில், 1980 ஆம் ஆண்டு UDR பதிவின் போது மேற்கண்ட நிலம் தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானதாக 'அ' பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என கண்டறியப்பட்டது.

இதற்கிடையில் மாநில நெடுஞ்சாலையின் மூலம், அரசு ஆணை எண்–21-ன் நாள்:13.02.2025-ன்படி CPCL நிறுவனமே ஒப்பந்தபுள்ளி கோரி வாகன நிறுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. மேலும், இப்பணிகள் முழுமையாக நிறைவடைந்த பிறகு CPCL நிறுவனத்திடம் இருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மேற்படி இடத்தை, ஒப்படைப்பு செய்ய கடிதம் அனுப்பி பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படும் பட்சத்தில் அந்த வாகன நிறுத்துமிடம் பெருநகர சென்னை மாநகராட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பராமரிக்கப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திரு. ஆ.வ. ஆறுமுகம்

நன்றி.

மாண்புமிகு மேயர் அவர்களே, 16,17,19 மற்றும் 20 ஆகிய வார்டுகளில் பணிபுரிந்து வந்த உதவி பொறியாளர்கள் மட்டும் பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்பதனை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாண்புமிகு மேயர் அவர்கள் வாயிலாக ஆணையர் அவர்களின் கவனத்திற்கு - மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே பணியிடத்தில் உதவி பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர் என்பதனை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேயர்

ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. கே.பி.கே. சதீஷ்குமார்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே வணக்கம். 3

ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பணியிடத்தில் பணியாற்றுபவர்களை பணியிடமாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு மேயர்

இது கேள்வி நேரம், மாமன்ற உறுப்பினர்கள் நேரமில்லா நேரத்தில் பேசுகையில் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம்.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.உ. கணேசன் (எ) நேதாஜி உ. கணேசன் அவர்கள் வார்டு எண் – 38.

திரு.உ. கணேசன் (எ) நேதாஜி உ. கணேசன்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, துணை ஆணையர்களே, வட்டார துணை ஆணையர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே, அனைவருக்கும் காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, வார்டு-38, எண்ணூர் நெடுஞ்சாலை 2A இரயில்வே கடவு மேம்பாலம் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. நேரு நகர், துர்கா தேவி நகர், அஜீஸ் நகர், சிவாஜி நகர் பொதுமக்கள் மூலக்கடை செல்வதற்கு 38வது வார்டில் நாவலர் குடியிருப்பு அருகில் உள்ள உப்பு துறைக்கு சொந்தமான இடத்தில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் மாற்று பாதையாக சாலை அமைத்து தர வேண்டி, பொதுமக்கள் கோரிக்கை வைத்த நிலையில் பெரம்பூரில் உள்ள பொதுமக்கள் ஆர்.கே.நகரில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்ல முடியாமல் 38வது வார்டில் நாவலர் குடியிருப்பு வழியாக சென்று வருவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. பொதுமக்கள் மற்றும் அவசர வசதிக்காக வாகனம் செல்வதற்கும் உப்பு துறைக்கு சொந்தமான இடத்தில் தற்காலிகமாக சாலை அமைத்து தரப்படுமா? என்பதனை மாண்புமிகு மேயர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

பதில்

மண்டலம்-4, வார்டு-38ல் உள்ள நாவலர் குடியிருப்பு அருகில் மத்திய அரசின் Salt Corporationக்கு சொந்தமான இடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்க Salt Corporationக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இக்கடிதத்திற்கு Salt Corporation லிருந்து 16.10.2025 அன்று பெறப்பட்ட கடிதத்தில், அந்த இடத்தின் தற்போதைய வழிகாட்டி மதிப்பீட்டில் 25% சதவீதம் ரூ.2.87 கோடி Salt Corporationற்கு செலுத்தவும். அவ்வாறு செலுத்தும் பட்சத்தில் அந்த இடத்தில் மருத்துவமனை மற்றும் விளையாட்டுத்திடல் மட்டுமே அமைக்க வேண்டும் என நிபந்தனை தெரிவிக்கப்பட்டு கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே, தற்போது வரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இந்த நிலம் ஒப்படைப்பு செய்யப்படாத காரணத்தினாலும், மேலும், அந்த இடத்தில் மருத்துவமனை மற்றும் விளையாட்டு மைதானம் மட்டுமே அமைக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாலும் மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் புதியதாக சாலை அமைக்க இயலாத சூழல் உள்ளது.

இருப்பினும் 2A இரயில்வே கடவு மேம்பாலம் பணி நடைபெற்று வருவதால், பொதுமக்களின் நலனை கருத்திற் கொண்டு மத்திய அரசின் Salt Corporationக்கு சொந்தமான இடத்தில் தற்காலிகமாக ஈரக்கலவை (WMM) கொண்டு வாகனங்கள் சிரமமின்றி செல்ல ஏதுவாக சமன் செய்து மக்கள் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திரு. உ. கணேசன் (எ) நேதாஜி உ. கணேசன்

மாண்புமிகு மேயர் அவர்களிடம் கடந்த மூன்று ஆண்டுகளாக நிலமாற்றம் மற்றும் சாலை அமைப்பது தொடர்பாக பலமுறை கோரிக்கை வைத்துள்ளேன். இதற்காக மாண்புமிகு மேயர், ஆணையர் ஆகியோரிடம் பத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் திரு. கலாநிதி வீராசாமி அவர்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு கடிதம் அனுப்பியுள்ளார். மாவட்ட வருவாய் அலுவலர் நிலம் மற்றும் உடமை துறை மற்றும் மண்டல அலுவலர் ஆகியோர்களின் கவனத்திற்கும் இவை கொண்டு செல்லப்பட்டுள்ளன.

மாண்புமிகு மேயர்

இரயில்வே துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டபோது, நிலமாற்றம் செய்ய இயலாது என தெரிவித்துள்ளனர். நிலமாற்றம் செய்யப்பட்டால், மாமன்ற உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றி தரப்படும். தற்காலிகமாக சாலை அமைத்து தரப்படும்.

திரு. உ. கணேசன் (எ) நேதாஜி உ. கணேசன்

12.02.2026 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மேம்பால பணியை தொடங்கி வைத்தார்; மாண்புமிகு மேயர் அவர்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டீர்கள். சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக பணி இடையில் நிறுத்தப்பட்டது; தற்போது மீண்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்லும் பகுதி; மூன்று அரசு பள்ளிகள் மற்றும் நான்கு சென்னை பள்ளிகள் இங்கு செயல்பட்டு வருகின்றன. காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை போக்குவரத்து நெரிசலால் மக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். போக்குவரத்து காவல்துறைக்கு அறிவுறுத்தி, குறைந்தது இரண்டு காவலர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். அதிகாரிகள் மேற்படி பணியினை கண்காணிக்க வேண்டுமென்றும் கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

அப்பகுதியில் 2A இரயில்வே கடவு மேம்பாலம் பணி நடைபெற்று வருவதால், மாற்று ஏற்பாடு செய்து தரப்படும்.

திரு. உ. கணேசன் (எ) நேதாஜி உ. கணேசன்

கடந்த மூன்று ஆண்டுகளாக மழைநீர் வடிகால்வாய் அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டு, தேர்தலுக்கு முன்னதாகவே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி தொடங்கப்பட்டது. பின்னர் பணி நிறுத்தப்பட்டது. ஒன்றரை கிலோமீட்டர் நீளத்திற்கு மழைநீர் செல்ல வழியில்லாததால், பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். மழைக்காலம் நெருங்குவதால், பொதுநலன் கருதி, பணியை விரைவாக முடித்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.ம. கமல் அவர்கள், வார்டு எண் – 86.

திரு.ம. கமல்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நியமனகுழு உறுப்பினர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகை துறையினை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

86வது வார்டு பகுதியில், சிறப்பு திட்டங்கள் துறையின் வாயிலாக சுமார் பதிமூன்று கோடி ரூபாய் செலவில் பள்ளி அமைப்பதற்கு ஏற்பாடு செய்த திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். அதனை தொடர்ந்து, சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் சின்னவர் அவர்களையும் வணங்குகிறேன். மாவட்ட கழக செயலாளர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்களையும் வணங்கி என்னுடைய கேள்வியை தொடங்குகிறேன்.

கேள்வி

மண்டலம்-7, பகுதி 19, வார்டு-86க்கு உட்பட்ட VGN Layout இல் உள்ள VGN Cosmo polis, VGN Brent, VGN Victoria, VGN Oval Garden ஆகிய பகுதிகளில் 4 வருடங்களாக வரி செலுத்தி கொண்டு வருகிறார்கள். எப்போது இப்பகுதியில் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவு நீர் இணைப்பு வழங்க இயலும்?

மாண்புமிகு மேயர்

பதில்

மண்டலம்-7, வார்டு-86ல் VGN Layoutஇல் குறிப்பிட்டுள்ள பகுதிகள் குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் இல்லாத பகுதிகளாகும். இவ்வாறு குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் இல்லாமல் விடுபட்ட தெருக்கள் மற்றும்

புதியதாக உருவாகிய தெருக்களுக்கு, குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் பதிக்கும் திட்டம் செயல்படுத்த சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இவ் அறிக்கை தயார் செய்யப்பட்ட பின்பு அரசு அனுமதி பெற்று பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட பின்னரே பணிகள் தொடங்கப்படும் என்று சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.ம. கமல்

நன்றி.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. லதா என்கிற லதாவாசு அவர்கள், வார்டு எண் – 97.

திருமதி. லதா என்கிற லதாவாசு

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், ஊடக துறையினை சார்ந்த நண்பர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி

ம.து.ந.க.எண் ஆ1/501/2026 கடித வாயிலாக மண்டலம்-8, வார்டு 97க்குட்பட்ட வெள்ளாள தெருவில் அமைந்துள்ள திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தினை நவீனப்படுத்தும் வகையிலும் செயற்கை புல்வெளி (Turf) அரங்கம் அமைத்திட மதிப்பீடு செய்யப்பட்டு 1 கோடியே 67 லட்சம் செலவில் பணி முடிக்க கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் ஒப்புதல் வழங்கப்பட்டும் இன்று வரை ஒப்பந்தப்புள்ளி கோரப்படாமல்

உள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விரைவில் மேற்கண்ட பணி முடிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு மேயர்

பதில்

மண்டலம்-8, வார்டு-97, வெள்ளாள தெருவில் அமைந்துள்ள திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தினை நவீனபடுத்தும் வகையிலும், செயற்கை புல்வெளி (Turf) அரங்கம் அமைத்திட மதிப்பீடு தொகை ரூ.167.00 இலட்சத்திற்கு 12.06.2026 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திருமதி. லதா என்கிற லதாவாசு

மாண்புமிகு மேயர் அவர்களே, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியினை விரைவில் தொடங்கி முடித்து தருமாறு கேட்டு கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. ஸ்ரீஇராஜேஸ்வரி அவர்கள் வார்டு எண்.58.

திருமதி. ஸ்ரீ இராஜேஸ்வரி

103வது பிறந்தநாள் விழா காணும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி முதற்கண் என் வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன். திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்கும் மக்களுக்கும் பல நன்மை பயக்கும் திட்டங்களை வகுத்து தந்த எங்கள் கழக தலைவர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். எங்கள் கழக இளைஞரணி செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வணங்குகிறேன். அனைவருக்கும் ஒரே மாதிரியான சட்டத்தை வகுத்து, இந்த ஐந்தாண்டு காலத்தில்

ஆக்கப்பூர்வமான ஆய்வு பணிகளை செய்த முன்னாள் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளருமான திரு. பி. கே. சேகர்பாபு அவர்களையும் வணங்குகிறேன்.

கேள்வி

மண்டலம்-5, வார்டு-58ல் உள்ள மைலேடீஸ் பூங்கா நீச்சல் குளம் சீரமைக்கும் பணி கடந்த ஆகஸ்ட் மாதம் தொடங்கியது. இன்று வரை அப்பணி முடிவடையாமல் இருக்கின்றது. அங்குள்ள பொதுமக்கள் மற்றும் நீச்சல் பழகும் மாணவ, மாணவியர்கள் எப்போது இப்பணி முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்று கேள்வி கேட்கிறார்கள். ஆகவே, கூடிய விரைவில் நீச்சல் குளம் சீரமைக்கும் பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு மேயர்
பதில்

மண்டலம்-5, வார்டு-58ல் உள்ள மைலேடீஸ் பூங்காவில் அமைந்துள்ள நீச்சல் குளத்தினை சீரமைக்கும் பணிக்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் M/s. Janishree Corporate Service Limited நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் பணியினை தாமதமாக மேற்கொண்டதின் அடிப்படையில் கடந்த 20.01.2026 மற்றும் 30.01.2026 ஆகிய தேதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியால் தாக்கீது வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்ததாரரால் மேற்கொண்ட பணிகளில் தொய்வு ஏற்பட்டதால், ஒப்பந்ததாரருக்கு இறுதி வாய்ப்பு வழங்கும் வகையில் Show Cause Notice 18.06.2026 அன்று வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாவிட்டாலும், தமிழ்நாடு tender transparency சட்டம், ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் மாநகராட்சி விதிகளின்படி ஒப்பந்தத்தை ரத்து / முடித்தல் (Termination of Contract) செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், நிலுவையில் உள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக எஞ்சிய பணிகளுக்கான புதிய மதிப்பீடு (Fresh Estimate) தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதல் (Administrative Sanction) பெற முன் மொழிவு சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திருமதி. ஸ்ரீஇராஜேஸ்வரி

நன்றி.

மாண்புமிகு மேயர்

நன்றி.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ப. சுப்பிரமணி அவர்கள், வார்டு எண்.139.

திரு. ப. சுப்பிரமணி

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியின் அதிகாரிகளே, எங்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொது செயலாளர் திரு.வை.கோ அவர்களுக்கு எனது வணக்கத்தினை தெரிவித்து எனது கேள்வியினை தொடங்குகிறேன்.

கேள்வி

மண்டலம்-10, வார்டு-139, மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி 2025-2026 நிதியினை வடிவேல் தெருவில் உள்ள மாநகராட்சி சமூக நலக்கூடம் உள்ள இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு கொடுத்தேன். அந்தப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், தற்போது வரை அந்தப் பணி நடைபெறவில்லை. ஏற்கனவே சமூக நலக்கூடம் மேம்பாட்டிற்கு மாநகராட்சி மூலதன நிதியின் மூலம் பணிகள் நடைபெற்று கொண்டு வருகிறது. பல மாதங்கள் ஆகியும் இரண்டு வேலைகளை ஒரே ஒப்பந்ததாரர் எடுத்துள்ள காரணத்தினால், வேலையினை பல மாதங்களாக செய்ய முடியாமல் 139வது வார்டு ஏழை மக்கள் சுப நிகழ்ச்சி திருமண நிகழ்ச்சிகளை செய்ய முடியாமல் இருக்கின்றனர். ஆதலால், சமூக நலக்கூடத்தை எப்போது ஒப்படைப்பீர்கள் என்பதை தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

பதில்

மண்டலம்-10, வார்டு-139ல் 2025-26ஆம் ஆண்டின் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் வடிவேல் தெருவில் பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்காக 13.03.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி

திறக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகளால் இப்பணிக்கு பணியாணை வழங்க இயலவில்லை, விரைவில் பணியாணை வழங்கி பணி துவங்கப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திரு. ப.சுப்பிரமணி

நன்றி.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. நா. சுந்தரம், அவர்கள், வார்டு எண்.198.

திரு. நா. சுந்தரம்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, அரசு துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15க்கு உட்பட்ட 198வது வார்டு காரப்பாக்கம் இப்பகுதியில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். காரப்பாக்கம் பகுதியில் விளையாட்டுதிடல் ஏதுமில்லை. மேற்படி பகுதியில் பொதுமக்கள் நடைபயிற்சி, உடற்பயிற்சி செய்யும் இடமாகவும், இளைஞர்கள் கிரிகெட், கைபந்து விளையாடுமிடமாகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

காரப்பாக்கம் கங்கையம்மன் கோயில் விரிவாக்கம் பகுதி அரசு உயர்நிலைப்பள்ளி அருகில் சர்வே எண் 174/15, 16, 17-ல் காரப்பாக்கம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண். 17/2009-10 மற்றும் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.79, நாள்.31.08.2010 மற்றும் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.151, நாள்.31.01.2011-ன் படி 7 ஏக்கர் அரசு மானாவரி தரிசு நிலத்தில் சமுதாய விளையாட்டு திடல் அமைக்க கிழக்கு பகுதியில் சுற்றுசுவர் அமைத்து ஊராட்சியால் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.33, நாள்.30.06.2011 -ன்படி சுற்றுசுவர் அமைக்கும் பணி முடித்து பணம் ஒப்பந்ததாரருக்கு பில்படி தொகை ரூ.89,985/- வீதம் மூன்று தவணையாக மொத்தம் ரூ.2,69,955/- தொகை வழங்கப்பட்டது.

மேற்படி இடத்தை இளைஞர்கள் விளையாட்டு திடலாக பயன்படுத்தி வருகிறார்கள்.

மேற்படி 174 சர்வே எண்ணில் 2007-2008ஆம் ஆண்டில் இருந்து சுமார் 10 ஏக்கரில் அரசு உயர்நிலைப்பள்ளி அமைந்து செயல்பட்டு வருகிறது. சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

நிலப்பரப்பில் மயானபூமி, சென்னை மாநகராட்சி மக்கும் குப்பை உரகிடங்கு தமிழ்நாடு அரசினர் ஆசிரியர் பயிற்சி மைய வளாகம் மாநகராட்சி லாரி செட், 10 ஏக்கரில் அரசு உயர்நிலைப்பள்ளி அமைந்து செயல்பட்டு வருகிறது.

2011-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டது. மேற்படி 174 சர்வே எண்ணில் தமிழ்நாடு அரசினர் ஆசிரியர் பயிற்சி மைய வளாகம் செயல்பட்டு வருகிறது. மேலும் சென்னை மாநகராட்சி மக்கும் குப்பை உரகிடங்கு, இந்து, முஸ்லிம், கிறிஸ்துவர் மயானபூமி அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் சென்னை குடிநீர் வடிகால் வாரியம் Pumping Station மற்றும் சென்னை மாநகராட்சி லாரி செட் அமைந்துள்ளது.

2011-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டது தொடர்ந்து பொதுமக்கள், இளைஞர்கள் அனைவரும் விளையாட்டு திடலை மேம்படுத்தவும், நடைமேடை பயிற்சி பாதை அமைத்து தரவும் சென்னை மாநகராட்சியிடம் கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் 198 வார்டு மாமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் சென்னை மாநகராட்சி மேயரிடம் 10.04.2023 மாமன்ற கூட்டத்தில் விளையாட்டு திடலை மேம்படுத்த மனு அளித்தேன். மனுவின் விசாரணைக்காக மண்டல அலுவலர் அவர்கள் இடத்தை பார்வையிட்டு சோழிங்கநல்லூர் 15வது மண்டல குழு 04.05.2023 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தின் தீர்மான எண்.226, 227, 228, 229ன்படி, விளையாட்டுதிடலுக்கு,

1.கிழக்கு சுற்றுசுவர் அமைக்க பொருள் எண்.42-ல்ரூபாய். 17,00,000/-

2.வடக்கு சுற்றுசுவர் அமைக்க பொருள் எண்.43-ல் ரூபாய்.34,10,000/-

3.தெற்கு சுற்றுசுவர் அமைக்க பொருள் எண்.44-ல் ரூபாய்.34,10,000/-

4. மேற்கு சுற்றுசுவர் அமைக்க பொருள் எண்.45-ல் ரூபாய். 18,30,000/-ஆக மொத்தம் ரூபாய்.1,03,50,000/- மதிப்பில் மதீப்பீடு செய்யப்பட்டு,

தீர்மானம் இயற்றப்பட்டு பணி முடிக்கப்பட்டது. மேலும், 15.11.2023 அன்று நடைபெற்ற 15வது மண்டல குழு கூட்டத்தில் பொருள் எண். 61-ன்படி ரூ.8,49,000/- மதிப்பில் Arch கட்டும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணிகள் நடந்து வருகிறது.

மேலும் தமிழ்நாடு அரசு இளைஞர்களின் நலன் கருதி விளையாட்டு துறையை மேம்படுத்தி வருகிறது. மாண்புமிகு மேயர் அவர்களிடம் ஒருகிணைந்த விளையாட்டு திடல் அமைக்க 10.05.2022, 16.09.2022, 14.11.2022, 10.04.2023, 16.06.2023, 20.07.2023 தேதிகளில் மனு அளிக்கப்பட்டது. அதனை ஆய்வு செய்து ஒருகிணைந்த விளையாட்டு திடல் அமைக்க (Including Swimming pool, Basket ball court, Volley ball court, Skating ring, Playground, Running track, Cricket net, kabadi ground, Silambam, open gym, Childrens play area and Parking area) அமைக்க ரூ.4,00,00,000/- மதிப்பீட்டில் வார்டு குழுவின் பரிந்துரை வேண்டி மண்டல தீர்மான எண்:285, நாள்.09.04.2025ல் பரிந்துரைக்கப்பட்டு பணி உத்தரவு வழங்கி பணி தொடங்கும் தருவாயில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலம் நீதித்துறை நடுவர் நீதிமன்ற கட்டடம் மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்பு கட்டுவதற்கு, உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறைக்கு நிலமாற்றம் செய்தல் ஆணை வெளியிட்டு அரசாணை (நிலை) எண்.495, 28.07.2025, 1.சென்னை மாவட்ட ஆட்சியரின் கடித எண். ஜே1/23907/2020 நாள் : 03.04.2023, 2.நில நிருவாக ஆணையரின் கடித எண். வி3/4580336/2023 (08.04.2023) நாள்.23.04.2025 காரப்பாக்கம் கிராமத்தில் சர்வே எண். 174/16இல் ஹெக்டேர் நன்செய் தரிசு என வகைபாடுடைய நிலத்தினை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற கட்டடம் மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ஆணை வழங்கி உள்ளது.

மேற்படி இடத்தில் சென்னை மாநகராட்சி மூலம் ஒருகிணைந்த விளையாட்டு திடல் அமைக்க பணி நடைபெறும் நிலையில் சர்வே எண்.174/16 நிலமாற்றம் செய்தல் ஆணை வெளியிட்டு அரசாணை (நிலை) எண்.495, 28.07.2025 நிறுத்தி மறுபரிசீலனை செய்து சென்னை மாநகராட்சி மூலம் ஒருகிணைந்த விளையாட்டு திடல் அமைத்து தரப்படுமா?

மாண்புமிகு மேயர்

பதில்

மண்டலம்–15, வார்டு–198 சோழிங்கநல்லூர் வட்டம் மற்றும் கிராமம், காரப்பாக்கம் கங்கையம்மன் கோயில் விரிவு பகுதி அரசு உயர்நிலைப்பள்ளி அருகில் புல எண்.174/15, 16, 17 அரசு புறம்போக்கு தரிசு வகைப்பாடு கொண்ட 7 ஏக்கர் நிலத்தில் சுற்றுசுவர் அமைக்க 04.05.2023 நாளிட்ட 15-வது மண்டல வார்டுக்குழு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, சுற்றுச்சுவர் கட்டும் பணி முடிவுற்றது.

இந்நிலையில் மேற்படி விளையாட்டு திடல் அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டில் உள்ள 7 ஏக்கர் நிலத்தில் சுமார் 16,000 ச.மீ நிலத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற கட்டிடம் மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்பு கட்டுவதற்கு உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறைக்கு நிலமாற்றம் செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அவர்களுக்கு கடந்த 30.12.2025 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தில் வார்டு-198 காரப்பாக்கம் பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள நிலத்தினை அளந்து, விரிவான அறிக்கையினை மற்றும் மேற்படி கோரப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் அமைக்க வருவாய் துறை மூலம் பரிந்துரை செய்து அரசுக்கு முன்மொழிவினை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திரு.நா. சுந்தரம்

மாண்புமிகு மேயர் அவர்களே, 198வது வார்டில் உள்ள 5 குளங்கள் சீரமைப்பு பணி நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

நடவடிக்கை எடுக்கப்படும். நன்றி. அடுத்து நேரமில்லா நேரம்.

மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.நே.சிற்றரசு அவர்கள், தலைவர், நிலைக்குழு (பணிகள்) / மாமன்ற உறுப்பினர், வார்டு எண். 110.

திரு.நே. சிற்றரசு

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே – உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது காலை வணக்கத்தினை உரித்தாக்குகிறேன். மக்களின் தீர்ப்பை தலைவணங்கி ஏற்று கொண்டு, தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட திட்டங்களால் தான் இன்று தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்கிறது. ஆசிய கண்டத்தின் எந்த மூலையில் சென்றாலும், திராவிட மாடல் ஆட்சியின் சாதனை என்றைக்கும் ஒலித்து கொண்டிருக்கும் என்பதற்காக கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியே மிகப்பெரிய சாட்சியாக விளங்குகிறது. இச்சூழலில் உள்ளாட்சி பிரதிநிதிகளாக நான்கரை ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பான திட்டங்கள் மூலம் தமிழ்நாடு தன்னிறைவு பெற்று, அனைத்து மாநிலங்களிலும் முன்னோடி மாநிலம் தமிழ்நாடு என்கிற பெருமையை பெற்றுள்ளது. சிறப்பான திட்டங்கள் மட்டுமல்ல, மக்களின் தேவையை உணர்ந்து செயல்படும் அரசே சிறந்த அரசு. அந்த வகையில் திராவிட மாடல் ஆட்சியின் முன்னாள் முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஒரு உதாரணமாக விளங்குகிறார்.

ஒரு அரசின் சிறந்த வழிகாட்டிகளாக போர்ப்படை தளபதிகள் விளங்க வேண்டும். அப்படிப்பட்ட போர்ப்படையின் முதன்மை தளபதியாக இளம் தலைவர் அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் முதல் மக்களின் நலனில் அக்கறை கொண்டு சிறப்பான துணை முதலமைச்சராக பணியாற்றி வந்தார். இன்றைக்கு இந்தியாவே திரும்பி

பார்க்கும், எதிர் வரிசையில் அமர்ந்திருக்கும் சிறந்த எதிர்கட்சி தலைவராக அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளங்குகிறார். **(கைதட்டல்)**

மக்களுக்காக குரல் கொடுக்கும் இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம் என்பதில் மாற்று கருத்தில்லை. எந்தத் தனி மனிதரின் பிரச்சனைக்கும் குரல் கொடுக்கும் இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம் என்பதிலும் மாற்று கருத்தில்லை. பெருநகர சென்னை மாநகராட்சி மிகவும் பழமை வாய்ந்த மாநகராட்சி. 338 ஆண்டுகளை கடந்த இம்மாநகராட்சி இந்தியாவில் சிறந்த மாநகராட்சியாக விளங்குகிறது. அதுமட்டுமல்ல, சென்னை இந்தியாவின் நான்காவது மிக பெரிய நகரமாகும்.

426 சதுர கிலோமீட்டர் பரப்பளவை கொண்ட சென்னை மாநகராட்சியை நடத்துவது கடினமானதாகும். அப்படிப்பட்ட சூழலில் மாநகராட்சியை வளர்த்தெடுக்க வேண்டும்; புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்; அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இவை அனைத்தும் அரசின் கடமையாக இருந்தாலும் பெரும் பங்கு மாநகராட்சியையே சாரும்.

ஒரு கோடி மக்கள் வாழும் இந்த சென்னை மாநகரத்தில் எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் அதற்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு மாண்புமிகு மேயர் அவர்களையே சாரும். மேலும், தினமும் கல்வி, சுகாதாரம், தொழில், வணிகம் ஆகியவற்றிற்காக 25 இலட்சம் மக்கள் சென்னைக்கு வந்து செல்கின்றனர்.

இன்றைக்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க மாநகராட்சியின் 338 ஆண்டுகால ஆட்சி காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர் என்கிற பெருமையை தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பெற்றது வாழ்நாளில் மிகப்பெரிய பெருமையாகும்.

மாநகராட்சியின் பணிகள் எத்தனை உயர்ந்த எண்ணத்தில் பார்க்கப்பட்டன என்று சொன்னால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பணியாற்றிய காலத்தில் சென்னையை உயர்ந்த நிலைக்கு எடுத்து சென்றார் என்பதை அறியலாம்.

கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் மேம்பாலங்கள், புதிய கட்டிட பணிகள், மழைநீர் வடிகால்வாய் பணிகள், புதிய சாலைகள் அமைத்தல், வேறு மாவட்டத்திலிருந்து சென்னையில் இணைக்கப்பட்ட பகுதிகள் – இவை அனைத்திலும் மிக பெரிய வளர்ச்சியை கண்டது சென்னை மாநகராட்சி. அந்த வளர்ச்சி எப்போது ஏற்பட்டது என்று சொன்னால், தளபதி அவர்கள் வணக்கத்திற்குரிய மேயராக பணியாற்றிய காலத்தில் தான் அந்தப் பெருமை சார்ந்தது.

2021–ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்கும் போது, பருவமழை காரணமாக சென்னை கடுமையான சூழ்நிலையை எதிர்கொண்டது. இயற்கை பேரிடர் என்றால் எந்த நகரமாக இருந்தாலும் பாதிப்பை ஏற்படுத்தும். அப்போதைய சூழலில் 560 இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. அதை மீட்டெடுக்க வேண்டும் என்கிற நோக்கத்துடன், கழக தலைவர் அவர்கள் மேயராக பணியாற்றிய போது பல்வேறு திட்டங்களை உருவாக்கினார்.

சென்னையை நன்கு அறிந்த வல்லமைமிக்க தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற உடன், சென்னைக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்கிற நோக்கத்துடன் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தினார். 2021–க்கு முன்னர் சென்னை மாநகரில் மழைநீர் வடிகால்வாய் பணிகள் 2071 கிலோ மீட்டர் தொலைவிற்கு 8835 பணிகள் மட்டுமே நடைபெற்றன. ஆனால், 2021 முதல் 2026 வரை ஐந்து ஆண்டுகளில், திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பான திட்டத்தின் மூலம் 1000 கிலோமீட்டர் அளவிற்கு 3130 மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டன. இது சாத்தியமானது திராவிட மாடல் அரசில் மட்டுமே. இதற்கு துணையாக, பல்வேறு காலகட்டங்களில் சென்னையை சுற்றி ஆய்வு கூட்டங்கள் நடத்தி, அதிகாரிகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி, தமிழ்நாட்டின் முன்னாள் துணை முதலமைச்சராக பொறுப்பில் இருந்த திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பருவமழை காலம் மட்டுமல்லாமல் மற்ற காலங்களிலும் கூட்டங்களை நடத்தி, மாநகராட்சி பணிகளை துரிதப்படுத்தி, ஐந்து ஆண்டுகளில் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்தினார். அந்தப் பெருமை திராவிட மாடல் அரசிற்கே சேரும்.

மழை பெய்யும் போது, மழைநீர் வடிகால்வாய் வழியாக நீர் வெளியேற்றப்படுகிறது. சில இடங்களில் அரை அடி அல்லது ஒரு அடி அளவிற்கு மழைநீர் நிற்கும் போது பத்திரிகையாளர்கள் புகைப்படம் எடுத்து "சென்னை வெள்ளத்தில் மூழ்கியது" என்று செய்தி வெளியிடுவார்கள். ஆனால், சென்னை மாநகரம் இயற்கையாக உருவான நகரம் அல்ல; மக்கள் அதிகமாக குடியேறியதால் சாலைகள் குறுகலாக உள்ளன. அப்படிப்பட்ட சூழலில் அதிக மழை பெய்தால் மழைநீர் முழுமையாக வெளியேற முடியாது.

2021 முதல் 2026 வரை எத்தனை மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டன என்பதையும் பதிவு செய்து கொண்டிருக்கிறோம். 2025 ஆம் ஆண்டு பெய்த மழையின் போது, தமிழ்நாட்டின் முன்னாள் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மேயர், துணை மேயர் மற்றும் ஆணையர் அகியோர்களுடன் தொடர்ந்து ஆய்வு கூட்டங்கள் நடத்தினார்.

முன்னர் மழை வந்த பின்பு தான் ட்ராக்டர், மோட்டார் பம்பு போன்றவை பயன்படுத்தப்பட்டன. ஆனால், கடந்த ஆண்டு மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர் ஆகியோர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், அதிக மழை பெய்யும் இடங்களை ஆய்வு செய்து, செய்தியாளர்களுக்கு விளக்கமாக கூறப்பட்டது. அளவிற்கு அதிகமாக மழை பெய்யும் போது, மழைநீர் வடிகால்வாயில் மழைநீர் செல்வது கடினமாகும். சிறிது நேரம் சென்ற பிறகே மழைநீர் வடியும். அந்த இடைவெளியில் மழைநீர் நிற்கிறது என்று கூறுவர். சென்னை மாநகரின் பரப்பளவு அனைவருக்கும் தெரிந்ததே; சில இடங்கள் மேடு, பள்ளமாகவும், சில இடங்களில் தண்ணீர் ஓட்டமின்றியும் இருக்கும். அப்படிப்பட்ட இடங்களில் உடனடியாக மழைநீரை அகற்ற வேண்டும் என்றால், அதற்காகவே 2025 ஆம் ஆண்டில் மழைக்காலத்திற்கு முன்பாக பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2025 ஆம் ஆண்டு மொத்தம் 71 செ.மீ. மழை பெய்தது. ஒரே நாளில் 20 செ.மீ. மழை பெய்தால், சென்னை மாநகரம் தாங்காது என்பது உண்மை. அதை புரிந்தவர்கள் செய்தி வெளியிட மாட்டார்கள்; புரியாதவர்கள் விமர்சனமாக செய்தி வெளியிடுவார்கள். ஆனால், 2025–ஆம் ஆண்டில் எவ்வளவு பணிகள் செய்யப்பட்டன என்பதை அறிந்தால்

மட்டுமே, 2026 மழைக்காலம் வந்த போதும், சென்னை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றினார்கள் என்பதை உணர முடியும். திராவிட முன்னேற்ற கழக மாமன்ற உறுப்பினர்கள் போல மக்கள் பணிகளை செய்ய யாராலும் முடியாது என்பதற்கு சென்னை மாநகரம் ஒரு சான்றாக உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

கொரானா காலத்திலும் தன் உயிரை பொருட்படுத்தாமல் மக்களுக்காக பணியாற்றிய முதலமைச்சர் ஒருவர் இருக்கிறார் என்றால், உலகத்தில் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை போல யாரும் இல்லை என்பதை அவர் நிரூபித்துள்ளார். (கைதட்டல்)

கொரானா காலத்தில் வீடு வீடாக சென்று மக்களின் தேவைகளை நிறைவேற்றியது நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் போல யாராலும் செய்ய முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், 2025 ஆம் ஆண்டு 71 செ.மீ. மழை பெய்த போதும், சென்னை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டது என்பதை கூறினால், அது திராவிட மாடல் அரசின் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கொடுத்த நம்பிக்கையும், திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் மேற்பார்வையுமே காரணமாகும்.

மழைக்காலத்திற்கு முன்பாகவே ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு, 80 முதல் 100 HP மோட்டார்கள் 150 இடங்களில் பொருத்தப்பட்டன. இம்முறை மழைக்கும் அவற்றை பயன்படுத்த வேண்டும். சென்னை மாநகராட்சி என்பது திராவிட முன்னேற்ற கழகத்தின் ஒவ்வொரு மாமன்ற உறுப்பினர்களும் மக்கள் பணிகளை செய்வதில் முதன்மையானவர்கள் என்பதை நிரூபிக்கும் சாட்சி.

2025 ஆம் ஆண்டில் 150 இடங்களில் தாழ்வான பகுதி, மேடான பகுதி, தண்ணீர் ஓட்டமில்லாத இடங்கள், நிலை சரியில்லாத இடங்கள், 0-பாயிண்ட் சரியில்லாத இடங்கள் ஆகியவை கண்டறியப்பட்டு, அந்த இடங்களில் மோட்டார்கள் பொருத்தப்பட்டன. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக, 2025-ஆம் ஆண்டிலும் மக்களை வெள்ள பாதிப்பிலிருந்து தடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டது. அதே போன்று, 2025 ஆம் ஆண்டு மழைக்காலத்தில் 500 ட்ராக்டர்கள் பயன்படுத்தப்பட்டன. மழை வருவதற்கு முன்பே அந்தந்த

இடங்களில் ட்ராக்டர்கள் நிறுத்தப்பட்டு, 90 நாட்களுக்கு மேல் தயாராக வைத்திருந்தனர்.

12வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. வீ. கவி கணேசன் அவர்கள் காலநிலை மாற்றம் குறித்து எடுத்துரைத்தார். அதற்கான நடவடிக்கைகளை பெருநகர சென்னை மாநகராட்சியும், தமிழ்நாடு அரசும் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த மன்றத்தில் சமூக ஆர்வலர்களாக உள்ள மாமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். காலநிலை மாற்றத்தால் மழை பொழிவு கணிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. இம்முறை ட்ராக்டர்கள், 80 முதல் 100 HP மோட்டார்கள் பொருத்தப்பட்டால், எப்படிப்பட்ட வெள்ள பெருக்கையும் பெருநகர சென்னை மாநகராட்சி சமாளிக்க முடியும் என்கிற நம்பிக்கை உள்ளது. மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதில் அதிக கவனம் செலுத்துகிறோம்.

மழைபொழிவு ஏற்படுகிறது என்று சொன்னால், காலை 5 மணியாக இருந்தாலும், ICCC–க்கு முன்னாள் முதலமைச்சர், முன்னாள் துணை முதலமைச்சர் ஆகியோர் நேரடியாக மேயர் மற்றும் துணை மேயர், ஆணையர் ஆகியோரை தொடர்பு கொண்டு ICCC–க்கு வந்து, ஒவ்வொரு மக்களின் பிரச்சனைகளையும் கவனித்து உடனடியாக தீர்வு செய்ய வேண்டும் என்று கூறி செயல்பட்டனர். **(கைதட்டல்)**

1913 என்கிற புகார் தொலைபேசி எண் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது. அதன் மூலம் தொடர்பு கொள்பவர்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுக்க வேண்டும் என்று ஆணையர் அவர்களை கேட்டு கொள்கிறேன். அதே போன்று, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சியில் பேரிடர் காலத்தில் ஏற்படும் வெள்ள பெருக்கினை தடுக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு மேயர் அவர்களையும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களையும், ஆணையர் அவர்களையும் கேட்டு கொள்கிறேன்.

திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில், திராவிட மாடல் ஆட்சியின் ஐந்து ஆண்டு காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் இன்றும் உயிரோட்டமாக செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட திட்டங்கள், தமிழ்நாட்டிற்கே மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் பின்பற்றப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எந்தத்

திட்டமும் தனி மனிதனுக்காக உருவாக்கப்படவில்லை; உலகில் வாழும் அனைத்து தரப்பினருக்கும் தேவையான திட்டங்களாகவே அவை செயல்படுகின்றன. இதனை உணர்ந்து செயலாற்றிய ஒருவர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தான்.

கனடாவில் காலை உணவு திட்டம் நடைமுறையில் உள்ளது. ஆந்திர மாநிலத்திலும் அது செயல்பட்டு வருகிறது. கர்நாடகாவில் கட்டணமின்றி விடியல் பயணம் மேற்கொள்ளப்படுகிறது. இது போல, பல மாநிலங்களில் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. அதையெல்லாம் தாண்டி, மகளிர் உரிமை தொகை திட்டம் பல மாநிலங்களில் நடைமுறையில் உள்ளது என்பதை தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

வார்டுகுழு ஆலோசனை கூடத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தை வைக்கலாம் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, முன்னாள் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் புகைப்படம் வைக்க தேவையான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்தவர்கள். மக்கள் பணியில் நமக்கு ஈடாக வேறு யாராலும் செயல்பட முடியாது என்பதற்கு கடந்த நான்கு ஆண்டு கால ஆட்சியே சாட்சியாக உள்ளது. இதை தொடர்ந்து எப்போதும் மக்கள் பணியில் திராவிட முன்னேற்ற கழகத்தின் ஒவ்வொரு தொண்டனும் இருப்பர் என்பதை பதிவு செய்ய வேண்டிய கடமையில் இருக்கிறேன்.

மாண்புமிகு மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் ஆகியோர்களின் கவனத்திற்கு: சென்னை மாநகராட்சியை பொறுத்தவரை மக்களோடு எப்போதும் தொடர்பில் இருக்கும் முதல் தொண்டர்கள் மாமன்ற உறுப்பினர்களே. மக்களின் பிரச்சினைகளை அடிக்கோடிட்டு காட்டும் உரிமை மாமன்ற உறுப்பினர்களுக்கே உண்டு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய நாங்கள் எங்கள் பகுதியில் வாழும் மக்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் என்று கூறினால் அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். ஒத்துழைத்தால் மட்டுமே மக்கள் மத்தியில் பெருநகர சென்னை மாநகராட்சி நம்பர்–1 என்கிற பெருமையை பெற முடியும். திராவிட முன்னேற்ற கழகம் என்பது

மிகப்பெரிய ஆலமரம் என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மண்டல வார்டுகுழு ஆலோசனை கூடத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தை வைக்கலாம் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, முன்னாள் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் புகைப்படம் வைக்க தேவையான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

திரு.த. விஸ்வநாதன் (குறுக்கீடு)

மண்டல வார்டுகுழு ஆலோசனை கூடத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தை வைக்கலாம் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, முன்னாள் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் புகைப்படம் வைக்க தேவையான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

மண்டல வார்டுகுழு ஆலோசனை கூடத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தை வைக்கலாம் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, முன்னாள் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் புகைப்படம் வைக்க தேவையான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. கே.பி.கே. சதீஷ்குமார் அவர்கள், வார்டு எண். 182.

திரு. கே.பி.கே. சதீஷ்குமார்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும்,

அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் காலை வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

நான் இங்கு பேச இருப்பது பொதுமக்களின் தேவைகள் மற்றும் பிரச்சனைகள் சார்ந்தவையாகும். எனவே, எனக்கு வழங்கப்பட்டுள்ள குறுகிய நேரத்தில் நான் பேச உள்ளேன். எனவே, மாமன்ற உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்.

182வது வார்டிற்குட்பட்ட திருவள்ளுவர் நகர், பர்மா நகர் ஆகிய பகுதிகளில் கிட்டத்தட்ட 500 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்ற அனைத்தையும் பெற்றுள்ளனர். ஆனால், அவர்களுக்கு அத்தியாவசிய அடிப்படை வசதிகளான சாலை, குடிநீர், மின்சாரம், மழைநீர் வடிகால்வாய் ஆகிய வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினராக பொறுப்பேற்று நான்கரை ஆண்டுகள் ஆகியும், 182வது வார்டில் சாலை வசதி போன்ற பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை. அங்கு வசிக்கும் 500 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்க முடியாது என்றால், ஏன் அவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்?

தேர்தல் நேரத்தில் வாக்குகளை சேகரிக்க மட்டும் அனைத்து கட்சியினரும் வருகிறார்கள். ஆனால், மற்ற நேரங்களில், மாநகராட்சி சார்பாக எந்த வேலைகளும் மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில், அந்த 500 குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் சேர்த்து, அவர்களின் ஓட்டுகளை பெறுவது மட்டுமே நடக்கிறது. இது ஏற்புடையதல்ல. நாம் எந்தக் கட்சியில் இருந்தாலும் நாம் மக்கள் பணி செய்ய வந்திருக்கிறோம். அந்த முறையில், 182வது வார்டிற்கான இந்தப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்.

(மாமன்ற உறுப்பினர் அவர்கள், ஆணையர் அவர்களிடம், அந்த இடத்தின் தற்போதைய நிலையை புகைப்படம் மூலம் காட்டி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு கொண்டார்)

சென்னை மாநகரில் இத்தகைய நிலைமை உள்ளது. கிராமங்களில் கூட இப்படி இருக்காது. கிட்டத்தட்ட 2000 மக்கள் எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் சாக்கடை நீரில் வாழ்ந்து வருகின்றனர்.

(14–ஆவது வார்டுகுழு தலைவர் அவர்கள் எழுந்து நின்று ஏதோ பேசுதல்)

வார்டுக்குழு கூட்டத்தில் பேசியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் தான், மாமன்ற கூட்டத்தில் பேசுகிறேன். 182வது வார்டின் பிரச்சனைகளை பற்றியே பேசுகிறேன். **(அவையில் சலசலப்பு)**

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு:

திருவள்ளுவர் நகர், பர்மா காலனி குறித்து தாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளீர்கள். இப்பகுதிகள் வருவாய் துறைக்கு சொந்தமான நிலமாக இருப்பதால், ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற பணி நடைபெற்று கொண்டிருக்கின்ற போது மாநகராட்சி சார்பாக பணிகள் மேற்கொள்ள இயலாது என்பது மாமன்ற உறுப்பினராகிய தங்களுக்கும் தெரியும். இரண்டு, மூன்று நாட்களில் இதற்கான விரிவான பதில் தங்களுக்கு வழங்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. கே.பி.கே. சதீஷ்குமார்

நன்றி. இரண்டாவது, மகாகவி பாரதியார் தெரு, கிரீசன் தெரு, செல்வ விநாயகர் கோயில் தெரு போன்ற இடங்களில் **CMDA Project Proposal** வழங்கப்பட்டும், பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. **(மாமன்ற உறுப்பினர் அவர்கள் CMDA Project Proposal Plan–ஐ ஆணையர் அவர்களின் பார்வைக்கு சமர்ப்பித்தல்)**

செல்வ விநாயகர் கோயில் தெருவில் கால்வாய் அடைப்பு ஏற்பட்டதால், சாக்கடை நீர் புதியதாக அமைக்கப்பட்ட தார் சாலைகளில் தேங்கியுள்ளது. இது **TNRDC** கட்டுப்பாட்டில் வருகிறது. அவர்கள் எந்த ஒரு பதிலையும் தெரிவிப்பதில்லை. **CMRL** பணிகளும் நடைபெறுகின்றன; அவர்களும் எந்த ஒரு பதிலையும் தெரிவிப்பதில்லை. அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் கடந்த இரண்டு,

மூன்று ஆண்டுகளாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே வார்டுகுழு தலைவர் மற்றும் அதிகாரிகள் ஆய்வு செய்த இடமாகும். பணிகள் மேற்கொள்ளாமல் இரண்டு, மூன்று ஆண்டுகளாக இழுத்தடிக்கின்றனர்.

மாண்புமிகு மேயர்

இது சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினை சார்ந்ததாகும். அதிகாரிகள் பணியினை Execute செய்வதற்கு கொடுத்து விட்டதாக தெரிவிக்கின்றனர். Flow test சரியாக இல்லாததது மற்றும் தொழில்நுட்ப பிரச்சனைகள் உள்ளது. எனவே, இது தொடர்பாக ஆணையர் அவர்களின் மூலமாக மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. கே.பி.கே. சதீஷ்குமார்

எம்.ஜி.ஆர். நகரில் கிட்டத்தட்ட 5 ஆண்டுகளாக லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெறுவதால், சரியாக குடிநீர் விநியோகம் செய்யப்படுவதில்லை. கிட்டத்தட்ட 9 ஆயிரம் லிட்டர் குடிநீர் வந்தால், 7 ஆயிரம் லிட்டர் மட்டுமே விநியோகிக்கப்படுகிறது. மீதமுள்ள குடிநீரை எங்கு கொண்டு செல்கிறார்கள் என்பது தெரியவில்லை. இதே சூழ்நிலையில், தரமணி சாலை வழியாகவும், எம்.ஜி.ஆர். சாலை வழியாகவும் குடிநீர் வருகிறது. மண்டலம் 13, மண்டலம் 14 ஆகிய இடங்களிலிருந்தும் வருகிறது. 182–வது வார்டு நெமிலியிலிருந்து கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தின் கடைசி பாயிண்ட் எம்.ஜி.ஆர். நகரம். இங்கு குடிநீர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. இதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திடம் தெரிவித்து, இதற்கான தீர்வினை காண வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மேலும், அதே பகுதியில் தினமும் கழிவுநீர் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அங்கு TNRDC மற்றும் CMRL பணிகள் நடைபெற்று வருகின்றன. வட்டார துணை ஆணையர் அவர்கள் ஆய்வு செய்து, CMRL

துறைக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். ஆனால், TNRDC மற்றும் CMRL துறையினர் அந்த அறிவுறுத்தல்களை சரியாக செயல்படுத்துவதில்லை. அவற்றிலும் ஏராளமான சிக்கல்கள் உள்ளன. **(அவையில் சலசலப்பு)**

மாண்புமிகு மேயர்

அவையில் மன்ற உறுப்பினர் அவர்கள் தேவையானவற்றை மட்டும் பேச வேண்டும். **(அவையில் சலசலப்பு)** அவையில் மன்ற உறுப்பினர் கோரிக்கைகளை எடுத்துரைத்தால் அதற்கான பதில் வழங்கப்படும். தேவையில்லாத வார்த்தைகளை மன்றத்தில் பேச கூடாது.

மதிப்பிற்குரிய துணை மேயர்

தாங்கள் 182வது வார்டு தொடர்பான பிரச்சனைகளை தெரிவிப்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், 182வது வார்டு உறுப்பினர் அவர்கள் தேவையில்லாத வார்த்தைகள் பேசுவதை தவிர்க்க வேண்டும்.

(அவையில் சலசலப்பு)

மாண்புமிகு மேயர்

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அவரவர் இருக்கையில் அமருங்கள். 182வது வார்டு பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்து மட்டும் பேசுங்கள்.

திரு. கே.பி.கே. சதீஷ்குமார்

182வது வார்டில் Metro Water Pipeline பணிகள் செந்தில் நகர், பெருந்தலைவர் காமராஜர் நகர், பாரதியார் தெரு, சீனிவாச நகர், நேரு நகர், செல்வ விநாயகர் கோயில், பெருங்குடி எஸ்டேட் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக, 2024 ஆம் ஆண்டு மெட்ரோ வாட்டர் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு மேயர்

மன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது அனைத்தும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினை சார்ந்ததாகும். இதுகுறித்து கடிதம் வழங்கினால், மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

திரு. கே.பி.கே. சதீஷ்குமார்

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன் பெருங்குடி ஏரி பணிக்காக ரூ. 10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், சுற்றுச்சுவர் எதுவும் அமைக்கப்படவில்லை. வட்டார துணை ஆணையர் அவர்கள் பலமுறை ஆய்வு மேற்கொண்டுள்ளார். மேலும், இந்த ஏரியில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் இலட்சக்கணக்கான மீன்கள் இறந்து விட்டன. இந்த ஏரி தண்ணீரை பாதுகாத்தால் தான் அங்கு குடியிருக்கும் மக்கள் இதனை பயன்படுத்த முடியும்.

மாண்புமிகு மேயர்

மன்ற உறுப்பினர் அவர்கள், மெட்ரோ வாட்டர் தொடர்பாக நான்கு கோரிக்கைகளை முன் வைத்துள்ளீர்கள். இது ஆணையர் அவர்களின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, மெட்ரோ வாட்டர் துறை அதிகாரிகளிடம் தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே.பி.கே. சதீஷ்குமார்

பெருநகர சென்னை மாநகராட்சி அன்னை சத்தியா நகர் சாலையோர பூங்காவில் பணிகள் மேற்கொள்ள 14.06.2023 அன்று 9 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், இதுவரை எந்தப் பணிகளும் துவங்கப்படவில்லை. நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் குறித்து மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும் கடிதம் வழங்குகிறேன். அதற்கான தக்க பதில் வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

அடுத்த மன்ற கூட்டத்திற்குள் அதற்கான பதில் வழங்கப்படும்.

திரு. கே.பி.கே. சதீஷ்குமார்

நன்றி. மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்து உரையினை நிறைவு செய்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. வீ. கவிகணேசன் அவர்கள், வார்டு எண். 12.

திரு. வீ. கவிகணேசன்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும், வாழ்த்துகளையும், வணக்கங்களையும் உரித்தாக்கி கொண்டு, இங்கு வீற்றிருக்கும் நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சியின் அலுவலர்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

முன்னாள் தலைவர்கள் உள்ளாட்சி அமைப்பின் சிறப்பினை நன்கு அறிவார்கள். உள்ளாட்சி அமைப்பு என்பது அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இயற்றிய இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட மூன்றடுக்கு அரசாங்கத்தின் ஓர் அங்கமாகும். மத்திய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்பு என அமைந்துள்ள இவ்வமைப்பில், மக்களோடு நேரடியாக தொடர்பு கொள்ள கூடியவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆவர். இவ்வமைப்பின் பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத சிலர், உதவி பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று பல அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறார்கள். இவை தவறானதாகும். அ.இ.அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட *அம்மா உணவகம் திட்டத்தை* நான்

வரவேற்கிறேன். ஆனால், அம்மா உணவகத்தில் ஆய்வு என்கிற பெயரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத சிலர் உள்ளே சென்று, இட்லிக்கு மாற்றாக தோசை கேட்டு இருக்கிறார்கள் என்பதனை இம்மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

நேற்று முன்தினம் ஒரு சென்னை பள்ளியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத பத்து, பதினைந்து நபர்கள் பள்ளியின் உள்ளே வந்து மாணவர்களுக்கு கேக் வழங்கியுள்ளனர் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

சென்னை பள்ளிகளை பொறுத்தவரையில், மாணவ, மாணவியர்கள் பள்ளி வளாகத்தில் இருக்கும் போது அவர்களை பாதுகாக்கும் பொறுப்பு சென்னை பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள், மேயர் ஆகியோர்களின் பொறுப்பாகும். இந்த நிலையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நல்ல நோக்கத்திற்காக பள்ளிக்குள் வந்து இனிப்புகளை வழங்க விரும்பினால், அது முறையான அனுமதி பெற்ற பின்னரே வழங்கப்பட வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத எவரும் பள்ளி வளாகத்திற்குள் வந்து, எந்தவொரு உணவையும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்க கூடாது என்பதை நான் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. வீ. கவிகணேசன்

வார்டுகுழு தலைவர் அமரும் அதிகாரப்பூர்வ மேடை (Dias) குறித்து கூறுவதாயின், இதற்கான நடைமுறை மற்றும் விதிகள் தெளிவாக இருக்க வேண்டும். வார்டுகுழு கூட்டங்களில், வார்டுகுழுவின் மாண்பையும், நாகரீகத்தையும் காக்கும் வகையில், அனைவரும் விதிகளை பின்பற்றி செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். எனவே, அதற்கான சுற்றறிக்கை அல்லது அரசிடமிருந்து அரசாணை பெறப்பட தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

வார்டுகுழு கூட்ட அதிகாரம்

வார்டுகுழு கூட்டம் நடைபெறும் போது, முழு அதிகாரமும் வார்டுகுழு தலைவருக்கே உரியது. மாமன்றத்தில் மேயர் இருப்பதை போன்று, மண்டலத்தில் வார்டுகுழு தலைவர்.

மேம்பாட்டு பணிகள் ஒப்புதல்

அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலின் அடிப்படையில், வார்டுகளில் நடைபெறவுள்ள மேம்பாட்டு பணிகள் குறித்த பொருள்கள் வார்டு குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வார்டுகுழு கூட்டத்தில் பங்கேற்கலாம். அவர்கள் தங்கள் சட்டமன்ற தொகுதியை சார்ந்த வளர்ச்சி பணிகள் பற்றிய விவரங்களை மட்டுமே பேச வேண்டும். வேறு எந்தக் கருத்தையும் அவர்கள் முன் வைக்க கூடாது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி என்பதால், அவர்களும் மேடையில் (Dias) அமரலாம்.

திரு. வீ. கவிகணேசன்

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.வே. ராஜன் அவர்கள், வார்டுகுழு தலைவர், மண்டலம் – 11 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண். 143.

திரு. வே. ராஜன்

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர், ஆணையர், இணை

ஆணையர்கள், துணை ஆணையர்கள், வட்டார துணை ஆணையர்கள், ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையம் தொடர்பான கோரிக்கைகள்

143வது வார்டில் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் **ஆரம்ப சுகாதார நிலையம்** கட்டப்பட்டுள்ளது. அந்த **ஆரம்ப சுகாதார** நிலையத்திற்கு உடனடியாக **மருத்துவர்கள், செவிலியர்கள், உதவியாளர்கள், மருந்தாளுநர்கள்** நியமிக்கப்பட வேண்டும். மேலும், இந்த ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் **செயல்படுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டு கொள்கிறேன்.**

வளசரவாக்கம் மண்டலத்திற்கு உட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 14 ANM Nurse காலி பணியிடங்கள், 144 மற்றும் 146 வார்டுகளில் 2 மருத்துவர் பணியிடங்கள், 150வது வார்டில் NUHM மூலமாக Staff Nurse 1 காலி பணியிடம், 150வது வார்டில் Health Inspector 1 காலி பணியிடம், Supporting Staff 5 காலி பணியிடங்கள் உள்ளன. இந்த அனைத்து காலி பணியிடங்கள் அனைத்தும் போர்க்கால அடிப்படையில் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

நிலம் தொடர்பான கோரிக்கை

147வது வார்டின் சர்வே எண் 297/1 மற்றும் 297/4, ருக்மணி நகர் – கிருஷ்ணா நகர் பகுதிகளை இணைக்கும் நிலம் முன்னாள் மாமன்ற உறுப்பினர்
திரு. ஜீவானந்தம் அவர்களுக்கு சொந்தமானதாகும். அவர் அந்த நிலத்தை மாநகராட்சிக்கு வழங்க இசைவு தெரிவித்துள்ளார். மாவட்ட வருவாய் அலுவலர் நிலம் மற்றும் உடைமைத்துறையில் இது தொடர்பான கோப்புகள் உள்ளன. இது தொடர்பான ஆவணங்களை தங்களிடம் அளிக்கிறேன். எனவே, இந்த இடத்தினை கள ஆய்வு செய்து, அந்த நிலத்தை கையகப்படுத்தி சாலை, பாதாள சாக்கடை, குடிநீர் வசதி, தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விளையாட்டு அரங்கம் தொடர்பான கோரிக்கை

153வது வார்டில் அமைக்கப்பட்ட **உள் விளையாட்டு அரங்கம் – பேட்மிண்டன் மைதானம்** தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சி, நபருக்கு மாதம் ரூ.600 மட்டுமே வசூலிக்க வேண்டும் என ஒப்பந்தம் செய்திருந்த போதிலும், ஒப்பந்ததாரர், நபருக்கு மாதம் ரூ.1500 வசூலித்து வருகிறார். திறந்தவெளி நிலத்தில் அமைக்கப்பட்ட இந்த விளையாட்டு அரங்கம், மக்கள் **இலவசமாக பயன்படுத்தும் வகையில்** நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டால், ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

ஆணையர்

அதிகாரப்பூர்வ கட்டணம்: ரூபாய் 1250 + GST. மாநகராட்சி தீர்மானம்: மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

கட்டண கண்காணிப்பு: ஒப்பந்ததாரர் மாநகராட்சி நிர்ணயித்த கட்டணத்தை மட்டுமே வசூலிக்க வேண்டும். ஒப்பந்ததாரர் மாநகராட்சி நிர்ணயித்த கட்டணத்தை மீற கூடாது; மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

கட்டண விகிதம் குறைக்கப்பட வேண்டும் அல்லது மாநகராட்சி மூலம் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, மக்களுக்கு இலவசமாக அளிக்க வேண்டுமென்பது மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையாகும்.

மாண்புமிகு மேயர்

கட்டண தொகை revise செய்வதற்கு ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு.வே. ராஜன்

பணியாளர்கள் பதவி உயர்வு தொடர்பான கோரிக்கை

சாலை பணியாளர்களில் சிலர் டிப்ளமோ சிவில் மற்றும் பி.இ. படித்தவர்கள் உள்ளனர். TNULB Act 2023ன்படி, இவர்கள் இளநிலை / உதவி பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என, திரு. வ. செல்வக்குமார் (வார்டு – 154) அவர்கள் கோரிக்கை ஒன்றினை முன் வைத்துள்ளார். எனவே, அவருடைய கோரிக்கையை நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

மண்டல வார்டுகுழு ஆலோசனை கூடம் மற்றும் ஏற்கனவே பிற திட்டங்களை செயல்படுத்துகையில் வைக்கப்பட்ட முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தை அகற்ற கூடாது.

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் **பஸ் ஷெல்டர்** கட்டப்பட்டு அதில் முன்னாள் முதலமைச்சர் புகைப்படம் வைக்கப்பட்டுள்ளது. அவற்றை அகற்றுமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது. **விதிகளின்படி, இந்த புகைப்படங்களை அகற்ற கூடாது.** புதிய திட்டப் பணிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தை வைக்கலாம்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஏற்கனவே பிற திட்டங்களை செயல்படுத்துகையில் வைக்கப்பட்ட **முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தை அகற்ற கூடாது.** புதிய திட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தை வைக்கலாம் என மாண்புமிகு மேயர் அவர்கள் தெரிவித்ததின் அடிப்படையில், இந்தப் பிரச்சினைக்கு **முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது.**

திரு. வே. ராஜன்

Limited Tender:

கட்டிட கட்டுமான பணிகளை ரூ.50 இலட்சம் வரையிலான மதிப்பீட்டில் Limited Tender முறையில் மேற்கொள்ளலாம் என்று சட்டத்தின் Class – 33ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது Limited Tender நிறுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேயர்

இது மாநில அளவிலான முடிவு. அவசரமும் அவசியமும் கருதி, ரூ.50 இலட்சம் வரையிலான பணிகளை **Limited Tender** முறையில் மேற்கொள்ளலாம் என்று விதி அனுமதிக்கிறது. இதுகுறித்து **Clarification** அனுப்பப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

திரு. வே. ராஜன்

சொத்து வரி மதிப்பீடு:

Brigade குடியிருப்பில் 1840 வீடுகள் உள்ளன. அவர்களுடைய விற்பனை பத்திரத்தில் **1657 சதுர அடிகள்** என குறிப்பிடப்பட்டிருந்தாலும், **2103 சதுர அடிகள்** என சொத்து வரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தவறான சொத்து வரி மதிப்பீடு காரணமாக, ரூ.30 இலட்சம் கூடுதல் வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு மேயர்

மீண்டும் ஆய்வு செய்து, அளவீடுகள் சரிபார்க்கப்படும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

Plinth Area மற்றும் **படிக்கட்டுகள்** சேர்த்திருக்கலாம்.

தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)

Under Assessed buildings – GIS Data அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கலாம்.

திரு. வே. ராஜன்

பணி இட மாற்றம் செய்யப்பட்டு 7–8 மாதங்களுக்குள் **உதவி பொறியாளர்கள்** மீண்டும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களே தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்பட்டால், தற்போது நடைபெற்று கொண்டிருக்கும் பணிகளை செய்வது எளிதாக இருக்கும்.

மாண்புமிகு மேயர்

மழைக்காலங்களில் பணி இட மாற்றம் செய்வதால், பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படும். குற்றச்சாட்டுகள் இருந்தால் மாற்றம் ஏற்றுக்கொள்ளத்தக்கது.

திரு. வே. ராஜன்

மழைக்காலங்களுக்கு பிறகு பணி இட மாற்றம் செய்தால் நலமாக இருக்கும்.

Health & Wellness Center – AC வசதி

முதல் phaseல் **AC** பொருத்தப்பட்டுள்ளது. இரண்டாம் phaseல் பொருத்தப்படவில்லை. எனவே, இரண்டாம் phaseலும் **AC வசதி** ஏற்படுத்தப்பட வேண்டும்.

சென்னை பள்ளி பணியாளர்கள் – ஊதியம்

சென்னை பள்ளியில் கடந்த ஆண்டு **12 மாத ஊதியம்** தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு ஒரு மாதம்

குறைக்கப்பட்டுள்ளது. எனவே, **12 மாத ஊதியம்** தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

வருகை பதிவேட்டின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வே. ராஜன்

Desilting பணிகள் – நிதி ஒதுக்கீடு

ஒவ்வொரு வார்டுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.10 இலட்சம் நிதி போதுமானதாக இல்லை; கூடுதல் நிதி வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படும். பணிகள் மூன்று கட்டங்களாக நடைபெறும்.

திரு. வே. ராஜன்

நிதிநிலை அறிக்கை – திட்டங்கள்

பிப்ரவரி மாதம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் நடைமுறைக்கு வர வேண்டும்.

மாண்புமிகு மேயர்

இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வே. ராஜன்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி ரூ.60 இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

2022 முதல் தற்போது வரை மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் உயர்த்துவதற்கான வாய்ப்பு இல்லை. இருந்தாலும், தங்களது கோரிக்கை அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லப்படும்.

திரு. வே. ராஜன்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு மேயர்

தற்போது இந்த நிதிநியினை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்ளலாம்.

திரு. வே. ராஜன்

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர் மற்றும் அதிகாரிகளுக்கு நன்றி. கோரிக்கைகளை கவனமாக கேட்டு உடனுக்குடன் பதில் அளித்ததற்கும், செயல்படுத்த உத்தரவிட்டதற்கும் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

திருமதி ரா. சரிதா, வார்டுகுழு தலைவர், மண்டலம் - 6 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண். 69. (குறுக்கீடு)

அனைவருக்கும் வணக்கம். கொளத்தூர் தொகுதியில் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்ட கட்டிடங்களில் முன்னாள் முதலமைச்சர் அவரின் புகைப்படங்கள் திரைபோட்டு மூடப்பட்டுள்ளன. அவற்றை அகற்ற வேண்டும்.

பெரியார் நகர் 70 அடி சாலை மற்றும் சாலையோர பூங்காவில் வைக்கப்பட்ட புகைப்படங்கள் மூடப்பட்டுள்ளன; அவற்றை திறக்க வேண்டும். பில் claim செய்வதற்காக இவை மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பேருந்து நிழற்குடைகளில் முன்னாள் முதலமைச்சர் புகைப்படம் மறைக்கப்பட்டு, கட்சி சார்ந்த பேனர்கள் போர்த்தப்பட்டுள்ளன; அவற்றை அகற்ற வேண்டும்.

மாண்புமிகு மேயர்

அரசு சார்ந்த திட்டங்களை மக்கள் அறிந்து கொள்வதற்காக பேருந்து நிழற்குடைகளில் அவை குறிப்பிடப்பட்டுள்ளன; கட்சி சார்ந்த புகைப்படங்கள்/ பேனர்கள் இவற்றில் வைக்க கூடாது. ஏற்கனவே பணி முடிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு அவை நடைமுறையில் உள்ள திட்டங்களில் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படம் வைக்கலாம்; புதிய திட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படம் வைக்கலாம். இந்த அறிவுரையினை அனைத்து அதிகாரிகளும் பின்பற்றுமாறு கேட்டு கொள்கிறேன்.
பில் claim செய்வதற்கும் புகைப்படம் மூடுவதற்கும் சம்பந்தம் இல்லை. மக்கள் / மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை அதிகாரிகள் சமநிலையுடன் கருதி உரிய முறையில் செயல்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

வார்டுகுழு தலைவர் அவர்களின் உணர்வை புரிந்து கொள்ள முடிகிறது. ஏற்கனவே பணி முடிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு அவை நடைமுறையில் உள்ள திட்டங்களில் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படம் வைக்கலாம் என மாண்புமிகு மேயர் அவர்கள் தெரிவித்துள்ளதால், மண்டல அலுவலர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.

திருமதி ரா. சரிதா

எந்த நிகழ்ச்சி முடிவுற்றாலும் பேனர்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும். அபாயகரமான நிலையில் உள்ள விளம்பர பலகைகள்

அகற்றப்பட வேண்டும். ஆய்வு மேற்கொள்ளும் பொழுது அதிகாரிகள் எங்களுடன் வர வேண்டும். குடிநீர் வாரிய பிரச்சினைகள் குறித்து தொலைபேசியில் தொடர்பு கொண்டால், அத்துறையினர் அழைப்பை எடுத்து பதில் சொல்வதில்லை.

மாண்புமிகு மேயர்

போஸ்டர், பேனர் அகற்றுதல் மாநகராட்சியின் பொறுப்பு. ஒருநாள் நிகழ்விற்காக அனுமதி பெற்று வைக்கப்படும் பேனர்கள், நிகழ்ச்சி முடிவுற்றவுடன் அகற்றப்பட வேண்டும். பள்ளி வளாகம், மருத்துவமனை பகுதிகளில் கட்அவுட்கள் அதிகமாக உள்ளன; இது பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். மண்டல அலுவலர்கள் அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும். வட்டார துணை ஆணையர்கள், மண்டல அலுவலர்கள் பேனர்கள், கட்அவுட்கள், விளம்பர பலகைகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளனவா என ஆய்வு செய்ய வேண்டும்.

சென்னை மாநகரம் மிகப் பெரிய மாநகரம். கோடிக்கணக்கான மக்கள் வாழும் இம்மாநகரத்தில், அதிகாரிகள் மக்கள் கோரிக்கைகளை சமநிலையுடன் கருதி உரிய முறையில் செயல்பட வேண்டும். மாமன்ற உறுப்பினர்கள் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது அதிகாரிகள் கண்டிப்பாக அவர்களுடன் செல்ல வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

எந்தவிதமான **கட்சி பாகுபாடின்றி**, நிகழ்ச்சி முடிவுற்றவுடன் **சுவரொட்டிகள், பேனர்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்** என மண்டல அலுவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். தொலைபேசி அழைப்பை எடுத்து அதிகாரிகள் பதில் அளிக்காத பட்சத்தில், ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரலாம்.

திருமதி உமா ஆனந்தன் (குறுக்கீடு)

மாண்புமிகு மேயர் அவர்களே, மூன்று மாதங்களாக வார்டுகுழு கூட்டம் நடைபெறவில்லை. இன்னும் ஆறு மாதங்களில் மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி பயன்படுத்தப்பட

வேண்டுமென்பதை மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

ஆணையர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. எந்தச் சூழ்நிலையிலும் மேம்பாட்டு பணிகளில் பொதுமக்களுக்கு தாமதம் அல்லது தொய்வு ஏற்பட கூடாது. இது போன்று மீண்டும் நடைபெறாது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

திருமதி உமா ஆனந்தன்

நமது இந்திய நாட்டின் பிரதமர் மாண்புமிகு திரு. நரேந்திர மோடி அவர்கள், பன்னிரண்டு ஆண்டுகள் நீண்ட காலமாக தொடர்ந்து பாரதத்தின் பிரதமராக பதவி வகித்து வருவதால், பாரதிய ஜனதா கட்சி சார்பாக வாழ்த்து தெரிவித்து, இந்த மன்றத்தில் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி தருமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

நீங்கள் கூறிய வாழ்த்து பதிவாகியுள்ளது.

மாண்புமிகு மேயர்

இரண்டாவது முறையாக நீங்கள் வாழ்த்தினை பதிவு செய்துள்ளீர்கள்.
(அவையில் சலசலப்பு)

மாண்புமிகு மேயர்

அமைதி, அமைதி.

திரு.எம். கிருஷ்ணமூர்த்தி, வார்டுகுழு தலைவர், மண்டலம்–10 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.142. **(குறுக்கீடு)**

கடந்த வார்டுகுழு கூட்டத்தின் பொழுது முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படம் கூட்ட அரங்கிலிருந்து அகற்றப்பட்டது. 2006–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின்படி, முன்னாள் முதலமைச்சர் புகைப்படம் வைக்க தடையில்லை என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ரா. துரைராஜ் அவர்கள், வார்டு எண். 172.

திரு. ரா. துரைராஜ்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகை அன்பர்களே, அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தினை தெரிவித்து கொண்டு, சுதந்திர இந்தியாவில் மக்கள் நல திட்டங்களை அதிகப்படியாக தந்து செயலாற்றிய அரசு என்று சொன்னால் அது நமது திராவிட முன்னேற்ற கழக அரசு தான் என்பதை இன்றைக்கு தமிழ்நாட்டையும் தாண்டி இந்திய துணை கண்டம் முழுவதும் ஏற்று கொள்ள கூடிய அளவிற்கு பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டிற்கு தந்துள்ளது.

நம்முடைய சென்னை மாநகரின் வளர்ச்சிக்காக, தமிழ்நாட்டின் உயிர் மூச்சாக இதயமாக இருக்க கூடிய சென்னை தலைநகரை சிங்கப்பூருக்கு இணையாக உயர்த்த வேண்டுமென்று சொல்லி, எப்பொழுது எல்லாம் திராவிட முன்னேற்ற கழக அரசு ஆட்சி பொறுப்பிற்கு வருகிறதோ அப்போதெல்லாம் இதனுடைய அடிப்படை கட்டமைப்புகளை உயர்த்துவதை கவனத்தில் கொண்டு, இந்தியாவிற்கே முன்னுதாரணமாக பல திட்டங்களை தந்திருக்கிறது.

குறிப்பாக, மழைநீர் பாதிப்பை தடுக்கின்ற வகையில் எண்ணற்ற திட்டங்கள். இந்தத் திட்டங்களின் அடிப்படையில் பல்வேறு பணிகள் நடைபெற்று கொண்டிருந்த சூழ்நிலையில், தேர்தல் நடத்தை விதிமுறை அறிவிப்பின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது போன்ற மக்கள் நலன் சார்ந்த பணிகளை விரைவுபடுத்த வேண்டும்.

13வது மண்டலத்தில் வேளச்சேரி சாலையில் ரூ.310 கோடி ரூபாய் செலவில் வேளச்சேரி – கிண்டி Flyover (பாலம்) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அடிக்கல் நாட்டப்பட்டு கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டம் தேர்தல் நடத்தை விதிமுறை அறிவிப்பின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இதுவரை பணி துவங்கப்படவில்லை. துவங்கப்படாததற்கான காரணத்தை தாங்கள் தெரிவிக்க வேண்டும். அந்தப் பணியின் நிலை என்ன என்பதை தாங்கள் இங்கே தெரிவிக்க வேண்டும்.

172வது வார்டு ரேஸ் கோர்ஸ் சாலை Inner Ring சாலையில் ஒரு முழுமையான சாலை திட்டம் இரண்டு சிப்பங்களாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. ரேஸ் கோர்ஸ் சாலை அரசு நிலம் என்று கையகப்படுத்தப்பட்டு அதை 7 மீட்டர் அளவிற்கு விரிவாக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி முடிவு பெற்ற நிலையில் தேர்தல் நடத்தை விதிமுறை அமலுக்கு வந்ததற்கு பிறகு, பணி ஆணை வழங்கப்படாத காரணத்தினால் அந்தப் பணி நடைபெறாமல் உள்ளது. எனவே, விரைவில் பணியாணை வழங்கப்பட்டு முழுமையான சாலை திட்டத்தை முழுமை பெற செய்ய வேண்டும்.

அடுத்து, அதன் தொடர்ச்சியாக ரேஸ் கோர்ஸ் பிரதான வாயிலிலிருந்து சக்கரபாணி சாலை, மடுவன்கரை பகுதியில் கத்திபாராவிற்கு செல்லும் மேம்பாலம் வரையில் கிட்டத்தட்ட 600 மீட்டர் II–Phase ல் அந்தப் பணி தரப்பட இருந்தது. அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்படாத காரணத்தினால், அந்தத் திட்டம் முழுமை பெறாமல் இருக்கிறது. I–Phase, II–Phase என்று இரண்டையும் செய்தால் தான் கிண்டி, வேளச்சேரியை இணைக்க கூடிய அந்தப் பாலத்தில் போக்குவரத்து நெரிசல் குறைந்து மக்கள் பெருமளவில் பயனடைய கூடிய அந்தப் பணியை மாண்புமிகு மேயர் அவர்களும், ஆணையர்

அவர்களும் கண்காணித்து முழுமையாக நிறைவேற்றி தந்தால் தான் இந்த முழுமையான சாலை திட்டம் முழுமை பெறும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

இப்பகுதி எனது வசிப்பிட பகுதி என்பதனால், ஆணையர் அவர்கள் இதில் சிறப்பான கவனம் செலுத்தி, அந்தத் திட்டத்தை விரைவாக ஆரம்பித்து நிறைவு செய்து தருமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

திரு.ரா. துரைராஜ்

மேலும், கிண்டி இரயில்வே நிலையத்திலிருந்து மக்கள் பயணித்து எதிரில் உள்ள பேருந்து நிலையத்திற்கு செல்வதற்கான தானியங்கி படிக்கட்டுகள் அமைக்கப்படுவதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆனால், இன்று வரை பணி தொடங்கப்படவில்லை. எனவே, இந்தப் பணியையும் விரைந்து துவக்கி முடித்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

அதே போன்று, கடந்த 4 மாத காலத்தில் 13வது மண்டலத்தில் ஏராளமான கோப்புகள், மக்களுடைய அடிப்படை தேவைகளை நிறைவேற்ற வேண்டிய 40க்கும் மேற்பட்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் நியமனம் செய்ததற்கு பிறகும், பணியாணை வழங்கப்படாத காரணம் என்ன என்று தெரிய வேண்டும். அதே போன்று, ஏராளமான பணிகளுக்கு Agreement போடப்படாமல் இருக்கிறது.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஆணையர் அவர்களின் கவனத்திற்கு: Agreementல் கையொப்பம் இடப்படாத காரணத்தினால், 169வது வார்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருந்தும் பணி தொடங்கப்படவில்லை. ஆகையால், உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுத்து, பணிகள் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என அன்புடன் கேட்டு கொள்கிறேன். இதனை சார்ந்து, ஏற்கனவே ஆணையர் மற்றும் வட்டார துணை

ஆணையர் ஆகியோர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளேன் என்பதை இங்கு தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

மண்டலம் 13ல் மட்டுமல்லாது மொத்தமாகவே பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதிலும் Agreement கையொப்பம் ஆவதில் delay ஆகிறது. பணியாணை வழங்கப்படாமல் உள்ளது. இதனை இணை ஆணையர் (பணிகள்) அவர்களும், தெற்கு வட்டார துணை ஆணையர்களும் கவனத்தில் எடுத்து ஏற்கனவே கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், பணியாணை வழங்கப்படாமலும், Agreement Sign ஆகாமலும் உள்ளது குறித்து ஆய்வு செய்து, உடன் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். மண்டல வாரியாக அனைத்து வார்டுகளிலும் இந்த Agreement காரணமாக காலதாமதம் ஆகும் பணிகள் குறித்து பட்டியலிடப்பட்டு அடுத்த மன்றக் கூட்டத்திற்குள்ளாக சரி செய்யப்பட கேட்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திரு. ரா. துரைராஜ்

அதே போல ஒப்பந்ததாரர்கள் தான் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிகளை முடிக்க பேருதவியாக இருக்க கூடியவர்கள். இவ்வாறு அவர்களுக்கு பணிகளை முடித்த பிறகும் அவர்கள் பில் தொகைக்கான பணப் பட்டுவாடா வழங்கப்படாமல் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. கடந்த 4 மாதங்களில் ஒரு ஒப்பந்ததாரருக்கு கூட பில் தொகை வழங்கப்படவில்லை. இதனால் பல கோடி ரூபாய் தேக்கத்தின் காரணமாக ஒப்பந்ததாரர்கள் சொல்ல முடியாத துயர் அடைந்துள்ளனர். இதற்கு உடன் தீர்வு காணப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

Bill Clearance தொடர்பாக ஏற்கனவே ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. ஆணையர் அவர்கள் இதற்கான தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

திரு. ரா. துரைராஜ்

நிதி பற்றாக்குறையினால் பில்கள் தேங்குவது என்பது வேறு. ஆனால், பில்களில் கையொப்பமிட்டு தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டுமல்லவா? அதற்கான தொகை நிதானமாக கிடைக்கும் என்று நம்பலாம். ஆனால், மண்டலங்களிலேயே அவற்றை அனுப்பாமல் நிறுத்தி வைப்பதை குறித்து தான் நான் கேள்வி எழுப்புகிறேன். மண்டல அலுவலகங்களில் எந்த ஒரு பில்லும் தேங்க கூடாது. ஒப்பந்ததாரர் பணியை முடித்த உடனேயே, பில் அனுப்பப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

என்ன காரணத்தினால் பில்கள் அனுப்பப்படாமல் உள்ளன என்பதை வட்டார துணை ஆணையர்கள் கண்டறிந்து சரி செய்ய வேண்டும்.

திரு. ரா. துரைராஜ்

ஆணையர் அவர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டு கொள்கிறேன். இந்த அவையின் மாண்பையும், மரபையும் கடைபிடிக்காமல் சிலர் நடந்து கொண்டாலுங்கூட, நமது மாநகராட்சி மன்றம் மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதில் மாற்று கருத்துக்கு இடம் இல்லை.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

Race Course சாலை பணி குறித்து தெரிவித்தீர்கள். மாநகராட்சி சார்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

அதே போன்று, மேம்பாலம் பணி தொடர்பாக ரூ.300 கோடிக்கும் மேலாக நிதி தேவைப்படுகிறது. அதற்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய அரசிடம் கேட்க உள்ளோம். அதற்கான நிதி ஒதுக்கீடு செய்த பிறகு அந்தப் பணிகள் துவங்கப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

திரு. ரா. துரைராஜ்

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தான் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஆணையர் அவர்கள் இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்து சென்று, சிறப்பு நிதி பெற்று அந்தத் திட்டத்தினை நிறைவேற்றி தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திரு. ரா. துரைராஜ்

நன்றி.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்சுருதி அவர்கள், வார்டு எண் 99.

திரு. பரிதி இளம்சுருதி

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், சக

மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

164–ஆவது வார்டு சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி ஜே. தேவி அவர்களின் கணவர் இயற்கை எய்தினார். அதற்காக எனது இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

99 ஆவது வார்டில் சாலை பணியாளர் திருமதி மாலா அவர்கள் இயற்கை எய்தினார். அதற்காக எனது இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99–வது வார்டிற்குட்பட்ட ஓட்டேரி மயான வளாகத்தில் சட்டவிரோத செயல்கள் நடைபெற்று வருகின்றன. தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மயான வளாக நுழைவாயில் மற்றும் உட்பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும். சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில், சிலர் சுவரொட்டிகள் ஒட்டுவதால் பணிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே, இந்தப் பணிகள் முடிவடைய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாஸ்திரி நகர் மற்றும் புல்லாபுரம் பகுதிகளில் 3 பொதுக்கழிப்பிடங்கள் இடிக்கப்பட்டு, பணிகள் துவங்கப்படவில்லை; தனியார் பராமரிப்பு முறையில் விடப்பட்ட காரணத்தினால் அவர்கள் பணிகளை செய்வதில்லை. இதற்கான தகுந்த பதில் எனக்கு அளிக்க வேண்டும்.

திடீர் நகர் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, பயோ மெட்ரிக் கணக்கெடுப்பு முடிவடைந்துள்ளது. பணிகள் எப்போது துவங்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

சாஸ்திரி நகர் பகுதியில் 12 தெருக்களில் 8 தெருக்களுக்கு இலவச குடிநீர் வழங்கப்பட்டு, 4 தெருக்களுக்கு இலவச குடிநீர் வழங்கப்படவில்லை; தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

சேத்துப்பட்டு பசுமை பூங்கா மேம்படுத்தப்பட்டு திறப்புவிழா கல்வெட்டில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், வார்டுகுழு தலைவர் ஆகியோர்களின் பெயர் இடம் பெற்றுள்ளன. ஆனால், மாமன்ற உறுப்பினரின் பெயர்

இடம் பெறவில்லை. எனவே, மாமன்ற உறுப்பினரின் பெயர் இடம் பெற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Election Model Code of Conduct அமல்படுத்தப்பட்டதற்கு பிறகு, கல்வெட்டுகளில் ஒட்டப்பட்ட பேப்பர்கள் அகற்றப்படாமல் உள்ளன; சென்னை மாநகரம் முழுவதும் Mass Cleaning செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியபடி, இது தொடர்பாக வட்டார துணை ஆணையர், மண்டல அலுவலர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திரு. பரிதி இளம்சுருதி

நியாயவிலை கடை, உடற்பயிற்சி கூடம், பள்ளிகூடம் ஆகியவை மேம்படுத்தப்பட்டன. 2024 நாடாளுமன்ற தேர்தலின் போது தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்ட நிலையில், கல்வெட்டுகள் பேப்பர் ஒட்டி மறைக்கப்பட்டன. அவை இதுவரை அகற்றப்படவில்லை. பூங்கா, பேருந்து நிழற்குடைகள், சாலைகள் அனைத்திலும் இதே நிலைமை தான் உள்ளன. தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

மயான வளாகத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

சாஸ்திரி நகர், புல்லாபுரம் பொதுக்கழிப்பிட பணிகள் விரைவில் பணி துவக்கப்படுவதற்கு வட்டார துணை ஆணையர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திடீர் நகர் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானம் நில வகைப்பாடு மாற்றம் காரணமாக தாமதமானது; அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால் விரைவில் பணி துவங்கப்படும்.

தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்ட நிலையில், கல்வெட்டுகளில் பேப்பர்கள் ஒட்டப்பட்டன. இவற்றை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. பரிதி இளம்சுருதி

சுற்றுச்சுவர் அமைக்கும் பணி ஒரு பகுதி ஆக்கிரமிப்பால் நிறுத்தப்பட்டுள்ளது; மாநகராட்சி ஆக்கிரமிப்பை அகற்றி அந்தப் பணியினை நிறைவு செய்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

மத்திய வட்டார துணை ஆணையர் நேரில் ஆய்வு செய்து, ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு மாற்று ஏற்பாடு செய்து, பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திரு. பரிதி இளம்சுருதி

நன்றி.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி அஸ்வினி கருணா அவர்கள், வார்டு எண். 196.

திருமதி அஸ்வினி கருணா

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், ஊடக துறையினை சார்ந்த நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் எனது இனிய காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

196வது வார்டில் அமைந்துள்ள 30 படுக்கைகள் கொண்ட நகர்ப்புற சமுதாய சுகாதார மையத்தில் (Urban Community Health Centre – UCHC) மருத்துவர்கள் முறையாக சிகிச்சை அளிப்பதில்லை. பெரும்பாலும் மருத்துவர்கள் மருத்துவமனையில் இல்லாமல் இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். சமீபத்தில் ஒரு கர்ப்பிணி தாயின் கருவில் சிசு உயிரிழந்த சம்பவமும் நிகழ்ந்துள்ளது. மருத்துவர்கள் மருத்துவமனையில் இருப்பதாக அவர்கள் கூறினாலும், மக்கள் அதற்கு மாறாக கூறுகின்றனர். இதன் உண்மை நிலையை அறிய

மருத்துவமனையில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்படவில்லை. பாதுகாப்பு காவலர் இல்லை. மருத்துவமனைக்கு முன்புறம் ஆம்புலன்ஸ் நிறுத்தப்படுவதும் இல்லை. இதனால் மக்கள் நேரடியாக மாமன்ற உறுப்பினர்களிடம் கேள்வி கேட்கின்றனர். (இதுகுறித்த புகைப்படத்தை மாண்புமிகு மேயர் அவர்களிடம் சமர்ப்பித்தல்.)

மாண்புமிகு மேயர்

இது தொடர்பாக விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.
ஒவ்வொரு தளத்திலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும். தெற்கு வட்டார துணை ஆணையர் அவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

திருமதி அஸ்வினி கருணா

வார்டு 196–ல், 9 மாதங்களுக்கு முன் சாலை பணிக்கான ஒப்பந்தப்புள்ளி, ஒப்பந்ததாரருக்கு நேர் செய்யப்பட்டும் இதுவரை எந்தப் பணியும் தொடங்கப்படவில்லை.

தேர்தலுக்கு முன் தோண்டப்பட்ட சாலைகள் அப்படியே உள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. எனவே, இந்தச் சாலை பணிகள் விரைந்து தொடங்கப்பட்டு, முடித்து தர வேண்டும்.

மாண்புமிகு மேயர்

ஒவ்வொரு நிதியாண்டிலும் சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்தலுக்கு முன்பே பல சாலைகள் மில்லிங் செய்யப்பட்டு, சாலை அமைக்க தயாரான சூழ்நிலையில் இருந்தது. ஆனால், வளைகுடா நாடுகளில் ஏற்பட்ட போர் காரணமாக தார் விலை அதிகரித்ததால், ஒப்பந்ததாரர்கள் பணி ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்திலிருந்த விலைக்கும், தற்போதைய விலைக்கும் இடையே கடும்

வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பிரச்சனை உருவாகியுள்ளது. விரைவில் இதற்கான தீர்வு காணப்படும்.

திருமதி அஸ்வினி கருணா

மயானங்களை renovation செய்து பராமரிக்க வேண்டிய ஒப்பந்ததாரர் திரு. செல்வகுமார் ராஜா, "மாநகராட்சி ரூ.5.00 கோடி வழங்கினால் தான் பணிகளை தொடங்குவேன்" என கூறுகிறார். இதுகுறித்து மண்டல அலுவலரிடம் தெரிவித்தும் பணிகள் தொடங்கப்படவில்லை. இத்தகைய ஒப்பந்ததாரர்களை கருப்பு பட்டியலில் சேர்த்து, வேறு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், வார்டு பராமரிப்பு நிதி வழங்கப்படவில்லை. சிறு, சிறு பழுதுபார்ப்பு பணிகளை செய்வதில் காலதாமதமாகின்றன. எனவே, வார்டு பராமரிப்பு நிதி வழங்கப்பட வேண்டும்.

மாமன்ற உறுப்பினர்களின் பதவி காலம் முடிவடைய இன்னும் 8 மாதமே காலமே உள்ள நிலையில், மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கு பணியாணைகள் விரைவில் வழங்கப்பட வேண்டும்.

சென்னை பள்ளிகளில் மாமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை தவிர்த்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத நபர்கள் உள்ளே வருகிறார்கள். இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

இதுகுறித்து ஏற்கனவே ஒரு மாமன்ற உறுப்பினர் பேசுகையில் நான் தெளிவுபடுத்தியிருந்தேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களுக்கு பள்ளிகளின் உள் செல்வதற்கான முழு அதிகாரம் உண்டு. ஆண்டு விழா, விளையாட்டு விழா போன்ற நிகழ்வுகளில் பங்கேற்கலாம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் அதிகாரப்பூர்வ உதவியாளர் ஆகியோர் செல்லலாம். ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத பத்து, இருபது நபர்கள் பள்ளியின் உள் செல்வது முற்றிலும் கூடாது.

திருமதி அஸ்வினி கருணா

சென்னை பள்ளிகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத பலர் வருகை புரிந்துள்ளனர். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத நபர்கள் **பள்ளிகளில் அனுமதிக்கப்பட கூடாது.** வெளிநபர்கள் **பள்ளி வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட கூடாது.** உணவு பொருட்கள் **வழங்க கூடாது.** ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை தவிர வேறு யாரும் பள்ளிக்குள் செல்ல அனுமதிக்கப்பட கூடாது. விதிமுறைகளை மீறினால் தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி அஸ்வினி கருணா

நன்றி.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. மு சரவணன் அவர்கள், வார்டு எண்.72.

திரு. மு. சரவணன்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் எனது வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

வார்டு 72–ல் நரசிம்மன் நகர் பகுதியில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சுமார் 300 குடும்பங்கள் கடந்த 70 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். மாநகராட்சிக்கு சொந்தமான நிலமாக இருப்பதால், இதுவரை **விற்பனை பத்திரம் (Sale Deed)** வழங்கப்படவில்லை. இதற்கான அரசாணை எண் 730 / 14.04.1976 வெளியிடப்பட்டுள்ளது. அந்த அரசாணையின் அடிப்படையில், நரசிம்மன்

நகர் பகுதி GO No. 2160/2019–1976ன்படி விற்பனை பத்திரம் வழங்கலாம் என்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்றத்தில் பேசிய போது, மாண்புமிகு மேயர் அவர்களும், வட்டார துணை ஆணையர் அவர்களும் 72வது வார்டிற்கு வருகை புரிந்து, அந்தப் பகுதிகளை ஆய்வு செய்து, அனைத்து ஆவணங்களையும் பெற்றுள்ளனர். மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமைதுறை) அவர்களிடமிருந்து சம்பந்தப்பட்ட கோப்பு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை அந்தப் பகுதி மக்களுக்கு விற்பனை பத்திரம் வழங்கப்படவில்லை.

இங்கு வசிக்கும் மக்கள் **ஆதி ஆந்திரா மக்கள்** ஆவர். விற்பனை பத்திரம் வழங்கப்பட்டால், சென்னை மாநகராட்சி அந்தக் குடும்பங்களுக்கு நன்மை செய்ததாக இருக்கும். இது போன்று மாநகராட்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பகுதிகளில் இதே போன்ற நிலை உள்ளது.

மாண்புமிகு மேயர்

தாங்கள் குறிப்பிடுகின்ற இடத்தில் எத்தனை குடும்பங்கள் வசித்து வருகிறார்கள்?

திரு. மு. சரவணன்

நரசிம்மன் நகர் பகுதியில் 300–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அதற்கான அனைத்து ஆவணங்களும் வட்டார துணை ஆணையர் அவர்களால் பெறப்பட்டு, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இங்கு வசித்து வருவோர்களின் ஆதார் அட்டை, சொத்துவரி அட்டை, குடிநீர் வாரிய அட்டை ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை, மக்கள் திராவிட மாடல் ஆட்சியில் விற்பனை பத்திரம் வழங்கப்படும் என்கிற நம்பிக்கையில் இருந்தனர். தற்போது, மாமன்ற உறுப்பினராகிய நான் பெற்று தருவேன் என்கிற நம்பிக்கையுடன் உள்ளனர். எனவே, இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

அடுத்ததாக, பேசின் பிரிட்ஜ், ஜீவா ரயில் நிலையத்தில் இரயில்வே பாதையை மக்கள் கடப்பது குறித்து மன்றத்தில் முன்பே பேசியிருந்தேன். முன்னாள் துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு பாலங்கள் துறை மூலமாக இரயில்வே துறைக்கு கடிதம் அனுப்பினார். இதன் கடித எண்.D.C.No–B4/0927/2024, Dated 03.10.2024.

இதற்காக நானும், திரு. வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் அதிகாரிகளை சந்தித்தோம். இதற்கான நிதியினை இரயில்வே துறை ஒதுக்கீடு செய்துள்ளது. பாலங்கள் துறை சார்ந்த அதிகாரிகள், ரயில்வே துறை மூலமாகவோ அல்லது பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவோ இந்தப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த இரயில்வே பாதையை கடப்பது Trespass என்று கூறி இந்த இரயில்வே பாதை அடைக்கப்பட்டுள்ளது. மக்கள் அந்தப் பாதையை கடந்து ஸ்டான்லி மருத்துவமனைக்கும், மாணவர்கள் பள்ளிக்கும் செல்ல 3 அல்லது 4 கிலோ மீட்டர் சுற்றி செல்ல வேண்டியுள்ளது. இந்த இரயில்வே பாதையை கடக்கும் போது தினமும் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, அந்தப் பகுதியில் மேம்பாலம் அமைத்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

தற்போதைய எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் துணை முதலமைச்சராக இருந்த திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வார்டு 72–ல் ஒரு பெரிய விளையாட்டு திடலை அமைத்து வழங்கியுள்ளார். அந்த விளையாட்டு திடல் அமைந்துள்ள பகுதி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடம். அங்கு பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலை இருந்தது. கடந்த 15 ஆண்டுகளாக சிலை இல்லாமல் அதன் பீடம் மட்டும் அப்படியே உள்ளது. இது குறித்து பலமுறை மன்றத்தில் கேள்வி நேரத்தில் பேசியிருந்தேன். அந்தத் தொகுதியில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலை எதுவும் இல்லை. மாண்புமிகு மேயர் அவர்களும், ஆணையர் அவர்களும் மண்டல அதிகாரிகளிடம் தெரிவித்த போது, சிலை அமைப்பதாக கூறியிருந்தனர். ஆனால், இதுவரை சிலை அமைக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

வார்டு 72ன் வார்டு அலுவலகம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதற்கான கட்டிட இடிப்பு அனுமதி (Demolition Order) வழங்கப்பட்டு, அம்பேத்கர் நகர் மெயின் ரோட்டில் புதிய வார்டு அலுவலகம் அமைப்பதற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பணிகள் இதுவரை துவக்கப்படவில்லை. விரைந்து பணிகள் நிறைவேற்றப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

வ.உ.சி. நகர் பகுதியில் ஒரு சமுதாய நலக் கூடம் உள்ளது. மாண்புமிகு மேயர் அவர்களின் சிறப்பு மேம்பாட்டு நிதி மற்றும் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் அந்த இடத்தில் மாபெரும் மண்டபம் கட்டி கொடுப்பதாக உறுதியளித்திருந்தனர். ஆனால், தேர்தல் நடத்தை விதிமுறை அமலுக்கு வந்த காரணத்தினால் அந்தப் பணிகள் நடைபெறவில்லை.

திரு.வி.க.நகர் தொகுதியில் டாக்டர் அம்பேத்கர் சமுதாய நல கூடம், கொளத்தூர் தொகுதியில் அண்ணா திருமண மண்டபம் போன்ற மண்டபங்களின் மூலம் ஏழை எளிய மக்கள் பயனடைந்ததை நாம் பார்த்திருக்கிறோம். அதே போல், 72வது வார்டில் 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட சமுதாய நல கூடம் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனை சீர் செய்து, புதிய மண்டபம் அமைத்து கொடுத்தால், ஏழை எளிய மக்கள் வாழும் வார்டு 71, 72 மற்றும் 73 பகுதிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

வார்டு 72ல் மிகப்பெரிய மாட்டிறைச்சி மற்றும் ஆட்சிறைச்சிக்கூடம் அமைக்கும் பணியை மாண்புமிகு மேயர் அவர்களும், வட்டார துணை ஆணையர் அவர்களும் ஆய்வு மேற்கொண்டனர். பெரும்பாலான பணிகள் முடிவுற்றன. ஆனால், தற்போது பணிகள் நடைபெறவில்லை. பணிகள் முடிவடைந்த பின் தான் Piece Market, தோல் மண்டி போன்ற கடைகள் அமைக்கப்பட வேண்டும். துர்நாற்றம் வீசுவதை தடுக்க Sewage Treatment Plant, Bio Gas என அனைத்து வசதிகளும் உள்ளன. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

CMS H&S Factory பள்ளி மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர் பார்வையிட்டனர். அந்தப் பள்ளியில் 1 முதல் 8 வரை

வகுப்புகள் உள்ளன. தற்போது 5 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 10 வகுப்பறைகள் தேவைப்படுகிறது. பள்ளிக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. கல்வி அலுவலர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோர் ஆய்வு செய்துள்ளனர். பள்ளியின் **Slab** பழுதடைந்து, மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லாததால், அதை இடித்து, நிதி ஒதுக்கீடு செய்து புதிய பள்ளி கட்டிடம் அமைத்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

சென்னை பள்ளிகளில் 95% மேற்பட்ட மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இதற்கு காரணம் கல்வித்துறை அதிகாரிகளும், ஆசிரியர்களும் காட்டிய அர்ப்பணிப்பே.

தற்போது பள்ளிகளில் **ஜூனியர் IAS அகாடமிக் கோர்ஸ்** தனியார் நிறுவனங்களின் மூலம் நடைபெற்று வருகிறது. சென்னை பள்ளிகளில் பயிலும் ஏழை மற்றும் எளிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கும் கல்வித்துறை மூலமாக கொண்டு வந்தால், **Skill Development** வழியாக அவர்கள் சிறப்பாக முன்னேற முடியும். இதற்காக 6 முதல் 8ஆம் வகுப்பு, 9 மற்றும் 10ஆம் வகுப்பு, 11 மற்றும் 12ஆம் வகுப்பு என பிரித்து, மாநகராட்சி பள்ளிகளில் **ஜூனியர் IAS அகாடமிக் கோர்ஸ்** தொடங்கினால், மாணவர்கள் நல்ல புத்தக வாசகர்களாகவும், கல்வியில் முன்னேற்றம் அடைவதோடு, அவர்களுடைய தனிப்பட்ட சூழ்நிலையிலும் திறன் வளர்ச்சி பெறுவார்கள்.

மேலும், 100 மாணவர்களை தேர்ந்தெடுத்து சிறப்பு பயிற்சி அளித்தால், அடுத்த ஐந்து ஆண்டுகளில் சென்னை பள்ளி மாணவர்கள் **IAS / IPS போட்டி தேர்வுகளில்** வெற்றி பெறும் வாய்ப்பு அதிகரிக்கும். நல்ல பயிற்சி வழங்கப்படுவதால், மாணவர்கள் தவறான வழியில் செல்லாமல் தடுக்கவும் முடியும். இதற்காக கூடுதல் நிதி தேவையில்லை. ஏனெனில், பள்ளிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்ட **Smart Class** வசதிகளை இதற்காக பயன்படுத்தி கொள்ளலாம். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தொடங்கிய **முதல்வர் படைப்பகம்** மூலம் மாணவர்கள் அதிகமாக பயன் பெற்று வருகின்றனர். எனவே, சென்னை பள்ளிகளில் **ஜூனியர் IAS அகாடமிக் கோர்ஸ்** தொடங்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன். பேச வாய்ப்பு வழங்கிய ஆளுங்கட்சி தலைவருக்கு என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, நரசிம்மன் நகர் பகுதி மக்களுக்கு விற்பனை பத்திரம் வழங்குவதில் மாநகராட்சியின் சார்பாக ஏற்பட்டுள்ள தொய்வை கண்டறிந்து, தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கணேசபுரம் மற்றும் ஜீவா மேம்பால பணிகள் குறித்து தாங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். இதற்கான மாற்று வழி குறித்து ஆலோசனை செய்ய வேண்டும். முன்னாள் துணை ஆணையர் (பணிகள்) மற்றும் வட்டார துணை ஆணையர் ஆகியோர் தொடர்ந்து ரயில்வே துறையுடன் தொடர்பில் இருந்து இதை முன்னெடுத்து வந்தனர். புதிதாக பொறுப்பேற்றுள்ள துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் நேரடியாக இரயில்வே துறையிடம் பேசி, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன். ரயில்வே துறையுடன் இணைந்து பணிகள் மேற்கொண்டால் மட்டுமே, இந்தப் பணிகள் விரைவாக நிறைவேற்றப்பட முடியும்.

அடுத்த மன்றக் கூட்டத்திற்கு முன் தாங்கள் குறிப்பிட்ட இடத்தில், டாக்டர் அம்பேத்கர் அவர்களது சிலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

72வது வார்டில் திருமண மண்டபம் அமைத்து தர வேண்டுமென்கிற கோரிக்கையினை தாங்கள் முன் வைத்துள்ளீர்கள். **இரண்டாம் கட்ட (IInd Phase)** பணிகளில் திருமண மண்டபத்திற்கும் சேர்த்து மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்தப் பணிகள் இரண்டாம் கட்டத்தில் துவங்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

பள்ளி வகுப்பறைகள் கட்டி தர வேண்டுமென்கிற கோரிக்கையினை முன் வைத்துள்ளீர்கள். வட்டார துணை ஆணையர் அவர்கள் ஆய்வு செய்து, தேவைகளின் அடிப்படையில் அதற்கான மதிப்பீடுகளை தயார் செய்யுமாறு கேட்டு கொள்கிறேன்.

ஜூனியர் IAS அகாடமிக் கோர்ஸ் குறித்து தங்களுடைய கருத்தினை தாங்கள் முன் வைத்துள்ளீர்கள். தற்போது மாநகராட்சி சார்பில் **Cooperative தேர்வுகளுக்கு** விருப்பமுள்ள மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. அதே போல், **Pilot Basis** முறையில் முதலில் சில பள்ளிகளை தேர்ந்தெடுத்து, மாணவர்களுக்கு பயிற்சி வழங்கும் வகையில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. சரவணன்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும் தெரிவித்து கொள்வது யாதெனில், ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் கூட **ஜூனியர் IAS அகாடமிக் கோர்ஸ்** பயிற்சி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் 2 அல்லது 10 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, கிண்டி அல்லது கோடம்பாக்கம் பயிற்சி நிலையங்களுக்கு அழைத்து செல்கிறார்கள். ஆனால், மாணவர்கள் முறையாக செல்வதில்லை. எனவே, அந்தந்த சென்னை பள்ளிகளில் ஏற்கனவே உள்ள **Smart Class** வகுப்பறைகளை நாம் பயன்படுத்தலாம்.

மாண்புமிகு மேயர்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகள் அரசு வகைப்பாட்டில் வருகின்றன. மாநகராட்சி வகைப்பாட்டில் இல்லை. எனவே, பள்ளிக்கல்வி துறையிடம் தெரிவித்து, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. மு. சரவணன்

இது தொடர்பான கடிதமும், ஆவணங்களும் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களிடம் வழங்கியுள்ளேன். நம்முடைய சென்னை பள்ளிகளில் இதை ஏற்படுத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

சென்னை பள்ளிகளில் **Pilot Basis** முறையில் இது ஏற்படுத்தப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன். நன்றி.

திருமதி. சாந்தி என்கின்ற யாழினி, மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.135 (குறுக்கீடு)

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், அனைத்து அதிகாரிகளுக்கும் எனது வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

மண்டலம் 10, வார்டு 135, 12–வது அவென்யூ சாலையில் நடைபாதை விரிவுபடுத்தப்பட்டு புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. அப்போது மழைநீர் வடிகால்வாய் **Manhole, Silt Catch Pit, Chute Pipe** ஆகியவை மூடப்பட்டுள்ளன. இது குறித்து பலமுறை பேருந்து சாலைகள் துறையிடம் புகார் தெரிவித்தும், ஒப்பந்ததாரர் சரி செய்யவில்லை. சிறிய மழைக்கே கூட மழைநீர் தேங்குகிறது. மூன்று மாதங்களாக தொடர்ந்து தெரிவித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. விரைவில் சரி செய்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

இதுகுறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திருமதி. சாந்தி என்கின்ற யாழினி

கடந்த ஆண்டு, மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி 2025–2026 மூலம், 9–வது அவென்யூ மைதானத்தில் ஒரு மேடை மற்றும் காலரி கட்டுவதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஆனால், பணி ஆணை இன்னும் வழங்கப்படவில்லை.

மாண்புமிகு மேயர்

இது தொடர்பாக நான் ஏற்கனவே பதில் தெரிவித்து விட்டேன்.

திருமதி. சாந்தி என்கின்ற யாழினி

தனி நபர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், இப்பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஆறு மாத காலமாக நான் கேட்டு கொண்டிருக்கிறேன். தகுந்த நடவடிக்கை தேவை.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ம. சாமுவேல் திரவியம், வார்டு எண். 6.

திரு. ம. சாமுவேல் திரவியம்

பெருந்தலைவர் காமராஜர் அவர்களை வணங்கி, மாண்புமிகு மேயர் அவர்களையும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களையும், மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர்களையும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களையும் வணங்கி என் உரையை தொடங்குகிறேன்.

தமிழ்நாடு அரசியல் வரலாற்றில், புதிய மாற்றத்தை "ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு" என சமூக நீதி கோட்பாட்டை பின்பற்றி, அமைந்துள்ள எங்களுடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. C. ஜோசப் விஜய் அவர்களின் தலைமையிலான புதிய அமைச்சரவையில் பதவியேற்றமைக்கு, எங்களுடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், மாமன்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். **(அவையில் சலசலப்பு)**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி திரு. C. **ஜோசப்** விஜய் அவர்கள் வாழ்க. இது நாட்டை காக்கும் கை. உன் வீட்டை காக்கும் கை. இந்த கை நாட்டின் நம்பிக்கை. இது எதிர்கால தாயகத்தின் வாழ்க்கை, அன்புக் கை, இது ஆக்கும் கை **(அவையில் சலசலப்பு)**

மாண்புமிகு மேயர்

அனைவரும் அமைதியாக, அவரவர் இருக்கையில் அமரவும். அவர் பேசட்டும்.

(அவையில் சலசலப்பு)

மதிப்பிற்குரிய துணை மேயர்

அனைவரும் அமைதியாக, அவரவர் இருக்கையில் அமரவும்.

(அவையில் சலசலப்பு)

மாண்புமிகு மேயர்

அனைவரும் அமைதியாக, அவரவர் இருக்கையில் அமரவும். அவர் பேசட்டும்.

(அவையில் சலசலப்பு)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினை சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தல்)

அடுத்து, நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள்.

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/0541/2026

தீர்மான எண்: 235/2026 **பொருள் எண்.01**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-4, பகுதி-09, வார்டு – 37ல் முல்லை நகர் மேம்பாலத்தில் பக்கவாட்டில் கீழ்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய மோட்டார் அறை கட்டும் பணிக்காக (SUMP CAPACITY 5,40,000 Ltr) 2025-26ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைபட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

மண்டலம்-4, பகுதி-09, வார்டு–37ல் முல்லை நகர் மேம்பாலத்தில் பக்கவாட்டில் கீழ்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய மோட்டார் அறை கட்டும் பணிக்காக (SUMP CAPACITY 5,40,000 Ltr) கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

1.	பணியின் விவரம்	மண்டலம்-4, பகுதி-09, வார்டு-37ல் முல்லை நகர் மேம்பாலத்தில் பக்கவாட்டில் கீழ்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய மோட்டார் அறை கட்டும் பணி (SUMP CAPACITY 5,40,000 Ltr)
2.	எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	மண்டலம்-4
3.	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2025-2026 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல் படி தயாரிக்கப்பட்டது

4.	மதிப்பீட்டின் தொகை	ரூ. 1,20,59,000.00
	அ) கட்டுமான பணி செலவினம்	ரூ. 1,01,23,417.87
	ஆ) மற்றைய எதிர்பாரா செலவு 2.5% (சட்டமன்ற உறுப்பினர் திட்டத்திற்கு மட்டும்)	ரூ. 12132.73
	ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 1%	ரூ. 101234.18
	ஊ) ஜி.எஸ்.டி.வரி 18%	ரூ. 1822215.22
	மொத்தம்	ரூ. 1,20,59,000.00
5.	வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா?	ஆம்
6.	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள்	பின்னர் பெறப்படும்
7.	நிதியின் மூலத்தன்மை	மூலதன நிதி (நிதி பின்னர் பெறப்படும்)

எனவே,

1. மண்டலம்-4, பகுதி-09, வார்டு –37ல் முல்லை நகர் மேம்பாலத்தில் பக்கவாட்டில் கீழ்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய மோட்டார் அறை கட்டும் பணிக்காக (SUMP CAPACITY 5,40,000 Ltr) 2025-2026 ஆம் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,20,59,000.00 நிர்வாக அனுமதியும்,
2. இப்பணி மேற்கொள்ள தேவைப்படும் மூலதன நிதியினை பெற்று மழைநீர் வடிகால்வாய் துறை மூலம் ஒப்பம் கோருவதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

அ.து.ந.க.எண்.அ3/188/2026

தீர்மான எண்: 236/2026 **பொருள் எண்.02**

பெருநகர சென்னை மாநகராட்சி – அரங்கத்துறை - 2025–2026 ஆம் ஆண்டு மூலதன நிதியின் கீழ் – மண்டலம்–8, கோட்டம்–97ல் Construction of Cricket and Volleyball Turf at Vellala Street playfield அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

மண்டலம்-8, கோட்டம்-97ல் Construction of Cricket and Volleyball Turf at Vellala Street playfield அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,67,00,000/-க்கு மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களின் 24.10.2025 நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

அதனடிப்படையில், மண்டலம்–8, கோட்டம்–97ல் Construction of Cricket and Volleyball Turf at Vellala Street playfield அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு உரிய அலுவலரின் தொழிநுட்ப அனுமதி பெறப்பட்ட, கீழ்கண்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

Sl.No	Dn.no	Estimate No	Name of the work	Estimate Amount
1	97	NH/2025-26/17821	Construction of Cricket and Volleyball Turf at vellala street playfield in Dn-97, Zone-8	Rs.1,67,00,000/-

எனவே,

1. மண்டலம்-8, கோட்டம்-97ல் Construction of Cricket and Volleyball Turf at Vellala Street playfield அமைக்கும் பணிக்கு ரூ.1,67,00,000/-க்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கும்,
2. மேற்காணும் பணிகளுக்குண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி, மூலதனநிதி, Function-60-62-00, கணக்கு குறியீடு எண்.412-400-100 (Play Grounds) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

பே.சா.து.ந.க.எண்.பி4/4541/2026

தீர்மான எண்: 237/2026 **பொருள் எண்.03**

பெருநகர சென்னை மாநகராட்சி – பேருந்து தட சாலைகள் துறை – 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள பல்வேறு சாலைகள் மற்றும் தெருக்களில் வழிபாட்டு தலங்கள், பள்ளி வளாகங்களில் சைகைப் பிரதிபலிப்பு பெயர் பலகைகள், பொது விழிப்புணர்வு பிரதிபலிப்பு பலகைகள் மற்றும் சிட்டி பிராண்டிங் பிரதிபலிப்பு பேனல்கள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

மாண்புமிகு மேயர் அவர்களின் 2026–27ஆம் ஆண்டிற்கான அறிவிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக முக்கிய சாலைகளில் 300 இடங்களில் படங்களுடன் கூடிய வழிகாட்டுதல் மற்றும் அறிவிப்பு பலகைகள், முக்கிய தலங்களின் விவரங்கள் அடங்கிய அறிவிப்பு பலகைகள் , எச்சரிக்கை அறிவிப்புடன் கூடிய பெயர் பலகைகள், பள்ளி பகுதிகளில் விழிப்புணர்வு பலகைகள், வேகத்தடைகள் மற்றும் நடைபாதையில் அறிவிப்பு பலகைகள் பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்படும் என்று அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி 2025–26 ஆண்டிற்கான அலுவலக விலைபட்டியலின் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது அதன் விவரங்கள் கீழ்வருமாறு.

வ. எண்	பணியின் விவரம்	எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை ரூபாய் (இலட்சம்)
1	Survey, Design, Supply and installation of SZ, PA & CB panel in key locations across GCC in Zones-IX, X, XI & XII	100	198.70

2	Survey, Design, Supply and installation of SZ, PA & CB panel in key locations across GCC in Zones - 08,09,10,11&13	100	198.68
3	Survey, Design, Supply and installation of SZ, PA & CB panel in key locations across GCC in Zones – XI, XIV, XV, VIII & IX	98	198.90
4	Survey, Design, Supply and installation of SZ, PA & CB panel in key locations across GCC in Zones -V, VI, VII, IX, X, XI & XII	100	198.75
5	Survey, Design, Supply and installation of SZ, PA & CB panel in key locations across GCC in Zones -III, IV, V, VI, IX & X	100	198.60
6	Survey, Design, Supply and installation of SZ, PA & CB panel in key locations across GCC in Zones -I, II, III, IV, V & VIII	98	198.88

எனவே,

1. **மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண்** 1 **முதல்** 6 **வரையிலுள்ள பணிகளுக்கு** 2025-26 **ஆண்டிற்கான அலுவலக விலைபட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு தனித்தனியாக நிர்வாக அனுமதியும் மற்றும் மின்னணு ஒப்பம் கோரவும்,**
2. **மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண்** 202108, **கணக்கு தலைப்பு எண்** 412-400-804 Blacktopped – Traffic Improvements **நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ளவும்,**
3. **மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு நிதி நிர்வாக பிரிவின் மூலமாக பேருந்து தட சாலைகள் துறை கணக்கு குறியீட்டு எண்** 202108, **கணக்கு தலைப்பு எண்** 412-400-804 Blacktopped – Traffic Improvements **கீழ் நிதி ஒதுக்கீடு செய்திடவும்,**

மேற்கண்ட 1 **முதல்** 3 **வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.**

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

ம.அ.9.ந.க.எண்.இ2/0783/2026

தீர்மான எண்: 238/2026 **பொருள் எண்.04**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-9, பகுதி–27, வார்டு-116, பாரதி சாலையில் உபயோகமற்ற நிலையில் உள்ள அம்மா குடிநீர் மையத்தை இடித்து அகற்ற அனுமதி.

இப்பணிக்காக வார்டு குழு தீர்மான எண்.2431/1/2025-26, நாள்22.01.2026ன்படி ஆணையர் மற்றும் மன்றத்திற்கான ஒப்புதலுக்காக கீழ்காணும் வகையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	பொருள்	விவரம்
1	இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம்	பாரதி சாலையில் உள்ள அம்மா குடிநீர் மையம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	2016 ஆம் ஆண்டு
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	83.54 சதுர மீட்டர்
4	அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு?	9.14x 9.14 = 83.54 சதுர மீட்டர்
5	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.73,355/-
6	அந்த கட்டிடம் தற்போது பயன்பாட்டில் உள்ளதா?	இல்லை
7	அந்த கட்டிடம் இடிப்பதற்கு முன்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	அம்மா குடிநீர் மையம்
8	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	மிகவும் சிதிலமடைந்து உள்ளது.
9	கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	9-வது மண்டல வார்டு குழு பரிந்துரை

10	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள்.	வார்டு குழு / மண்டலம்-9ன் தீர்மான எண்.243/1/ நாள்:22.01.2026

எனவே, மண்டலம்-9, பகுதி-27, வார்டு-116, பாரதி சாலையில் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ள அம்மா குடிநீர் மையத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.49/2026, நாள்.17.06.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.க.கு.ந.க.எண். அ7/1398/2026

தீர்மான எண்: 239/2026 **பொருள் எண்.05**

பெருநகர சென்னை மாநகராட்சி – மத்திய கணக்கு குழுமம் – 2026-2027 - பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ் நாடு) 01.04.2026 முதல் 30.06.2026 வரை (Q1) உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவீதம்) என நிர்ணயித்து அரசாணை வழங்கப்பட்டது– இவ்வரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

அரசாணை (நிலை) எண்.92, நிதி (படிகள்)த்துறை நாள்:15.04.2026ல், 2026–2027 ஆம் நிதி ஆண்டிற்கான, பொது வருங்கால வைப்பு நிதிக்கு வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவீதம்) என 01.04.2026 முதல் 30.04.2026 வரை

உள்ள காலத்திற்கு வழங்க ஆணையிடப்பட்டது. அரசாணையின் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது:–

FINANCE [Allowances] DEPARTMENT

G.O.(Ms).No.92, Dated 15th, April 2026.

(சித்திரை –02. திருவள்ளுவர் ஆண்டு 2057)

ABSTRACT

Provident Fund - General Provident Fund (Tamil Nadu) - Rate of interest for the financial year 2026-2027 with effect from 01.04.2026 to 30.06.2026 - Orders - Issued

Read the following:-

1. G.O Ms. No.83, Finance (Allowances) Department, dated .07.04.2025.
2. G.O Ms. No. 163, Finance (Allowances) Department, dated.15.07.2025.
3. G.O Ms. No. 229, Finance (Allowances) Department, dated.15.10.2025.
4. G.O Ms. No. 13, Finance (Allowances) Department, dated.19.01.2026.
5. Resolution from the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, F.No.5(3)-B(PD)/2023, dated:02.04.2026.

-OOO-

ORDER:

In the Government Order first to fourth read above, orders were issued fixing the rate of interest on the accumulations at the credit of the subscribers of General Provident Fund (Tamil Nadu) for the financial year 2025 – 2026 as detailed below:

Sl.No.	Quarter	Period	Financial Year	Rate of Interest
1.	I	01-04-2025 to 30-06-2025	2025-2026	7. 1%
2.	II	01-07-2025 to 30-09-2025	2025-2026	7. 1%
3.	III	01-10-2025 to 31-12-2025	2025-2026	7. 1%
4.	IV	01-01-2026 to 31-03-2026	2025-2026	7. 1%

2. The Government of India, in its resolution fourth read above, announced that during the Financial year 2026-2027, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st April 2026 to 30th June 2026 (Q1).

3. Accordingly, Government direct that the rate of interest on the accumulation at the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st April 2026 to 30th June 2026 (Q1).

4. The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

(BY ORDER OF THE GOVERNOR)

T.UDHAYACHANDRAN
Additional Chief Secretary to Government

2) மேற்காணும் அரசாணையின் அவசரம் மற்றும் அவசியம் கருதி, மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர அறிவுறுத்தி, அனைத்து வட்டார அலுவலகங்கள் (வ/ம/தெ), அனைத்து துறைகள் மற்றும் மண்டல அலுவலர்கள் (1 – 15 வரை) ஆகியோர்களுக்கு 19.05.2026 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

3) தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்.92, நிதி (படிகள்)த்துறை நாள்:15.04.2026ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.125/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.க.கு.ந.க.எண்.அ7/1379/2026

தீர்மான எண்: 240/2026 **பொருள் எண்.06**

பெருநகர சென்னை மாநகராட்சி – மத்திய கணக்கு குழுமம் – படிகள் – அகவிலைப்படி– 01.01.2026 முதல் 60 சதவிகிதம் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

அரசாணை (நிலை) எண்.97, நிதித் (படிகள்) துறை, நாள்:14.05.2026 ல், மாநில அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 58 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக அகவிலைப்படியை 01.01.2026 முதல் 2 சதவீதம் கூடுதல் உயர்வளித்து அரசு ஆணை வெளியிடப்பட்டது.

அரசாணையின் விவரம் கீழ் கண்டவாறு:–

நிதி (படிகள்)துறை

அரசாணை (நிலை) எண்: 97, நாள்: 14 – 05 –2026.

(சித்திரை– 31, திருவள்ளுவர் ஆண்டு 2057)

சுருக்கம்

படிகள் – அகவிலைப்படி –01–01–2026 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன

பின்வருவனற்றை படிக்கவும்:–

அரசாணை (நிலை) எண்;247, நிதி (படிகள்)தறை நாள், 13–11–2025.

–oOo–

ஆணை

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி, மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது:–

எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு)
(1)	(2)
01–07–2025	அடிப்படை ஊதியத்தில் 58 சதவீதம்

2) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில அரசு பணியாளர்களுக்கு 55 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக அகவிலைப்படியை 01–01–2026 முதல் உயர்த்தி வழங்கப்படும் என தெரிவித்ததன் அடிப்படையில் அகவிலைப்படியினை 2 சதவீதம் கூடுதல் உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, அனுமதித்து அரசு ஆணையிடுகிறது,

எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு)

(1)	(2)
01-01-2026	அடிப்படை ஊதியத்தில் 60 சதவீதம்

3) ஜனவரி 2026 முதல் ஏப்ரல் 2026 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்கு குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும் எனவும், அதுவே, 50 காசுக்கு குறைவாக இருந்தால் அது விட்டு விடப்படவேண்டும்.

4) மேலே, அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், சில்லரைச்செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேர பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

5) இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் ஊராட்சிச் செயலாளர்கள்/ எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும்.

6) இச்செலவு சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303. அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

7) மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட திருத்திய அகவிலைப்படி நிலுவைப்பட்டியல் சமர்பிப்பது தொடர்பாக சம்பளம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிட இயக்குநர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8) இதற்கான பட்டியல்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள்/ சம்பள கணக்கு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மு.

அ.சித்திக்

அரசு

கூடுதல் முதன்மைச் செயலாளர்

2) இந்த அகவிலைப்படி உயர்வினால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு (தோராயமாக) ரூ. 2 கோடி வீதம் (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) ஜனவரி 2026 முதல் ஏப்ரல் 2026 வரை, நான்கு மாதங்களுக்கு 8 கோடியும், நடப்பு நிதியாண்டில் (2026–2027) ஏப்ரல் 2026 முதல் மார்ச் 2027 வரை 11 மாதங்களுக்கு, (11 x 2)=22 கோடி (ரூபாய் இருபத்து இரண்டு கோடி மட்டும்) கூடுதல் செலவு ஏற்படும் என கருதப்படுகிறது.

3) திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படியை வழங்கும் நிகழ்வில் ஏற்படும் செலவினத்தை கீழ்கண்ட வரவு–செலவுத் திட்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

210–10–01–01	சம்பளம்	அலுவலர்
210–10–01–02	சம்பளம்	பணியாளர்
210–10–02–01	சம்பளம்	ஓட்டுநர்
210–10–02–02	சம்பளம்	சுத்தப்படுத்துபவர்
210–10–02–03	சம்பளம்	பொறியியல் பணி
210–10–02–04	சம்பளம்	தூய்மைப்பணி
210–10–02–05	சம்பளம்	சுகாதாரப் பணி
210–10–02–06	சம்பளம்	மழலையர் பள்ளி பணியாளர்கள்

4) எனவே, இவ்வரசாணையின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, ஆணையர் அவர்களின் அனுமதி 18.05.2026 அன்று பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த அனைத்து வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள், மற்றும் மண்டல

அலுவலர்கள் (1 முதல் 15 வரை) 18.05.2026 நாளிட்ட சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

5) தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்.97, நிதி (படிகள்)த்துறை, நாள்.14.05.2026.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.126/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.க.கு.ந.க.எண்.அ7/1380/2026

தீர்மான எண்: 241/2026 **பொருள் எண்.07**

பெருநகர சென்னை மாநகராட்சி – மத்திய கணக்கு குழுமம் 2016–ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் 01.01.2026 முதல் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது –இவ்வரசாணையை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

அரசாணை (நிலை) எண். 101, நிதி(படிகள்)த்துறை, நாள்: 14.05.2026ன்படி, 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் கீழ்கண்டவாறு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது:–

நிதி (படிகள்)துறை

அரசாணை (நிலை) எண்: 101, நாள்: 14 – 05 –2026.

(சித்திரை – 31, திருவள்ளுவர் ஆண்டு 2057)

சுருக்கம்

படிகள் – 01–01–2026 முதல் 2016 – ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

––

பின்வருவனற்றை படிக்கவும்:–

அரசாணை (நிலை) எண்;250, நிதி (படிகள்)துறை நாள், 13–11–2025.

ஆணை

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் 2016 – ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் கீழ்கண்டவாறு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளன:–

2016–ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம் / தர ஊதியம்	
எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு)
(1)	(2)
01.07.2025	அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் **257** சதவீதம்

2) 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் மாநில அரசு அலுவலர்களுக்.கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படிஅனுமதித்து அரசு ஆணையிடுகிறது:–

2016–ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம் / தர ஊதியம்	
எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு)
(1)	(2)
01.01.2026	அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் **262** சதவீதம்

3) ஜனவரி 2026 முதல் ஏப்ரல் 2026 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா

பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டு விடப்பட வேண்டும் .

4) இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303. அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்,

5) இதற்கான பட்டியல்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள்/ சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மு.அ.சித்திக்

அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர்

எனவே, இவ்வரசாணையின் அவசரம் மற்றும் அவசியம் கருதி ஆணையர் அவர்களின் 18.05.2026 நாளிட்ட அனுமதி ஆணையின்படி. மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில், 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கு இவ்வரசாணையினை நடைமுறைப்படுத்த 18.05.2026 நாளிட்ட சுற்றறிக்கை, அனைத்து வட்டார அலுவலகங்கள் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / துறைகள் மற்றும் மண்டலங்களுக்கு (1 முதல் 15 வரை) அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்.101, நிதி (படிகள்)த்துறை, நாள்.14.05.2026.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.127/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

மா.க.கு.நி.க.எண். அ7/860/2026

தீர்மான எண்: 242/2026 **பொருள் எண்.08**

பெருநகர சென்னை மாநகராட்சி – மத்திய கணக்கு குழுமம் – பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து பணம் எடுத்தல் (Withdrawal) – அதிகபட்ச வரம்புத் தொகையில் திருத்தங்கள் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – இவ்வரசாணையை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

அரசாணை (நிலை) எண்.46, நிதித்(படிகள்)துறை, நாள்:20.02.2026ல், பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து பணம் எடுத்தல் (Withdrawal) சம்பந்தமாக அதிகபட்ச வரம்புத்தொகையில் திருத்தங்கள் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையின் விவரம் கீழ் கண்டவாறு:–

FINANCE [Allowances] DEPARTMENT
G.O.(Ms).No.46, Dated 20th, February 2026.
(மாசி –08. திருவள்ளுவர் ஆண்டு 2057)
ABSTRACT

GENERAL PROVIDENT FUND - Withdrawal from the General Provident Fund — Maximum limit — Amendments to rule 15 -B or General Provident Fund (Tamil Nadu) Rules — Issued — Notified.

Read the following:-

1. G.O.Ms.No.33, Finance (Allowances) Department, dated 21.01.1992.
2. G.O.Ms.No.381, Finance (Allowances) Department, dated 30.09.2010
3. G.O.Ms.No. 103, Finance (Allowances) Department, dated 01.04.2013.
4. From the Accountant General Letter No.PAG (A&E) / EM /VII /25-26 /TRs-62887, dated 02.02.2026.

-ooo-

ORDER:

The following Notification will be published in the Tamil Nadu Government Gazette.

NOTIFICATION

In exercise of the powers conferred by the proviso to Article 309 or the Constitution of India and of all other powers hereunto enabling the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the General Provident Fund (Tamil Nadu) Rules.

AMENDMENTS

In the saicl Rules, in rule 15 -B, in sub -rule (1), for the provisos, the following provisos shall be substituted, namely :-

"Provided that in **no cas**e the maximum amount of withdrawal for the purposes specified in clauses (d), (e), (f) and (g) or rule 15 (A) shall exceed Rs.20,00,000/- (Rupees twenty lakh only) or 75 times or the monthly pay whichever is less:

Provided also that in the case Of a subscriber who has availed himself of an advance under the Scheme for the grant of advances for house building purpose, sponsored by the State or the Central Government or the Public or Private Financial Institutions, the sum withdrawn under this sub -rule together with the amount of advance taken under the aforesaid Scheme or the assistance taken from the above said sources shall not exceed Rs.50,00,000/ - (Rupees fifty lakh only)."

(BY ORDER OF THE GOVERNOR)

T.UDHAYACHANDRAN
Additional Chief Secretary To Government

2) மேற்காணும் அரசாணையின் அவசரம் மற்றும் அவசியம் கருதி, மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர அறிவுறுத்தி, அனைத்து வட்டார அலுவலகங்கள் (வ/ம/தெ), அனைத்து துறைகள் மற்றும் மண்டல அலுவலர்கள் (1 – 15 வரை) ஆகியோர்களுக்கு 28.03.2026 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

3) தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்.46, நிதி (படிகள்)த்துறை, நாள்.20.02.2026.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.128/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1/194/2026

தீர்மான எண்: 243/2026 **பொருள் எண்.09**

பெருநகர சென்னை மாநகராட்சி – இயந்திர பொறியியல் துறை – மத்திய சென்னை வாகன பணிமனை – மண்டலம்- 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு 2026-27 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய – இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது – கூடுதல் எரிபொருள் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி.

சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மானம் எண்.180/78, நாள்.26.02.78 ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிப்பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978–79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, மத்திய வட்டாரமாக மண்டலம்–6 முதல் 10 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்–6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா. டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொக்லைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், சிறப்பு உபகரணங்கள் மற்றும் இலகுரக காம்பேக்டரகள் போன்ற வாகனங்கள் 262 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இறைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

அதன்படி, மொத்த கொள்முதல் விலை சந்தை விலைக்கு சமமாக குறையும் வரை மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலையில் எரிபொருள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 17.03.2026 முதல் மொத்த கொள்முதல் விலை சந்தை விலையை காட்டிலும் அதிகமாக உள்ளதால் அன்றிலிருந்து சந்தை

விலையில் நேரடியாக M/s. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவையான டீசல் 1070 கிலோ லிட்டர் கொள்முதல் செய்ய ரூ.9,88,27,340/- (ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்து எட்டு இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து முந்நூற்று நாற்பது மட்டும்) ஆணை பெறப்பட்டது. மண்டலம்-6 தனியார் மயமாக்கப்பட்டதால், அங்குள்ள டீசல் பங்க் அதற்கு சொந்தமான M/s. பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமே ஒப்படைக்கவும், மேலும் மண்டலம்-6 மற்றும் 7-ற்கு உட்பட்ட வாகனங்களை M/s.பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவரின் பங்கிற்கு அனுப்பி டீசல் நிரப்ப ஆணையர் அவர்களிடம் ஆணை பெறப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

தற்போது வரை மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு டீசல் பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

2026-27	தொகை (ரூ)	கிலோ லிட்டர்
2026-27 ஆம் ஆண்டிற்க்கு வரையப்பட்ட மண்டலம் 8 லாரி நிலையத்திற்கு உட்பட்ட டீசல் பங்கிற்கு எரிபொருள் நிரப்ப நிர்வாக அனுமதி ஆணை	9,88,27,340.00	1,070
முன்கூட்டியே வரையப்பட்டது	4,90,56,480,00	528
இருப்பு	4,90,70,860,00	542
கையிருப்பு தொகையில் கொள்முதல் செய்யக்கூடிய டீசல் அளவு (டீசல் விலை உயர்வின் காரணமாக)		515

மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி, இருப்பு மொத்தம் ரூ.4,90,70,860.00/- மட்டுமே உள்ளது. அதன்படி, இருப்பிலிருக்கும் தொகை டீசல் விலையேற்றத்தின் காரணமாக 515kl மட்டுமே கொள்முதல் செய்ய முடியும். ஆகவே, மீதம் இருக்கும் மாதங்களுக்கு கையிருப்பு தொகை போதுமானதாக இல்லாத நிலை உள்ளது.

மேலும், மண்டலம் 8, 9 மற்றும் 10-ற்கு பருவமழை காலங்களில் நீர் இறைக்கும் பணிக்காக பணியமர்த்தப்பட்ட மோட்டார் பம்புகள், புதிதாக கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் மண்டலம் 8, 9 மற்றும் 10 க்குட்பட்ட மண்டலங்களின் அன்றாட பணிக்காக இயக்கப்படும் வாகனங்கள் என அனைத்து பணிகளுக்கும் டீசல் அதிக அளவில் தேவைப்படுகிறது. எனவே, மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2026-27 ஆம் ஆண்டிற்கு

கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டப்படுகின்றது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு:

மண்டலம் 8, 9 மற்றும் 10 க்குட்பட்ட லாரி நிலையங்களுக்கு 1 மாதத்திற்கு தேவைப்படும் டீசல் அளவு	155 kl
மண்டலம் 8, 9 மற்றும் 10 க்குட்பட்ட லாரி நிலையங்களுக்கு 10 மாதத்திற்கு தேவைப்படும் டீசல் அளவு (A)	1550 kl
தற்பொழுதுள்ள தொகை (Rs.) (விலை உயர்வுக்கு உட்பட்டது)	ரூ.4,90,70,860/-
மீதம் இருக்கும் தொகையில் (B) டீசல் அளவு	515 kl
கூடுதலாக தேவைப்படும் டீசல் அளவு (A – B) (விலை உயர்வுக்கு உட்பட்டது)	1035 kl

இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-8, 9 மற்றும் 10 லாரி நிலைய வாகனங்கள் மற்றும் மண்டலம்-8 முதல் 10 வரைக்கு உட்பட்ட புகைபரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது.

நிறுவனங்களின் பெயர்	சேமிப்பு தொட்டியுள்ள இடம்	டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம்
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்	மண்டலம் 8 லாரி நிலையம், எண்.5C, ப்ரூவரி சாலை, செனாய் நகர், சென்னை – 6000 030	மண்டலம் – 8, 9 மற்றும் 10 க்கு உட்பட்ட புகைபரப்பும் வாகனம், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கும்

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கை பராமரிக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம்

கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தில் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நிறுவனம்	பொருள் விவரம்	1 KL க்கான தொகை (அனைத்து வரிகள் உட்பட)	மொத்த தேவை கிலோ லிட்டர் (2026–207) ஆம் ஆண்டிற்கு
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்	டீசல்	ரூ.95,250/– (நாள் :18.05.2026)	1035
மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட)	1035 கி.லி. x ரூ.95,250 = ரூ.9,85,83,750/– (ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்தைந்து இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்)		

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2026–2027ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய தோரயமாக, 1035 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த தொகையான ரூ.9,85,83,750/– (ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்தைந்து இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2026–27ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40–41–09 – கணக்கு எண்: 230–20–03–06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரி பொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001–02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.180 / 78, நாள்.26.02.1978 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்று குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்,07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்திர ஆணை வெளியிடப்பட்டுள்ளது,

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத் தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001.–ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, நடப்பு நிதியாண்டில் 2026–27 ஆம் ஆண்டிற்கு, மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் கூடுதல் டீசல் கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய வட்டாரம், இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-8, 9 மற்றும் 10 வரையிலான லாரி நிலையங்களின் வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம்–8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்ப அனுமதியும்,
2. மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருள் 2026-27 ஆம் ஆண்டிற்கு கூடுதல் 1035 கிலோ லிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ.9,85,83,750/- (ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்தைந்து இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) செலவீனத்தை கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்போது மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களின் ஆணை பெற்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு RTGS மூலம்

முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிரு , பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
5. இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது RTGS மூலமாக அளிக்கவும்,
6. இதற்கான செலவீனத்தை 2026-2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09– கணக்கு எண். 230-20- 03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
7. அஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.055/2026, நாள்.16.06.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. "

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.124/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.12.வ.து.ந.க.எண்.ஆர்1/1492/2026

தீர்மான எண்: 244/2026 **பொருள் எண்.10**

பெருநகரா சென்னை மாநகராட்சி– மண்டலம்-12 கோட்டம்-160 ஆலந்தூர், புது தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள (முதல்வர் திருமண மாளிகை) சமுதாயநலக் கூடம் – நிகழ்ச்சிக்கான வாடகை நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு அனுமதி.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், முதன்மை செயலர், உறுப்பினர் CMDA அவர்களின் 13.03.2026 நாளிட்ட கடிதத்தில், அறிவிப்பு எண்.47/2023–24ன்படி சென்னை–600016, ஆலந்தூர், மண்டலம்–12, கோட்டம்–160, பகுதி–36 புது தெருவில் 21245 ச.அடி கொண்ட மனையில் கடந்த 09.03.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு தரைதளம் 9447 ச.அடி (still floor), முதல் தளம் 9447ச.அடி, இரண்டாம் தளம் 9447 ச.அடி Mazzanine Floor (மூன்றாவது தளம்) 4275ச.அடி ஆக மொத்தம் 32616 சதுர அடி பரப்பளவுடன் புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டுள்ளது எனவும்,

இச்சமுதாய நலக்கூடத்தில் தரைதளத்தில் வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் சமையல் கூடம், முதல் தளத்தில் உணவு அருந்தும் கூடம் (240 நபர்கள் அமர்ந்து உணவருந்தும் வசதியுடன்) இரண்டாம் தளத்தில் திருமண கூடம் மற்றும் விருந்தினர் தங்கும் அறை (திருமண கூடத்தில் சுமார் 620 பேர் அமரும் வசதியுடன்) மணமக்கள் தங்கும் அறை மற்றும் மூன்றாம் தளத்தில் விருந்தினர்கள் தங்கும் அறைகள் உட்பட ஜெனேரேட்டர் கூடிய மின்சார இணைப்பு, 2 மின் தூக்கிகள், கழிவறைகள் (ஆண் / பெண் இருபாலருக்கும், மாற்று திறனாளிகளுக்கும்), மின் விசிறி, குடிநீர் இணைப்பு (2 குடிநீர் தொட்டி), தீயணைப்பிற்காக நீர்சேமிப்பு தொட்டி (ஒவ்வொரு தொட்டியின் கொள்ளளவு 45000லிட்டர்) மேல்நிலை நீர் தொட்டி தீயணைப்பு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சேமிப்பு தொட்டியும் மற்றும் பொது உபயோகத்திற்காகவும் தொட்டி (மொத்த கொள்ளளவு 37000 லிட்டர்) போன்ற அடிப்படை வசதிகளுடன் கடந்த 24.02.2026 அன்று **"முதல்வர் திருமண மாளிகை"** என பெயர் சூட்டப்பட்டு மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு 13.03.2026 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையர், ம–12 அவர்களின் 08.06.2026 மற்றும் 11.06.2026 நாளிட்ட உத்தரவில் சென்னை –600016, ஆலந்தூர், புது தெருவில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் உரிய சட்ட விதிகளின்படி நிகழ்ச்சிக்கான வாடகை நிர்ணயம் செய்து நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநாட்சி மன்ற தீர்மான எண்.553/2000 பொருள் எண்.80, நாள்.03.08.2000 மற்றும் பொது சீராய்வு 2022–2023ன்படி அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 30.03.2022 மற்றும் மன்ற தீர்மான எண்.63/2022, நாள். 30.05.2022 மூலம் 1/2022–2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட சொத்துவரி பொது சீராய்வின்படி ஆலந்தூர், புது தெருவிற்கு உண்டான அடிப்படை தெரு கட்டணம் சதுர அடிக்கு ரூ.10.47 வீதம் என்ற வணிக பயன்பாட்டின் அடிப்படையில் கீழ்கண்ட பரப்பளவு கொண்ட முதல்வர் திருமண மாளிகை சமுதாய நலக்கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன் கணக்கீட்டு விவரம்

கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக

தளம்	பரப்பளவு
தரைதளம் (Stilt floor)	9447 ச.அடி
முதல் தளம்	9447 ச.அடி
இரண்டாம் தளம்	9447 ச.அடி
Mazzanine Floor (மூன்றாம் தளம்)	4275 ச.அடி
மொத்த பரப்பளவு	32616 ச.அடி

- கட்டிடத்தின் மொத்த சதுரடி 32616. ச.அடி x 10.47 x12 = ரூ.4097874
- அடிப்படை தெரு கட்டணமாக சதுர அடிக்கு ரூ.10.47 வீதம்
- ஆண்டுக்கு சுமார் 40 நிகழ்ச்சிகள்
- 32616. ச.அடி x 10.47 x12 = ரூ.$\frac{4097874}{40}$ = ரூ.102446/– (24 மணி நேரத்திற்கு)
- ஒரு நாள் வாடகை ரூ.102446/– (24 மணி நேரத்திற்கு)
  (சரக்கு மற்றும் சேவை வரி 18% தனியே)
- அரைநாள் வாடகை ரூ.51,223/– (12 மணி நேரத்திற்கு)
  (18% சரக்கு மற்றும் சேவை 18%வரி தனியே)
- நிகழ்ச்சி ஒன்றுக்கு முன்வைப்பு தொகையாக ரூ.20,000/– நிர்ணயம் செய்யலாம்.

மேற்காணும் வாடகை நிர்ணயம் குறித்து 10.06.2026 நாளிட்ட மண்டலம் 12வது வார்டு குழுவின் தீர்மானம் ஒப்புதல் பெறப்பட்டது.

பிற நிபந்தனைகள்.

1. முதல்வர் திருமண மாளிகை www.greaterchennaicorporation என்ற இணையதளம் (Online) மூலமாகவே முன்பதிவு செய்ய இயலும்.
2. அரசியல் சார்ந்த நிகழ்ச்சிகள், வணிக ரீதியான நிகழ்ச்சிகள், மதம் சார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் இனம் சார்ந்த நிகழ்ச்சிகள் போன்றவைகளுக்கு அனுமதி கிடையாது.
3. பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்கு தேவை ஏற்படின் (உதாரணமாக, இயற்கை இடர்பாடுகளின் போது பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தேர்தல் பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர நிகழ்வுகளில்) சமுதாய நல கூடம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட முன்பதிவானது ரத்து செய்யப்படும்.
4. பயனாளிகள் ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நலக்கூடம் பயன்படுத்திட வேண்டும்.
5. பயனாளிகள் / அவர்களை சார்ந்த நபர்கள் சமுதாய நல கூடத்திற்குள் உள்ள பொருட்களை சேதப்படுத்தினால் அதற்குரிய தண்டத் தொகை பயனாளிகளிடம் வசூலிக்கப்பட்ட முன்வைப்புத் தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.
6. நிகழ்ச்சிக்கான மின் பயன்படுத்தல் உரிய பயன்பாடு கணக்கீடுபடி முன்வைப்பு தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.
7. சமூக நல கூட ஒதுக்கீட்டிற்கான பொதுவான அனைத்து நிபந்தனைகள்.

எனவே, மண்டலம் – 12, வார்டு எண்-160 பகுதி36 சென்னை-600016, ஆலந்தூர், புது தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள **"முதல்வர் திருமண மாளிகை"** சமுதாய நலக் கூடத்திற்கு ஒரு நாள் வாடகை (24 மணி நேரத்திற்கு) ரூ.1,02,446/- (ரூபாய் ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்து ஆறு மட்டும்) சரக்கு மற்றும் சேவை வரி 18% தனியே மற்றும் அரை நாள் (12 மணி நேரத்திற்) வாடகை ரூ.51,223/- (ரூபாய் ஐம்பத்து ஒன்றாயிரத்து இருநூற்று இருபத்து மூன்று மட்டும்) சரக்கு மற்றும் சேவை வரி 18% தனியே மற்றும் முன்வைப்புத் தொகையாக ரூ.20,000/- ஆக நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.116/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.14.வ.து.ந.க.எண்ஆர்/01921/2024

தீர்மான எண்: 245/2026 **பொருள் எண்.11**

பெருநகர சென்னை மாநகராட்சி – ஏரியா சபா – மண்டலம் 14 – தற்போது பொறுப்பில் உள்ள வார்டு-183ன் ஏரியா சபா 7ன் வார்டு குழு உறுப்பினர் திரு. P.சுவாமிநாதன் அவர்களை மாற்றம் செய்துவிட்டு புதிய வார்டு குழு உறுப்பினராக திரு. S.கோட்டீஸ்வரன் அவர்களை நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது – ஏரியா சபா உறுப்பினரை மாற்றம் செய்ய பெறப்பட்ட மாமன்ற தீர்மானத்தில் முந்தைய உறுப்பினர் திரு. P.சுவாமிநாதன் அவர்களின் தலைப்பெழுத்து P மற்றும் M என இரு வேறு இடங்களில் என பதியப்பட்டுள்ளதால் – திரு. P.சுவாமிநாதன் என்பதற்கு பதிலாக திரு.M.சுவாமிநாதன் என தலைப்பு பெயர் தவறுதலாக (Initial) பதியப்பட்டதை பிழை திருத்தம் (Eratta) செய்து திரு. P.சுவாமிநாதன் என மாமன்ற தீர்மாணம் பெற அனுமதி.

அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.06.2022 மற்றும் அரசிதழ் எண்.358, நாள் . 24.06.2022 ல் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு நகர உள்ளாட்சி (வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபா) விதிகள் 2022ன் படி, பெருநகர சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919 பிரிவு 5Cல் வார்டு கமிட்டி தோற்றுவித்தல் தொடர்பாகவும், பிரிவு 5Fல் ஏரியா சபா தோற்றுவித்தல் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புர உள்ளாட்சிகளில் வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபா தோற்றுவித்தல் தொடர்பாக அரசாணை (நிலை) எண்.92ல் விதிகள் உருவாக்கப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதிகள் 24 ஜுன் 2022 முதல் அமலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்திட மன்றத்தீர்மான எண்.078/2023, நாள்: 30.01.2023 அன்று மாமன்ற அனுமதி பெறப்பட்டு தற்போது அவ்விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டு–183ல் அமைக்கப்பட்ட 10 ஏரியா சபைகளில் ஏரியா சபை 7ன் ஏரியா உறுப்பினராக தேர்தெடுக்கப்பட்ட திரு. P. சுவாமிநாதன் என்பவருக்கு பதிலாக திரு. S. கோட்டீஸ்வரன் என்பவரை நியமனம் செய்திட மன்றத்தீர்மான எண்.327/2025, நாள்: 21.03.2025ன்படி மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மண்டலம்–14, வார்டு–183, ஏரியா சபை–7ன் உறுப்பினரை மாற்றம் செய்திட பெறப்பட்ட மாமன்ற தீர்மானத்தில் முந்தைய உறுப்பினர் திரு.P.சுவாமிநாதன்

அவர்களின் தலைப்பெழுத்து P மற்றும் M என இரு வேறு இடங்களில் பதியப்பட்டு மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே. மண்டலம்–14, வார்டு–183, சபை–7ன் முந்தைய ஏரியா சபை உறுப்பினர் திரு. P.சுவாமிநாதன் அவர்களின் தலைப்பெழுத்து P மற்றும் M இரு வேறு இடங்களில் பதியப்பட்டதை மாற்றம் செய்து திரு. P. சுவாமிநாதன் என பதிய மண்டலம்–14ன் வார்டு குழு கூட்டத்தில் பிழை பொருத்தல் (Eratta) அனுமதி பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக்கொண்டு, மேற்கண்ட தலைப்பெழுத்து பிழைக்கு பெருநகர சென்னை மாநகராட்சி, மாமன்றம் மூலம் பிழை பொருத்தல் (Eratta) பெற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.115/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.15.ந.க.எண்/ பி2/05343/2023

தீர்மான எண்: 246/2026 **பொருள் எண்.12**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-15 , கோட்டம் -194 – சோழிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமம் – அனுமன் காலனி வெட்டுவாங்கேணி லிங்க் ரோடு சாலையோர ஆக்கிரமிப்புகள் நீதிமன்ற உத்தரவின்படி அகற்றப்பட்டது – Bio-metric முறையில் கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களுக்கு மறுவாழ்வு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் குடியமர்வு செய்வது – மூன்றில் இரண்டு பங்கு தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி.

திரு.பொன்தங்கவேலு என்பவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மண்டலம்–15, வார்டு–194, அனுமன் காலனி வெட்டுவாங்கேணி இணைப்பு சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளும்படி

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் WP.NO 8595/2025 என்ற வழக்கை தொடர்ந்திருந்தார்கள். அவ்வழக்கின் மீது பிறப்பிக்கப்பட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 17.04.2025 நாளிட்ட தீர்ப்பில் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6. "Admittedly, petitioners are the encroachers and in occupation of the Government poramboke land classified as "cart track". That being so, the petitioners have not established even a semblance of legal right for the purpose of entertaining the writ petition. If at all the petitioners are landless poor persons and having no other property or source of income, they are at liberty to submit an application to the Tamil Nadu Urban Habitat Development Board, who in turn shall consider the case for providing alternate accommodation in any one of the available projects as per the eligibility and on payment of required charges as per the rules in force."

7."Despite the order of this Court providing an opportunity to the eligible landless poor people to submit an application seeking allotment, the encroachers are continued to be in lands. Thus the encroachers are not entitled for any further leniency from the hands of this Court. The practice of filing repeated writ petitions by the encroachers need not be encouraged by High Courts. The Corporation Officials are directed to not to show any leniency in the matter of eviction of encroachment from the public property.

Accordingly, the Greater Chennai Corporation is directed to evict all the encroachers if necessary, with the assistance of the police and take possession of the roads and Government lands under encroachment and Utilize the same for public purposes in the manner known to law. The said exercise is directed to be completed within a period of eight (8) weeks from the date of receipt of a copy of this Court.

Accordingly, the Writ Petition stands disposed of. No costs. Post the matter for reporting compliance on 16.06.2025".

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் படி பெருநகர சென்னை மாநகராட்சி, 14.05.2025 அன்று அனுமன் காலனி, வெட்டுவாங்கேணி இணைப்பு சாலையில் ஆக்கிரமிப்பில் இருந்த 15 குடும்பங்கள் அகற்றப்பட்டன. 15 குடும்பங்களின் Bio–metric முறையில் கணக்கெடுக்கும் பணி 27.05.2025 அன்று மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட கடிதத்தில், மேலாண் இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் Bio–metric முறையில் கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட 15 ஆக்கிரமிப்பாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினால் கட்டப்படும் குடியிருப்புகளில் வீடுகளை ஒதுக்கீடு செய்து தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனை தொடர்ந்து, மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு நகர்ப் ற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் 01.07.2025 நாளிட்ட கடிதத்தில், ஆக்கிரமிப்பாளர்கள் 15 நபர்களுக்கு வாரிய விதிமுறைகளின்படி பெரும்பாக்கம் திட்ட பகுதியில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்ய ஒரு குடியிருப்பு பயனாளருக்கு

செலுத்த வேண்டிய பங்கு தொகை ரூ.6,68,259/– வீதம் 15 நபர்களுக்கு ரூ.1,00,23,885/– பங்குத்தொகை செலுத்துவது தொடர்பான விவரத்தினை வாரியத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனை தொடர்ந்து 28.08.2025 அன்று 15 ஆக்கிரமிப்பாளர்களையும் அழைத்து பயனாளிகள் பங்குத் தொகையான ரூ.6,68,259/– செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அவர்கள் தாங்கள் மிகவும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகிறோம் என்றும், ஆகையால் தங்களால் இவ்வளவு பெரிய தொகையை கட்ட இயலாது என அனுமன் காலனி ஆக்கிரமிப்பாளர்களின் 28.08.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப் ற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநரின் 05.01.2026 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் – 15, ஈஞ்சம்பாக்கம் அனுமன் காலனி வெட்டுவாங்கேணி இணைப்பு சாலையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட 15 நபர்களுக்கு பெரும்பாக்கம் திட்டப்பகுதி குடியிருப்பில் ஒதுக்கீடு செய்ய பயனாளிகளின் பங்கு தொகை ரூ.6,68,259/– ல் மூன்றில் இரண்டு பங்கு தொகையான ரூ.4,45,506 x 15 = ரூ.66,82,590/– தொகையினை "The Managing Director ,TNUHDB, Chennai – 600 005" என்ற பெயரில் வரைவு காசோலையாக வழங்கும் பட்சத்தில் ஆக்கிரமணதாரர்கள் 15 நபர்களுக்கு பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 04.03.2026 நாளிட்ட குறிப்பில், மண்டலம்–15 அனுமன் காலனி வெட்டுவாங்கேணி இணைப்பு சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி 15 ஆக்கிரமிப்பாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினால் கட்டப்படும் கட்டிட திட்டங்களில் பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் குடியிருப் ஒதுக்கீடு செய்ய பயனாளிகளின் பங்குத்தொகை ரூ.6,68,259/–ஐ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு செலுத்துவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது.

எனவே மண்டலம் –15, வார்டு – 194 சோழிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமம், அனுமன் காலனி வெட்டுவாங்கேணி இணைப்பு சாலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட 15 நபர்களுக்கு பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்ய பயனாளிகளின் பங்குத்தொகையான ரூ.66,82,590/–ஐ பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு செலுத்துவதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.110/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ7.ந.க.எண்.எஸ்3/498/2026

தீர்மான எண்: 247/2026 **பொருள் எண்.13**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-7 – அம்பத்தூர் – பகுதி–18 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 14.07.2026 உடன் முடிவடைகிறது – 413எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை கொண்டு 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –7, அம்பத்தூர், பகுதி–18, வார்டு– 79 முதல் வார்டு 83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08 சதுரகி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையிலான உட்புறசாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி–18இன் கீழ் உள்ள 79 முதல் 83 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2015ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 1,56,255. இருப்பினும், நகர மயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்குநாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்–7 அம்பத்தூர் பகுதி –18இல் வார்டு–79 முதல் 83 வரையுள்ள 5 வார்டுகளில் தோராயமாக 105மெட்ரிக் டன் குப்பைகள் தினந்தோறும் தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர தூய்மை தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மைப் பணியாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் தூய்மை பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 18இல் (வார்டு – 79 முதல் 81 – வரை) போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால், இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தூய்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai EnviroSolution private Limited அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பகுதி – 18இல் 79,80,81,ஆகிய கோட்டங்களில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் அண்டை வீட்டுகுழுவின் வழியாக பணிபுரியும் 413எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்துவரும் பகுதி மற்றும் மக்கட்தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் தூய்மை பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதாலும் அதற்கேற்ப அண்டைவீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண். 191/2026, நாள்.20.02.2026–ன்படி அண்டை வீட்டு குழுவின் வழியாக வார்டு–79, 80, 81இல் 413 பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை மேற்கொள்ள 16.04.2026 முதல் 14.07.2026 வரை(90நாட்கள்) மூன்று மாதகாலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது தூய்மை பணி நடைப்பெற்றுவருகிறது. பகுதி–18ல் கோட்டம்– 79 முதல் 81 வரை உள்ள கோட்டங்களில் 22அண்டைவீட்டு குழுவின் வழியாக இப்பணியாளர்களுக்கு தினக்கூலியானது மாதாமாதம் அண்டை வீட்டு குழுக்களின் வங்கி கணக்கிற்கு RTGS மூலமாக பணபரிவர்த்தனை செய்யப்பட்டு குழுக்களின் வங்கிகணக்கிலிருந்து அக்குழுவில் உள்ள ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தனித்தனியாக RTGS மூலமாக பணம்பட்டுவாடா செய்யப்பட்டு வரப்படுகிறது.

மண்டலம்–7, பகுதி – 18ல். அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை வைத்து தொடர்ந்து 15.07.2026 முதல் 10.01.2027 வரை 180 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி – 18 வார்டு – 79,80,81 ஆகிய மூன்று கோட்டங்களில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழுவின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 413 தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள், தூய்மை பணியினை மேற்கொள்ள மண்டலம்–7, பகுதி–18க்கு, தேவை என கணக்கிட்டு 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–7இல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.761/– வீதம்

413 பணியாளர்களுக்கு 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.5,65,72,740/– (ரூபாய். ஐந்து கோடியே அறுபத்தைந்து இலட்சத்து எழுபத்தியிரண்டாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்)க்கு என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்	பகுதி எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	18	413	ரூ.761 x 413 x 180 (நாட்கள்) = ரூ.5,65,72,740/–
மொத்தம்			ரூ. 5,65,72,740/–

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி–18 (வார்டு–79 முதல் 81 வரை 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7இல் குப்பைகளை அகற்ற Chennai EnviroSolution private Limited மூலம் 3 வார்டுகளை எடுத்து (Takeover) தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நாள்வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழுவின் வழியாக 413 எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.761/-வீதம், 15.07.2026 முதல் 10.01.2027 வரை 180 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.5,65,72,740/- (ரூபாய். ஐந்து கோடியே அறுபத்தைந்து இலட்சத்து எழுபத்தியிரண்டாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்)க்கு நிருவாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40- 41-03 கணக்கு தலைப்பு எண். 210 –100 - 601 கீழ் 2026 – 27ஆம் நிதி ஆண்டிற்கு ரூ. 6,00,00,000/- (ரூபாய் ஆறு கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> **"16.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.056/2026, நாள்.16.06.2026–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) பெரும்பான்மையான உறுப்பினர்களின் தெரிவித்த கருத்தின்படி, மண்டலம்-7ல் துப்புரவு பணிகள் தோய்வின்றி நடைபெற 60 வயதுக்கு மேற்பட்ட தற்காலிக துப்புரவு பணியாளர்களையும் மற்றும் நீண்ட நாள் பணிக்கு வராத தற்காலிக துப்புரவு பணியாளர்களையும் பணியிலிருந்து விடுவித்து அவர்களுக்கு பதிலாக புதிய பணியாளர்களை பணியமர்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும்) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."**
>
> "19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் இப்பொருள் குறித்து தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண். 117/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

<u>ம.அ.7/ப – 19/ந.க.எண். எஸ்2/535/2026</u>

தீர்மான எண்: 248/2026 **பொருள் எண்.14**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-7 – அம்பத்தூர் – பகுதி–19 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 14.07.2026 உடன் முடிவடைகிறது– 485 எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை கொண்டு 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின்அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –7, அம்பத்தூர், பகுதி –19, வார்டு – 84 முதல் 88 வரைஉள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுரகி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையிலான உட்புறசாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி–19ன் கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள்தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்–7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 360 மெட்ரிக்டன் குப்பைகள் வார்டு–79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் தூய்மைபணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் தூய்மைபணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 19 (வார்டு – 84, 86, 87, 88) இல் போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும், இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தூய்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution private Limited அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பகுதி – 19வார்டு 84, 86, 87, 88 இல் போதிய நிரந்தர தூய்மை பணியாளர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணிபுரியும் 485 எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் தூய்மைபணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதாலும் அதற்கேற்ப அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக

பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண்.192/2026, நாள்.30.09.2025–ன்படி அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் 485 பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை மேற்கொள்ள 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்கள்) மூன்று மாதகாலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது தூய்மை பணி நடைப்பெற்றுவருகிறது. பகுதி–19இல் கோட்டம்–84, 86, 87, 88 ஆகிய கோட்டங்களில் 26 அண்டை வீட்டு குழுவின் வழியாக இப்பணியாளர்களுக்கு தினக்கூலியானது மாதாமாதம் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) வங்கிகணக்கிற்கு RTGS மூலமாக பணபரிவர்த்தனை செய்யப்பட்டு குழுக்களின் வங்கி கணக்கிலிருந்து அக்குழுவில் உள்ள ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தனித்தனியாக RTGS மூலமாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

மண்டலம்–7, பகுதி–19இல். அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை வைத்து தொடர்ந்து 15.07.2026 முதல் 10.01.2027 வரை 180 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி–19 (வார்டு 84, 86,87, 88)இல் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 485 தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள், தூய்மை பணியினை மேற்கொள்ள மண்டலம்–7, பகுதி–19க்கு, தேவை என கணக்கிட்டு 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) எதிர்வரும் காலங்களில் பொதுசுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக தினக்கூலி தூய்மைபணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–7இல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி, அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.761/– வீதம் 485 பணியாளர்களுக்கு 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.6,64,35,300/– (ரூபாய். ஆறு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து முந்நூறு மட்டும்) என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்	பகுதி எண்	தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்

1	19	485	ரூ.761 x 485 x 180 (நாட்கள்) = ரூ. 6,64,35,300/–
மொத்தம்			ரூ.6,64,35,300/–

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி–19 (வார்டு – 84, 86, 87, 88 வரை) 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம்–7இல் குப்பைகளை அகற்ற Chennai Enviro Solution private Limited மூலம் பகுதி -19ல் உள்ள 4 வார்டுகளை எடுத்து (Take over) தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக 485 எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 485 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.761/-வீதம், 15.07.2026 முதல் 10.01.2027 வரை 180 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.6,64,35,300/- (ரூபாய். ஆறு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து முந்நூறு மட்டும்)க்கு நிருவாக அனுமதி வேண்டியும்.
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண்-210–100-601 கீழ் 2026-27ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.7,00,00,000/- (ரூபாய் ஏழு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி வேண்டியும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"16.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.057/2026, நாள்.16.06.2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) பெரும்பான்மையான உறுப்பினர்களின் தெரிவித்த கருத்தின்படி, மண்டலம்-7ல் துப்புரவு பணிகள் தொய்வின்றி நடைபெற 60 வயதுக்கு மேற்பட்ட தற்காலிக துப்புரவு பணியாளர்களையும் மற்றும் நீண்ட நாள் பணிக்கு வராத தற்காலிக துப்புரவு பணியாளர்களையும் பணியிலிருந்து விடுவித்து அவர்களுக்கு பதிலாக புதிய பணியாளர்களை பணியமர்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு

(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும்) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் இப்பொருள் குறித்து தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண். 118/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

<u>ம.அ7. ப20.ந.க.எண்.எஸ்1/372/2026</u>

தீர்மான எண்: 249/2026 **பொருள் எண்.15**

<u>பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி–20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழு(SHG) வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 14.07.2026 உடன் முடிவடைகிறது. – 559 எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை கொண்டு 15.07.2026 முதல் 10.01.2027வரை (180 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின்அனுமதி.</u>

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –7, அம்பத்தூர், பகுதி – 20, வார்டு – 89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.08 சதுரகி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 16 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 884 எண்ணிக்கையிலான உட்புறசாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி–20இன் கீழ் உள்ள 89 முதல் 93 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு

கணக்கெடுப்பின்படி 2,81,264 இருப்பினும், நகர மயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்–7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 360 மெட்ரிக்டன் குப்பைகள் வார்டு–79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர தூய்மை தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் தூய்மை பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 20இல் (வார்டு – 89 முதல் 93 – வரை) போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும், இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தூய்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மைதுறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution private Limited அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பகுதி – 20இல் தற்சமயம் நிரந்தர தூய்மை பணியாளர்கள் மண்டலம் –6 லிருந்து 34 எண்ணிக்கை கொண்ட பணியாளர்கள் வரப்பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லாத பட்சத்தில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக 559 எண்ணிக்கை கொண்ட தற்காலிக தூய்மை பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் தூய்மைபணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதாலும் அதற்கேற்ப அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மானஎண். 224/2026, நாள்.20.02.2026–ன்படி, அண்டை வீட்டு குழு (SHG)வின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் 559 பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை மேற்கொள்ள 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்கள்) மூன்று மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது தூய்மை பணி நடைப்பெற்று வருகிறது.

மேலும், பகுதி–20இல் கோட்டம்–89 முதல் 93 வரை உள்ள கோட்டங்களில் 30 அண்டை வீட்டு குழுவின் வழியாக இப்பணியாளர்களுக்கு தினக்கூலியானது மாதா மாதம் அண்டை வீட்டு குழு(SHG)களின் வங்கிகணக்கிற்கு RTGS மூலமாக பணபரிவர்த்தனை செய்யப்பட்டு குழுக்களின் வங்கி கணக்கிலிருந்து அக்குழுவில் உள்ள ஒவ்வொரு

பணியாளர்களுக்கும் தனித்தனியாக RTGS மூலமாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வரப்படுகிறது.

மண்டலம்–7, பகுதி–20இல் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை வைத்து தொடர்ந்து 15.07.2026 முதல் 10.01.2027வரை 180 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி – 20 (வார்டு – 89 முதல் 93 வரை) தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை 15.07.2026 முதல் 10.01.2027வரை (180 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 559 தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள், தூய்மை பணியினை மேற்கொள்ள மண்டலம்–7, பகுதி–20க்கு, தேவை என கணக்கிட்டு 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) எதிர்வரும் காலங்களில் பொதுசுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7இல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்குரூ.761/– வீதம் 559 பணியாளர்களுக்கு 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.7,65,71,820/– (ரூபாய். ஏழு கோடியே அறுபத்தைந்து இலட்சத்து எழுபத்தோராயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்) என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்	பகுதி எண்	தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	20	559	ரூ.761 x 559 x 180 (நாட்கள்) = ரூ.7,65,71,820/–
மொத்தம்			ரூ.7,65,71,820/–

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி –20 (வார்டு–89 முதல் 93 வரை) 15.07.2026 முதல் 10.01.2027 வரை (180 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7இல்

குப்பைகளை அகற்ற Chennai Enviro Solution private Limited மூலம் பகுதி -20ல் உள்ள 5 வார்டுகளைஎடுத்து (Takeover) தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் தூய்மைபணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக 559 எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணியை மேற்கொள்ளவும்,

2. மேற்கண்ட 559 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.761/-வீதம், 15.07.2026 முதல் 10.01.2027 வரை 180 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.7,65,71,820/- (ரூபாய். ஏழு கோடியே அறுபத்தைந்து இலட்சத்து எழுபத்தோராயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்)–க்கு நிருவாக அனுமதி வேண்டியும்.

3. இப்பணியை கணக்கு குறியீட்டுஎண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண்- 210 –100 - 601 கீழ் 2026-27ஆம் நிதி ஆண்டிற்கு ரூ. 8,00,00,000/- (ரூபாய் எட்டு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்வதற்கு நிருவாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"16.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.058/2026, நாள்.16.06.2026–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) பெரும்பான்மையான உறுப்பினர்களின் தெரிவித்த கருத்தின்படி, மண்டலம்-7ல் துப்புரவு பணிகள் தொய்வின்றி நடைபெற 60 வயதுக்கு மேற்பட்ட தற்காலிக துப்புரவு பணியாளர்களையும் மற்றும் நீண்ட நாள் பணிக்கு வராத தற்காலிக துப்புரவு பணியாளர்களையும் பணியிலிருந்து விடுவித்து அவர்களுக்கு பதிலாக புதிய பணியாளர்களை பணியமர்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும்) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் இப்பொருள் குறித்து தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.

119/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.D1/7027/2026

தீர்மான எண்: 250/2026 **பொருள் எண்.16**

பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – தொழிற்பயிற்சி நிலையத்தில் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணி செய்ய மூன்று தற்காலிக பாதுகாவலர் பணிகளுக்கு (watchman/security) அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணையின்படி, ஒரு நாள் ஊதியம் ரூ.535/- வீதம் இக்கல்வியாண்டில் வழங்குவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் மண்டலம்–9, கோட்டம்–120 லாயிட்ஸ் காலனியில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் சுமார் 250 மாணவர்களுக்கு ஆறு தொழிற் பாடப்பிரிவுகளில் NCVT பாடத்திட்ட முறையில் தொழிற்பயிற்சி அளித்து வருகின்றது.

தொழிற்பயிற்சி நிலையம் சுமார் 20 கிரவுண்ட நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதில் 'அ" பிரிவு கட்டடம், 'ஆ' பிரிவு கட்டடம், புதிய பாடப்பிரிவு கட்டடம், மேல் தளம் மற்றும் லாரி செட் உள்ளன. தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படும் ஆறு வகையான பாடப்பிரிவுக்கும் பாடத்திட்டத்தில் உள்ளபடி கருவிகள் மற்றும் உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளது. பயிற்சி மாணவர்களின் அன்றாட செய்முறை பயிற்சிக்கான நுகர் பொருட்கள் பண்டக காப்பகத்தில் இருப்பு வைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. மோட்டார் மெக்கானிக் பாடப்பிரிவுக்கு பயிற்சிக்கு இலகுரக மற்றும் கனரக வாகனங்கள் தொழிற்பயிற்சி நிலைய லாரி செட்டில் நிறுத்தப்பட்டு உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மான எண்.1050 நாள்.29.09.2025ன் படியும் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 03.07.2025 நாளிட்ட செயல்முறை ஆணையின் படி தினக்கூலி பட்டியலில்

Watchman / security– க்கு அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலியினையே இக்கல்வியாண்டிலும் (2026–2027) ஒரு நாள் ஊதியம் ரூ..535/– வீதம் வழங்கி மூன்று தற்காலிக பாதுகாவலர் பணியாளர்களுக்கு 11 மாதங்களுக்கு (தினக்கூலி ஊதியம் 01.06.2026 முதல் 30.04.2027 வரை) அதன் செலவீனத் தொகை (ரூ. 535/– x 334 நாட்கள்x3 நபர்கள்) ரூ.5,36,070/– என கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு வழங்கிட அனுமதி வேண்டப்படுகிறது.

அட்டவணை

வ. எண்	பணியின் பெயர் (தற்காலிக பாதுகாவலர்)	சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை தினக்கூலி பட்டியல் நாள் 03.07.2025 (ஒரு நாளுக்கு)	பணி புரிய வேண்டிய நாட்கள் (ஜூன்–2026 முதல் ஏப்ரல்–2027 வரை)	தினக்கூலி பட்டியலின் படி தற்காலிக ஊதியத்தொகை
1.	காலை நேர பாதுகாவலர் –1 நபர்	ரூ.535/– வீதம்	334 நாட்கள்	ரூ.1,78,690/–
2.	பகல் நேர பாதுகாவலர் – 1 நபர்	ரூ.535/– வீதம்	334 நாட்கள்	ரூ.1,78,690/–
3.	இரவு நேர பாதுகாவலர் –1 நபர்	ரூ.535/– வீதம்	334 நாட்கள்	ரூ.1,78,690/–
மொத்தம்				ரூ.5,36,070/–

எனவே,

1. தற்காலிக பாதுகாப்பு பணிக்கு ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் 2025-2026ஆம் ஆண்டுக்கான தினக்கூலி பட்டியலில் குறிப்பிட்டுள்ள Watchman / security-கள், தினக்கூலியினையே இக்கல்வியாண்டிலும் (2026-2027) ஒரு நாள் ஊதியம் ரூ.535/- வீதம் வழங்கி மூன்று தற்காலிக பாதுகாப்பு பணியாளர்களை
   11 மாதங்களுக்கு (தினக்கூலி ஊதியம் 01.06.2026 முதல் 30.04.2027 வரை) பணிக்கு வருகை புரியும் நாட்களை கணக்கிட்டு செலவீனத் தொகை (ரூ. 535/- x 334 நாட்கள் x 3 நபர்கள்) ரூ.5,36,070/- ஊதியம் வழங்க நிர்வாக அனுமதியும்,

2. பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலைய தற்காலிக பாதுகாவலர்கள் பணிகளின் ஊதியத்திற்கு ஆகும் செலவீனத்தை தொழிற்பயிற்சி நிலைய வரவு செலவு கணக்கு தலைப்பு எண்.220-110-313 –Security Expenses – Other Building - function code 808202–ல் உள்ள கணக்கு தலைப்பில் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 11.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 16.06.2026 அன்று தீர்மான எண்.16/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.112/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.ம/7018/2026

தீர்மான எண்: 251/2026 **பொருள் எண்.17**

பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – சென்னை தொடக்க / நடுநிலை / உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக்கட்டிடம், உட்கட்டமைப்பு மற்றும் பள்ளிகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பதற்கான தேவைகளை அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்வதற்கு பள்ளி மேலாண்மைக் குழுவின் (SMC) மூலம் தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்துவதற்கு அனுமதி – 2026-2027ஆம் கல்வியாண்டில் ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) ஊதியம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அனைத்து பள்ளிகளிலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம்

மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு கருதி பகல் மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியமாகும்.

தற்போது, 2025–2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் நலன் கருதி பள்ளிப் பாதுகாப்பிற்காக பாதுகாவலர்கள் நியமிப்பதற்கு மன்றத் தீர்மான எண்.1066/2025, நாள்.24.09.2025ன்படி மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சென்னை தொடக்க, நடுநிலை, உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு கருதி பகல் மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்குவதற்கு பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலமாக கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களை பணியமர்த்துவது அவசியமாகிறது.

வ. எண்	விவரம்	பாதுகாவலர்களின் எண்ணிக்கை
1	சென்னை தொடக்கப்பள்ளிகள்	185
2	சென்னை நடுநிலைப்பள்ளிகள்	165
3	சென்னை உயர்நிலைப்பள்ளிகள்	93
4	சென்னை மேல்நிலைப்பள்ளிகள்	78
மொத்தம்		521

மேற்குறிப்பிட்ட தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் அவர்களுக்கான ஊதியமாக ரூ.12,000/– என ஊதியம் நிர்ணயம் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) ஊதியம் வழங்கப்பட வேண்டிய விவரம்

வ. எண்.	பள்ளிகளின் விவரம்	பணியாளர்களின் எண்ணிக்கை	ஒரு மாதத்திற்கான ஊதியம்	ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை	மொத்த ஊதியம்
1	சென்னை தொடக்கப்பள்ளிகள்	185	12,000	11	2,44,20,000
2	சென்னை நடுநிலைப்பள்ளிகள்	165	12,000	11	2,17,80,000
3	சென்னை உயர்நிலைப்பள்ளிகள்	93	12,000	11	1,22,76,000
4	சென்னை	78	12,000	11	1,02,96,000

	மேல்நிலைப்பள்ளிகள்				
	மொத்தம்	521	12,000	11	6,87,72,000

மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி 2026–2027ஆம் கல்வியாண்டில் 521 தற்காலிக பாதுகாவலர்களை ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்தப்பட்டு ரூ.6,87,72,000/– தொகையில் ஊதியம் வழங்குவதற்கு தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் வாயிலாக வழங்குவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. 2026-2027ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளி சார் உட்கட்டமைப்பு பொருட்களின் பாதுகாப்புத் தேவைகளை சந்தித்திட மாணவ / மாணவியர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே நேரடியாக 521 தற்காலிக பாதுகாவலர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்தி பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) மேற்கொள்ள அனுமதியும்,

2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு கல்வி அலுவலர் அவர்களின் வாயிலாக தலைமை ஆசிரியர்களின் SMC வங்கி கணக்கில் செலுத்தி பின்பு தற்காலிக பாதுகாவலர்களுக்கு RTGS/NEFT மூலமாக ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) வரை ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும்,

3. இச்செலவினங்களுக்காக ரூ.6,87,72,000/-(ரூபாய் ஆறு கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரம் மட்டும்) வழங்க அனுமதியும்,

4. இத்தொகையை தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீட்டு எண்.80-82-06, 220-11-03-11 Security Expenses என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் பெறுவதற்கும் மற்றும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீடு எண்.80-82-01, 220-11-03-12 Security Expenses என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 11.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின்

அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.06.2026 அன்று தீர்மான எண்.20/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.130/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.சி5/7049/2026

தீர்மான எண்: 252/2026 **பொருள் எண்.18**

பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அலுவலக பணிகளை மேற்கொள்வதற்கு அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியரே பள்ளி மேலாண்மைக் குழுவின் (SMC) மூலம் தற்காலிக அலுவலக உதவியாளர்கள் பணியமர்த்துவதற்கும் – 2026-2027 ஆம் கல்வியாண்டில் ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) ஊதியம் வழங்குவதற்கும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என 417 பள்ளிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர்களின் சேர்க்கை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டங்களால் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட சென்னைப் பள்ளிகளில் அலுவலக பணிகளை மேற்கொள்வதற்காக 2025–2026ஆம் கல்வியாண்டில் மன்றத் தீர்மான எண்.1064/2025, நாள்.29.09.2025ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு 77 தற்காலிக அலுவலக உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, நாள் ஒன்றுக்கு ரூ.510/– ஊதியம் என நிர்ணயம் செய்யப்பட்டு 26 நாட்களுக்கு ரூ.13,260/– ஊதியம் வழங்கப்பட்டது.

தற்போது, 2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அலுவலக பணிகளை மேற்கொள்வதற்காக 77 தற்காலிக அலுவலக உதவியாளர்களுக்கு பணியின் அவசியம் கருதி ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை பணியமர்த்துவது அவசியமாகிறது.

வ. எண்.	பதவியின் பெயர்	தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை
1	தற்காலிக அலுவலக உதவியாளர்கள்	77

வ.எண்	பதவியின் பெயர்	பணியாளர்களின் எண்ணிக்கை	மாத ஊதியம்	பணிபுரிய வேண்டிய கால அளவு (ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை)	மொத்த ஊதியம் (கலம் எண். 3 x 4 x 5)
1	2	3	4	5	6
1	அலுவலக உதவியாளர்	77	ரூ. 13,260/–	11 மாதங்கள்	1,12,31,220

2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் அலுவலகம் சார்ந்த பணிகளினை மேற்கொள்வதற்கு பணியின் அவசியம் கருதி தற்காலிக அலுவலக உதவியாளர்கள் ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்கள்) பணியமர்த்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. 2026-2027ஆம் கல்வியாண்டில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அலுவலக பணிகளை மேற்கொள்வதற்காக 77 தற்காலிக அலுவலக உதவியாளர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியின் அவசியம் கருதி ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்கள்) அந்தந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் பணியமர்த்துவதற்கு அனுமதியும்,

2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு கல்வி அலுவலர் அவர்களின் வாயிலாக

தலைமை ஆசிரியர்களின் SMC வங்கி கணக்கில் செலுத்திய பின்பு அலுவலக உதவியாளர்களுக்கு RTGS / NEFT மூலமாக ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்கள்) வரை ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்ட தற்காலிக அலுவலக உதவியாளர்களை ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்கள்) ஊதியம் வழங்குவதற்கான செலவினத் தொகையான ரூ.1,12,31,220/- னை (ரூபாய் ஒரு கோடியே பன்னிரெண்டு இலட்சத்து முப்பத்தோராயிரத்து இருநூற்று இருபது மட்டும்) கணக்கு குறியீடு எண். 80-82-01, 210-10-06-12 (தற்காலிக பணியாளர்கள் ஊதியம் – பிற பணியாளர்) என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்கொள்வதற்கு அனுமதியும்,

4. மேற்குறிப்பிட்ட தற்காலிக அலுவலக உதவியாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. அதனடிப்படையில் இனிவரும் காலங்களில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைக்கிணங்க ஊதிய நிர்ணயம் செய்வதற்கு இணை ஆணையர்(கல்வி) அவர்களின் ஒப்புதல் பெற்று ஊதியம் உயர்த்துவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 11.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 16.06.2026 அன்று தீர்மான எண்.18/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.114/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.இ3/6626/2026

தீர்மான எண்: 253/2026 **பொருள் எண்.19**

பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – 2026-2027ஆம் கல்வியாண்டில் சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்வதற்கு தேவைப்படும் உடற்கல்வி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜூன் 2026 முதல் மார்ச் 2027 வரை தலைமையாசிரியர்கள் மூலமாக நியமிக்கவும் மற்றும் அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக ECS மூலம் வழங்குவதற்கு அனுமதி.

மாண்புமிகு மேயர் அவர்களின் 2025–2026ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண். 5ல் பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் 69 நடுநிலைப்பள்ளிகள், 72 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளவும் கோப்பைகளை வெல்லவும் அவர்களுக்கு பயிற்சி அளித்து தயார்படுத்தும் விதமாக தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் நடுநிலைப்பள்ளிகளுக்கு மாதம் ரூ.15,000/–, உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு மாதம் ரூ.18,000/– என்ற வகையில் 141 உடற்கல்வி ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இதற்கென ரூ.2.34/– கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதை செயல்படுத்தும் விதமாக 2025–2026ஆம் கல்வியாண்டில் 141 தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் மன்றத் தீர்மானம் எண்.474/2025, நாள்.30.04.2025ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு நடுநிலைப்பள்ளிகளுக்கு மாதம் ரூ.15,000/–, உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாதம் ரூ.18,000/– ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு, ஜூன் 2025 முதல் பணியமர்த்தப்பட்டனர்.

மேலும், சென்னை நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் B.P.Ed. பயின்ற உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ரூ.15,000/– ஊதியம் வழங்கப்பட்ட நிலையில் ரூ.20,000/– ஊதியம் உயர்த்தி வழங்குமாறும் மற்றும் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் M.P.Ed. பயின்ற உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ரூ.18,000/– ஊதியம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது, ரூ.25,000/– ஊதியம் உயர்த்தி வழங்குமாறும் மாண்புமிகு மேயர் அவர்களில் அறிவுறுத்தலின் பேரில் மன்றத் தீர்மானம் எண்.1063/2025, நாள்.29.09.2025ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்டது.

தற்போது, 2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் நலன் கருதி அப்பள்ளிகளில் கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்களின் தேவை உள்ளது.

வ. எண்.	பதவியின் பெயர்	தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை
1	தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் (P.E.T. Teacher)	141

2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் (P.E.T. Teachers) அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் SMC மூலம் பணியமர்த்திக் கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. கீழ்கண்ட அட்டவணையின்படி தற்காலிகமாக பணியமர்த்தப்படும் தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஜூன் 2026 முதல் மார்ச் 2027 வரை (10 மாதங்கள்) ஊதியம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

S.No.	Designation	School Details	No. of Staff	Per Month Salary Rs.	Total Month (June 2026 to March 2027)	Total Amount
1	P.E.T. Teachers	CMS	69	20,000	10	1,38,00,000
2		CHS & CHSS	72	25,000	10	1,80,00,000
Total			141			3,18,00,000

மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு 2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் ஜூன் 2026 முதல் மார்ச் 2027 வரை பணியமர்த்துவது அவசியமாகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி 141 தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்தி தற்காலிக உடற்கல்வி ஆசிரியர் ஏற்பாடுகளை ஜூன் 2026 முதல் மார்ச் 2027 வரை (10 மாதங்களுக்கு) மேற்கொள்ள அனுமதியும்,

2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு கல்வி அலுவலர் அவர்களின் வாயிலாக தலைமை ஆசிரியர்களின் SMC வங்கி கணக்கில் செலுத்தி பின்பு தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்களுக்கு RTGS/NEFT மூலமாக ஜூன்

2026 முதல் மார்ச் 2027 வரை (10 மாதங்களுக்கு) ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும்,

3. இச்செலவினங்களுக்காக ரூ.3,18,00,000/- (ரூபாய் மூன்று கோடியே பதினெட்டு இலட்சம் மட்டும்) வழங்க அனுமதியும்,

4. இத்தொகையை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீட்டு எண். 80-82-01, 210-10-06-13 (தற்காலிக பணியாளர்கள் ஊதியம் – ஆசிரியர்) என்கிற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 11.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 16.06.2026 அன்று தீர்மான எண்.17/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.113/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண். பி1/1654/2024

தீர்மான எண்: 254/2026 **பொருள் எண்.20**

பெருநகர சென்னை மாநகராட்சி – கட்டடத்துறை – தொழில் முறை மனிதவளத்தை வழங்குவதற்கான பணிக்காக M/s. Jayaram Ventures.,

<u>வழங்கப்பட்டது – பணியின் காலத்தை மூன்று மாதங்களுக்கு (01.05.2026 முதல் 31.07.2026 வரை) நீட்டிப்பதற்கும் – ஒரு வருட காலத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பம் கோரவும் அனுமதி.</u>

மன்றத் தீர்மான எண்.547/2025, நாள் : 30/04/2025ன்படி மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தொழில்முறை மனிதவளத்தை வழங்க வேண்டி M/s. Jayaram Ventures., அவர்களுக்கு பணியாணை 30.04.2025 அன்று வழங்கப்பட்டது.

M/s. Jayaram Ventures., அவர்களுக்கு வழங்கப்பட்ட பணியாணையில் ஒரு வருட காலத்திற்கு அதாவது 01.05.2025 முதல் 30.04.2026 வரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தொழில்முறை மனிதவளத்தை வழங்க குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம் மன்றக் கூடம் 20.02.2026 அன்று நடந்த முடிந்த நிலையில் மார்ச் மாதம் 15–ம் நாள் தேர்தல் நடத்தை விதிகள் அமுல்படுத்தப்பட்டதால் மனிதவளம் வழங்குவதற்காக நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரும் பணி மேற்கொள்ள இயலவில்லை.

ஆதலால் 01.05.2026 முதல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தொழில்முறை மனித வனம் தேவைக்கு வழங்க இயலாத நிலை உள்ளது. என்று தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

01.05.2026க்கு பிறகு பல துறைகளுக்கு மனித வளம் தேவைகள் உள்ளது. இந்த பணியாளர்கள் இல்லாமல் இருந்தால் பல துறைகளில் பணிகள் செய்வதற்கு சிரமம் ஏற்படும் நிலை அமையும்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தொழில்முறை மனிதவளத்தை வழங்கும் பணிக்காக M/s. Jayaram Ventures., அவர்களுக்கு அளித்த பணியாணை அதே நிபந்தனைக்கு உட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டும் 3 மாத காலத்திற்கு அதாவது 01.05.2026 முதல் 31.07.2026 வரை நீட்டிப்பு வழங்கலாம் என்று கருதப்படுகின்றது.

மேலும், மனித வளம் அதற்கு பிறகு பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி கீழ்கண்ட விதிமுறைகளின்படி வேண்டப்படுகின்றது.

அரசு நிர்ணயிக்கப்பட்ட (சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதல் பெற்ற விலைப்புள்ளி (Collectorate Office Rate) மற்றும் பொதுப்பணித் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட விலைப்புள்ளி) குறைந்தபட்ச ஊதியத்தினை பணி அமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு எக்காரணம் கொண்டும் குறைக்கக் கூடாது,

பிரதி மாதம் ஊழியர்களுக்கு ESI மற்றும் PF பிடித்தம் முதலிய விவரங்களை ஊழியர்களுக்கும் மற்றும் துறை சார்ந்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்,

ஊழியர்களுக்கு பிரதி மாதம் 5ம் தேதிக்குள் Pay Slip–வுடன் ஊதியத்தினை பணியாளர்களின் வங்கி கணக்கில் NEFT / RTGS மூலம் வழங்கிட உறுதி செய்ய வேண்டும்,

ஊழியர்களுக்கு நிர்வாகத்தின் மூலம் தற்காலிக அடையாள அட்டை வழங்கபட வேண்டும்.

எனவே,

1. M/s. Jayaram Ventures., **அவர்களுக்கு தொழில்முறை மனிதவளம் வழங்கும் பணியினை ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு தீர்மானத்திற்கு உட்பட்டும் மூன்று மாத காலத்திற்கு** (01.05.2026 **முதல்** 31.07.2026 **வரை) நீட்டிப்பு செய்வதற்கும்,**
2. **பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு வருட காலத்திற்கு அனைத்து துறைகளுக்கும் தேவைப்படும் மனிதவளம் அளிப்பதற்கு ஒப்பம் கோருவதற்கு நிர்வாக அனுமதியும்,**

மேற்கண்ட 1 **மற்றும்** 2 **ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)–ன் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

> "17.06.2026 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.**54 /2026, **நாள்.** 17.06.2026-**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**
>
> "19.06.2026 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தொழில்முறை மனிதவளத்தை வழங்கும் மேற்படி நிறுவனத்தின் மூலம் பணிபுரிபவர்களுக்கு குறித்த நேரத்தில் நிலுவையின்றி ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.** 120/2026, **நாள்.**19.06.2026**ன்படி இதனை நிலைக்குழு (வவிமநி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."**

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பூ.து.ந.க.எண். பி2/774-1/2025

தீர்மான எண்: 255/2026 **பொருள் எண்.21**

பெருநகர சென்னை மாநகராட்சி – பூங்காத் துறை – பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள 827 பூங்காக்கள் SHG பணியாளர்கள்

மூலம் செயல்படுத்தப்படும் பராமரிப்புப் பணிகள் வருகின்ற 30.06.2026 அன்று முடிவடைகிறது – SHG பணியாளர்கள் மூலம் பூங்காக்களை ஆறு மாதக்காலம் (01.07.2026 முதல் 31.12.2026 வரை) கண்காணிப்புப் பணியாளர்கள் (Monitoring Staff) மூலம் பராமரிக்க மண்டல வாரியாக தனித்தனியாக மன்றத்தின் நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 993 பூங்காக்களில் 815 பூங்காக்களை இயக்கம் மற்றும் பராமரிப்பு (O&M) மூலம் பராமரிப்பு செய்யப்பட்ட நிலையில் அதன் பணிகளின் நோக்கத்தில் (Scope of work) ஏற்பட்ட மாற்றம் காரணமாக தற்போதுள்ள ஒப்பந்தம் மன்ற தீர்மானம் எண். 53/2026 நாள் 30.01.2026ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் சில நிர்வாக காரணங்களினால் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை 31.12.2025 முடிய இரத்து செய்ய மன்றத்தீர்மான எண். 1263/2025 நாள்: 19.12.2025ன் பெறப்பட்டது. புதிய ஒப்பந்ததாரர்கள் இறுதி செய்யப்படும் வரை பெருநகர சென்னை மாநகராட்சியின் பொதுப் பூங்காக்களின் இயக்க மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக சென்னை மாவட்ட ஆட்சியரால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட தினசரி ஊதியத்தின்படி பின்வரும் பணியாளர்களைப் பணியமர்த்த முன்மொழியப்பட்டது.

Sl.No.	Category of Worker	Wages per Day (2025-26) (Rs.)
1	Supervisor	682/-
2	Electrician-cum-Pump Operator	870/-
3	Sweeper	565/ -
4	Gardener	411/-
5	Security	535/-

இதன் அடிப்படையில் 815 பூங்காக்களை 2210 SHG பணியாளர்கள் மூலம் பராமரிக்க உரிய அலுவலரின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் மூலம் மேற்கூறிய ஐந்து பிரிவுகளிலும் தினக்கூலிப் பணியாளர்கள் நியமிப்பதற்காக ஆணையர் அவர்களின் 31.12.2025, 19.02.2026, 27.02.2026, 12.03.2026, 14.03.2026 அனுமதி மற்றும் பொருத்தமான வரவு செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் அனுமதி பெறப்பட்டு ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் புதியதாக திறக்கப்பட்ட பூங்காக்கள் உட்பட தற்போது 829 பூங்காக்கள் 2441 SHG பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அட்டவணை – 1

S. No	Zone	No. of SHG Parks	Sweeper	Gardener	Security	Electrician	Supervisor	Total
1	I	15	30	0	0	1	1	32
2	II	38	94	6	9	1	2	112
3	III	58	143	5	8	3	3	162
4	IV	56	128	4	8	2	2	144

5	V	27	111	0	22	1	2	136
6	VI	58	149	12	30	2	4	197
7	VII	119	299	0	25	1	7	332
8	VIII	33	81	9	14	0	3	107
9	IX	30	90	6	11	2	1	110
10	X	56	151	9	18	3	6	187
11	XI	64	153	0	15	8	5	181
12	XII	77	162	0	2	3	8	175
13	XIII	67	150	3	6	2	7	168
14	XIV	59	146	7	15	5	6	179
15	XV	72	176	5	24	7	7	219
மொத்தம்		829						2441

மேலே உள்ள அட்டவணையில் மண்டலம் 13ல் 2 பூங்காக்கள், மண்டலம் மூலம் தத்தெடுப்பு முறையில் பராமரிக்கப்பட்டு வருவதால் மீதமுள்ள 65 பூங்காக்களை SHG பணியாளர்கள் மூலம் பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் இயக்க மற்றும் பராமரிப்பின் (O&M) கீழ் உள்ள பூங்காக்களை திறம்பட நிர்வகிப்பதற்காக பல்வேறு வகை தினக்கூலித் பணியாளர்களின் எண்ணிக்கையை திருத்தி அமைக்குமாறு மண்டல அலுவலர்களின் கோரிக்கையின்படி கீழ்காணும் அட்டவணையின்படி SHG பணியாளர்களின் எண்ணிக்கை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 2

S.No	Zone	No. of SHG Parks	Labour Requirement				
			Sweeper	Security	Electrician cum plumber	Supervisor	Total
1	I	15	30	0	1	1	32
2	II	38	94	3	0	2	99
3	III	59	129	4	2	3	138
4	IV	56	132	8	2	2	144
5	V	27	111	22	1	2	136
6	VI	56	166	31	2	4	203
7	VII	119	292	20	1	7	320
8	VIII	34	110	20	1	3	134
9	IX	30	96	11	2	1	110
10	X	56	160	18	3	6	187
11	XI	64	153	15	8	5	181
12	XII	77	161	0	3	7	171
13	XIII	65	153	6	2	7	168
14	XIV	59	153	15	5	6	179
15	XV	72	181	10	3	7	201
மொத்தம் 827							2403

மேற்கண்ட அட்டவணையின் அடிப்படையில் கீழ்காணும் இனங்களுக்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி மண்டல வாரியாக தனித்தனியாக முன்மொழியப்படுகிறது அதன் விவரம் பின்வருமாறு :

அட்டவணை – 3

Salary for SHG laborers for a period of 6 months (from 01.07.2026 to 31.12.2026)

S.No	Zone	No.Of SHG Parks	Labour Requirement				Fund Required for Salary (184 days salary) Rs.				
			Sweeper	Security	Eletrician cum Plumber	Supervisor	Sweeper	Security	Electrician cum Plumbler	Supervisor	Total
1	I	15	30	0	1	1	3118800	0	160080	125488	3404368
2	II	38	94	3	0	2	9772240	295320	0	250976	10318536
3	III	59	129	4	2	3	13410840	393760	320160	376464	14501224
4	IV	56	132	8	2	2	13722720	787520	320160	250976	15081376
5	V	27	111	22	1	2	11539560	2165680	160080	250976	14116296
6	VI	56	166	31	2	4	17257360	3051640	320160	501952	21131112
7	VII	119	292	20	1	7	30356320	1968800	160080	878416	33363616
8	VIII	34	110	20	1	3	11435600	1968800	160080	376464	13940944
9	IX	30	96	11	2	1	9980160	1082840	320160	125488	11508648
10	X	56	160	18	3	6	16633600	1771920	480240	752928	19638688
11	XI	64	153	15	8	5	15905880	1476600	1280640	627440	19290560
12	XII	77	161	0	3	7	16737560	0	480240	878416	18096216
13	XIII	65	153	6	2	7	15905880	590640	320160	878416	17695096
14	XIV	59	153	15	5	6	15905880	1476600	800400	752928	18935808
15	XV	72	118	10	3	7	12267280	984400	480240	878416	14610336

ஆணையர் அவர்கள் 16.02.2026 நாளிட்ட உத்தரவின்படி மண்டல அலுவலர் மண்டலம் 1 முதல் 15 வரை பணியில் உள்ள கண்காணிப்புப் பணியாளர்கள் (Monitoring Staff) மூலம் பூங்கா பணிகள் (O&M) மேற்கொள்ளும் இந்த SHG பணியாளர்களை கண்காணிக்க ஆணையிட்டுள்ளார். இதற்காக ஒரு கண்காணிப்புப் பணியாளருக்கு (Monitoring Staff) மாதத்திற்கு ரூ.5000 பயணப்படி மற்றும் ஊக்க தொகையாக வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

அட்டவணை – 4

Incentive and Travel Allowance for Monitoring Staff (01.07.2026 - 31.12.2026)							
S.No	Zone	No of Parks	No of SHG Laboureres	No of SHG Group	Incentive & TA/ SHG / Month for 2 Monitoring Staff (Rs.)	Fund Required for 1 Month (Rs.)	Fund Required for 6 Month (Rs.)
1	I	15	32	2	10000	20000	120000
2	II	38	99	5	10000	50000	300000
3	III	59	138	10	10000	100000	600000
4	IV	56	144	10	10000	100000	600000
5	V	27	136	7	10000	70000	420000
6	VI	56	203	12	10000	120000	720000
7	VII	119	320	17	10000	170000	1020000

8	VIII	34	134	8	10000	80000	480000
9	IX	30	110	6	10000	60000	360000
10	X	56	187	10	10000	100000	600000
11	XI	64	181	10	10000	100000	600000
12	XII	77	171	9	10000	90000	540000
13	XIII	65	168	9	10000	90000	540000
14	XIV	59	179	9	10000	90000	540000
15	XV	72	201	11	10000	110000	660000

மேற்கண்டவாறு மண்டல வாரியாக ஆறுமாதத்திற்கு SHG பணியாளர்களுக்கு தேவைப்படும் சம்பள செலவின தொகை அட்டவணை 3இல் கண்டுள்ளவாறும் கண்காணிப்புப் பணியாளர்கள் (Monitoring Staff)க்கான ஊக்க தொகை மற்றும் பயணப்படி செலவின தொகை அட்டவணை 4இல் கண்டுள்ளவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம் 1 முதல் 15 வரை குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை 3இல் கண்டுள்ளவாறு பூங்காக்களை பராமரிக்க தேவையான SHG தினக்கூலி பணியாளர்களை அங்கீகரிக்கவும் மற்றும் ஆறுமாதத்திற்கு (01.07.2026 முதல் 31.12.2026) பணியமர்த்த மன்றத்தின் அனுமதியும்,

2. ஆறு மாத காலத்திற்கு (01.07.2026 முதல் 31.12.2026) அட்டவணை 3இல் கண்டுள்ளவாறு இப்பணி மேற்கொள்ள மண்டல வாரியாக தேவைப்படும் தொகைக்கு தனித்தனியாக மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. தோட்டப்பணியாளர்களுக்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.411/-யிலிருந்து ரூ.565/-யினை மார்ச் 2026 முதல் உயர்த்தி வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,

4. மண்டலம் 1 முதல் 15 வரை குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை 4இல் கண்டுள்ளவாறு கண்காணிப்புப் பணியாளர்கள் (Monitoring Staff)க்கான ஊக்கத்தொகை மற்றும் பயணப்படிக்கான செலவின தொகைக்கு மண்டல வாரியாக நிர்வாக அனுமதி வேண்டியும்,

5. சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகத்திற்கு உட்பட்ட மண்டல அலுவலர்கள் மூலம் தேவையான தினக்கூலிப் பணியாளர்களை ஆறு மாதக் காலத்திற்கு (01.07.2026 முதல் 31.12.2026) நியமிக்க அனுமதி வேண்டியும்,

6. பூங்காக்களை தனியார் மயமாக்குவதற்கான Function Code: 606100 கணக்குத் தலைப்பு (வருவாய் நிதி) எண் 230-150-400-இன் கீழ் நிதி ஆலோசகர் (நிதித்துறை) மூலம் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு அனுமதி வேண்டியும்,

7. மண்டலம் 1 முதல் 15 வரை, மண்டல அலுவலர்களிடம் இருந்து பெறப்படும் தினக்கூலிப் பணியாளர்களின் வருகை பதிவேடுகளின் அடிப்படையில் கண்காணிப்புப் பணியாளர்கள் (Monitoring Staff) மற்றும் திட்ட மேலாண்மை கலந்தாளுநர் சரிபார்த்த பிறகு பூங்காத்துறை (தலைமையிடம்) மூலம் பட்டித்தீர்வு செய்து நிதி மேலாண்மைப் பிரிவு (FM Unit) மூலம் அந்தந்த மண்டலங்களுக்கு அம்மாதத்திற்குரிய தினக்கூலி தொகையினை வழங்க அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 11.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.06.2026 அன்று தீர்மான எண்.19/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.129/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

அ.து.ந.க.எண்.அ3/370/2026

தீர்மான எண்: 256/2026 **பொருள் எண்.22**

பெருநகர சென்னை மாநகராட்சி – அரங்கத்துறை – 2026-27 ஆம் ஆண்டு மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு – மூலதன நிதியின் (Capital Fund) –

மண்டலம் – 02 மற்றும் 01 - இரண்டு விளையாட்டுத் திடல்களுக்கு ECO BLOCஐ பயன்படுத்தி நீர் உறிஞ்சும் வகையில் மழைநீர் சேமிப்புத் தொட்டிகள் (Eco Bloc based Sponge Park) பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் மின்னணு ஒப்பம் கோர அனுமதி.

தலைமைப் பொறியாளர் (பூ(ம)வி), அவர்களின் தொழில்நுட்ப அனுமதியின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 02 மற்றும் 01ல் இரண்டு விளையாட்டுத் திடல்களுக்கு ECO BLOCஐ பயன்படுத்தி நீர் உறிஞ்சும் வகையில் மழைநீர் சேமிப்புத் தொட்டிகள் (Eco Bloc based Sponge Park) பணிக்கு மண்டல செயற் பொறியாளர் அவர்களால் மதிப்பீடுகள் பெறப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

அட்டவணை – I

Sl. No	Zone	Dn	Description of works	Estimate Amount (Rs. in Lakhs)
1	2	16	Formation of Eco Bloc Based Sponge Play ground by using Eco Blocs at Existing Playfields at Baruma nagar In Thiruvotiyur Div- 16, Zone-2	499.00
2	1	04	Formation of Eco Bloc Based Sponge Play ground by using Eco Blocs at Existing Playfields at Jothi nagar In Thiruvotiyur Div- 04, Zone-1	499.50

எனவே,

1. மண்டலம் – 02 மற்றும் 01ல் இரண்டு விளையாட்டுத் திடல்களுக்கு ECO BLOCஐ பயன்படுத்தி நீர் உறிஞ்சும் வகையில் மழைநீர் சேமிப்புத் தொட்டிகள் (Eco Bloc based Sponge Park) பணிக்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிகளுக்கு மூலதன நிதி 412-400-100 என்ற கணக்கு தலைப்பின் கீழ் அரங்கத்துறைக்கு ஒதுக்கீடு செய்வதற்கு ஒப்புதலும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.12/2026, நாள்.11.06.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.111/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ஓ.க.ம.க.மை.ந.க.எண்.10/2026

தீர்மான எண்: 257/2026 **பொருள் எண்.23**

பெருநகர சென்னை மாநகராட்சி – பெருநகர சென்னை மாநகராட்சியின் "ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை வடிவமைத்து, வழங்கி, செயல்படுத்தி, ஆணையிட்டு, இயக்கி மற்றும் பராமரித்தல்" தொடர்பாக – ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் (ICCC) இயக்கம் மற்றும் பராமரிப்பு (O&M) சேவைகளை 01.06.2026 முதல் 30.11.2026 வரை கூடுதல் 6 மாதங்கள் நீட்டித்தல் – தொடர்புடைய செயல்பாட்டு செலவுகள் மற்றும் அனுமதிக்கத்தக்க மின்சாரகட்டண (EB CC Charges) ஈடு செய்தலை தொடர்வதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி மற்றும் பணி ஆணை வழங்குவதற்கு அனுமதி

ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டுமையம் (ICCC) ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் முக்கிய முயற்சியாக வடிவமைக்கப்பட்டு, நிறுவப்பட்டு, இயக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு சென்னை நகரில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான System Integrator ஆக M/s. Kerala State Electronics Development Corporation Ltd. (KELTRON) நிறுவனம், M/s. Acetech Machinery Components India Pvt. Ltd. நிறுவனத்துடன் கூட்டிணைவாக, அக்டோபர் 2018 இல் தேர்வு செய்யப்பட்டது. அந்த நிறுவனம் ICCC கட்டமைப்பு மற்றும் தளத்தை வெற்றிகரமாக வடிவமைத்து, வழங்கி, செயல்படுத்தி, நவம்பர் 2020 இல் ஆணையிட்டது. அதன் பின்னர் 01.12.2020 முதல் இயக்கம் மற்றும் பராமரிப்பு (O&M) காலம் ஆணையிடப்பட்டது

ஒப்பந்த நிபந்தனைகளின்படி, SI நிறுவனம் ICCC தளத்தை ஐந்து ஆண்டுகள் (20 காலாண்டுகள்) வரை நிர்ணயிக்கப்பட்ட Service Level Agreement (SLA) விதிமுறைகளின்படி இயக்கி பராமரிக்க வேண்டியிருந்தது. SLA குறைபாடுகள் ஏற்பட்டால், அதற்கான அபராதத்தொகைகள் காலாண்டு O&M கட்டணங்களில் இருந்து கழிக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றன.

அதன்படி, 21வது, காலாண்டு நிறைவடையும் வரை மொத்தமாக ₹3,80,28,689.70 அபராதத்தொகை SI நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. காலாண்டு வாரியான அபராதவிவரங்கள் இணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளன.

5வது, மற்றும் 7வது, காலாண்டுகளில், ஏற்பட்ட செயல்பாட்டு குறைபாடுகள் மற்றும் SLA மீறல்களின் காரணமாக, SI நிறுவனம் இழப்பீட்டு அடிப்படையில் கூடுதல் இரண்டு காலாண்டுகளுக்கு O&M சேவைகளை கூடுதல் கட்டணமின்றி வழங்க ஒப்புக்கொண்டது. அதன் அடிப்படையில், முதலில் 30.11.2025 அன்று நிறைவடைய இருந்த O&M காலம் 31.05.2026 வரை நீட்டிக்கப்பட்டு தற்போது 22 ஆம் காலாண்டு நிறைவுறும் தருவாயில் உள்ளது.

தற்போது ICCC சென்னை நகரின் முக்கிய அவசர மற்றும் ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக:

- பருவமழை முன்னெச்சரிக்கை மற்றும் வெள்ள மேலாண்மை
- புயல் மற்றும் பேரிடர் ஒருங்கிணைப்பு
- அவசரநிலை கண்காணிப்பு மற்றும் குறைதீர் மேலாண்மை
- நகர செயல்பாடுகளின் நேரடி கண்காணிப்பு மற்றும் துறை ஒருங்கிணைப்பு

போன்ற முக்கிய பணிகளில் ICCC முக்கிய பங்காற்றிவருகிறது.

மேலும், Greater Chennai Police, TANGEDCO, பேரிடர் மேலாண்மை அமைப்புகள் மற்றும் பிறதுறைகளுடன் ஒருங்கிணைந்த செயல்பாடுகளையும் ICCC , இயங்கிவருகிறது

ICCC நகரளவிலான குறைதீர் மேலாண்மை, அவசரநிலை ஒருங்கிணைப்பு, IoT அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்புகள், கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் GCC அதிகாரிகளுக்கான நேரடி செயல்பாட்டு டாஷ்போர்டுகளையும் ஆதரிக்கிறது.

ICCC முக்கியத்துவம் மற்றும் வரவிருக்கும் பருவமழை காலத்தை கருத்தில் கொண்டு, ICCC சேவைகள் இடையூறு இல்லாமல் தொடர்ந்து செயல்படுவது நிர்வாகரீதியாக அத்தியாவசியமாகும். தற்போதைய SI நிறுவனம் வெள்ளம், புயல், பருவமழை மற்றும் அவசரநிலை நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு பேரிடர் சூழல்களில் ICCC மூலம் வெற்றிகரமாக செயல்பட்ட அனுபவம் கொண்டுள்ளது.

மேலும், O&M காலத்தில் ICCC 2.0 முயற்சிகளின் கீழ் 900–க்கும் மேற்பட்ட கூடுதல் IoT சாதனங்கள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய SI ஒப்பந்தம் 31.05.2026 அன்று நிறைவடைவதால், ICCC சேவைகள் தடையின்றி தொடரும் வகையில் 01.06.2026 முதல் 30.11.2026 வரை கூடுதல் 6 மாதங்களுக்கு O&M சேவைகளை நீட்டிக்கமுன் மொழியப்படுகிறது.

இது குறித்து ஆணையர் அவர்களிடம் பெற்ற அனுமதியின் தொடர்ச்சியாக, பணி ஏற்புகடிதம் வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

மேலும், ICCC திட்டத்தின் O&M செலவினங்கள் ஆரம்ப கட்டத்தில் Chennai Smart City Limited (CSCL) நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டன. CSCL மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி, ICCC OPEX செலவினங்கள் முதல் 10 காலாண்டுகள் (Q1 முதல் Q12 வரை) வரை CSCL நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு, அதன் பின்னர் Smart City Mission நிதியில் இருந்து மீதமுள்ள தொகைகள் GCC–யின் பிற நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்களுக்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்ட காரணத்தினால், மீதமுள்ள காலாண்டுகளுக்கான O&M செலவினங்கள் GCC நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, ஆணையர் அவர்கள் ICCC O&M செலவினங்கள் மற்றும் EB reimbursement செலவுகளுக்காக GCC நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியுள்ளார். அதன்படி, Q13 முதல் Q22 வரையிலான O&M செலவுகள் GCC Core Funds மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ICCC field infrastructure–க்கு தொடர்புடைய மின்சார பயன்பாட்டு கட்டண (EB CC Charges) ஈடுசெய்தலுக்காக வருடத்திற்கு சுமார் ₹1 கோடி அளவிலான நிதி தேவையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ICCC திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள VMDs, கண்காணிப்பு அமைப்புகள், சுற்றுச்சூழல் சென்சார்கள், தொடர்பு சாதனங்கள் மற்றும் பிற களஉபகரணங்கள் அனைத்தும் தனித்தனி TANGEDCO மின் இணைப்புகளின் மூலம் இயங்குகின்றன.

RFP மற்றும் திருத்த அறிவிப்புகளின்படி, மின்சார பயன்பாட்டு கட்டணங்கள் (EB CC Charges) உண்மையான பயன்பாடு மற்றும் தகுதி அடிப்படையில் GCC மூலம் ஈடுசெய்யப்பட வேண்டியவையாகும். O&M காலத்தில் EB Current Consumption (CC) கட்டணங்கள் காலமுறைப்படி பரிசீலித்து ஈடுசெய்யப்பட்டு வருகின்றன.

ICCC O&M சேவைகள் தொடர்ச்சி, செயல்பாட்டு செலவின உயர்வு, மற்றும் Performance Bank Guarantee தொடர்பான நிர்வாக மற்றும் ஒப்பந்த அம்சங்கள் பரிசீலிக்கப்பட்டபோது, தற்போதைய O&M நீட்டிப்பு ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள நிலையான சேவைகளுக்கானதாக இருப்பது கவனத்தில் கொள்ளப்பட்டது.

RFP–இன் Special Conditions of Contract (SCC) Clause 27–இன் படி, ஆரம்பகட்ட திட்ட அமலாக்கம், நிறுவல், ஒருங்கிணைப்பு மற்றும் commissioning தொடர்பான அபாயங்களை கருத்தில் கொண்டு 10% Performance Security நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

தற்போது முன் மொழியப்படும் நீட்டிப்பு என்பது ஏற்கனவே முழுமையாக செயல்பாட்டில் உள்ள ICCC தளத்தின் O&M சேவைகளை மட்டும் தொடர்வதற்கானதாகும். மேலும், SCC Clause 27.2–இல் குறிப்பிடப்பட்டுள்ள phased Performance Security retention/release provisions–ஐ கருத்தில் கொண்டும், தற்போதைய operational phase–இன் தன்மையை பொருட்படுத்தியும், extension காலத்திற்கு 2% அளவிலான Performance Bank Guarantee பெறுவது நிர்வாக ரீதியாக பொருத்தமானதாக கருதப்படுகிறது.

மேலும், ICCC உள்கட்டமைப்பு நிறுவப்பட்டு ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் நிலையிலும், 2018 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட அதே ஒப்பந்த O&M செலவில் சேவைகள் தொடரப்படுவதன் மூலம் GCC கணிசமான நிதி மற்றும் செயல்பாட்டு பயன்களை தொடர்ந்து பெற்று வருகிறது.

விவரங்கள்	தொகை
மொத்த ஒப்பந்த மதிப்பு (GST உட்பட)	₹148,15,70,296/–
25% வரை அனுமதிக்கத்தக்க அதிகபட்ச நீட்டிப்பு	₹37,03,92,574/–
முன்மொழியப்பட்ட நீட்டிப்பு காலம்	Q23 & Q24 (01.06.2026 முதல் 30.11.2026 வரை)
ஒரு காலாண்டிற்கான O&M கட்டணம் (GST உட்பட)	₹3,91,05,755/–
இரண்டு காலாண்டுகளுக்கான மொத்த	₹7,82,11,510/–

நீட்டிப்பு செலவு	

மேற்கண்ட ₹7,82,11,510/– செலவு, அனுமதிக்கப்பட்ட 25% variation வரம்பிற்குள் இருப்பதால், நடைமுறையில் உள்ள ஒப்பந்த மற்றும் சட்டவிதி முறைகளுக்கு உட்பட்டதாகும்.

இந்த O&M நீட்டிப்பு செலவை SLA அபராத பிடித்தங்களால் ஏற்பட்ட சேமிப்பிலிருந்து பகுதியளவில் சமாளிக்கவும், மீதமுள்ள தொகையை GCC Core Funds கீழ்கண்ட தலைப்பின் கீழ் வழங்கவும் முன் மொழியப்படுகிறது:

- Department Code: CC
- Function Code: 00–02–14
- D.P. Code: 230–80–15–02
- Account Head: ICCC Expenses

ICCC சேவைகளின் முக்கியத்துவம் மற்றும் நகர செயல்பாடுகள் மற்றும் அவசர நிலை சேவைகள் இடையூறு இல்லாமல் தொடர வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு, மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

எனவே,

1) M/s. Kerala State Electronics Development Corporation Ltd. (KELTRON) நிறுவனம் மற்றும் அதன் consortium partner M/s. Acetech Machinery Components India Pvt. Ltd. நிறுவனத்திற்கு, 01.06.2026 முதல் 30.11.2026 வரை கூடுதல் இரண்டு காலாண்டுகளுக்கான ICCC O&Mசேவைகளை தற்போதைய ஒப்பந்தக் கட்டணத்தில் ₹7,82,11,510/- (GST உட்பட) செலவில் நீட்டிக்க நிர்வாக அனுமதி வேண்டியும்,
2) மேற்கண்ட செலவை GCC Core Funds கீழ்கண்ட budget head-இல் இருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

    - Department Code: CC
    - Function Code: 00-02-14
    - D.P. Code: 230-80-15-02
    - Account Head: ICCC Expenses

3) மேற்கண்ட SI நிறுவனத்திற்கு 01.06.2026 முதல் 30.11.2026 வரை O&M சேவைகள் தொடர extension Work Order வழங்க அனுமதி வேண்டியும்,
4) RFP–இன் SCC Clause 27-இல் குறிப்பிடப்பட்டுள்ள Performance Security provisions மற்றும் தற்போதைய O&M operational phase-இன் தன்மையை கருத்தில் கொண்டு, கூடுதல் O&M நீட்டிப்பு காலத்திற்கு extension contract value- இன் 2% அளவிலான Performance Bank Guarantee மட்டும் பெற அனுமதி வேண்டியும்,
    - ICCC field infrastructure-க்கு தொடர்புடைய admissible EB Current Consumption (CC) reimbursement claims-ஐ உண்மையான பயன்பாடு மற்றும் ஒப்பந்ததகுதி அடிப்படையில் தொடர்ந்து ICCC EB Charges budget head-இல் இருந்து செயல்படுத்த அனுமதி வேண்டியும்,
    - Department Code: CC
    - Function Code: 00-02-14

- D.P. Code: 220-11-01-21
- Account Head: ICCC EB Charges

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.55/2026, நாள்.17.06.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.121/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பே.த.சா.து.ந.க.எண்:பி4/0394/2026-1 (ம)2

தீர்மான எண்: 258/2026 **பொருள் எண்.24**

பெருநகர சென்னை மாநகராட்சி – பேருந்து தட சாலைகள் துறை – மண்டலம்-4, பகுதி-09, வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் வளாகத்தின் உள்ளே IWEP siteற்கு செல்லும் அணுகு சாலையிலும் மற்றும் பிரதான சாலையிலும் புதியதாக சிமெண்ட் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணிக்கு – குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர். Menakaa & Co மற்றும் திருவாளர். R.V.S Constructions., அவர்களுக்கு ஒப்பம் வழங்கியமைக்கு பின்னேற்புஅனுமதி.

மண்டலம்–4, பகுதி–09, வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் வளாகத்தின் உள்ளே IWEP siteற்கு செல்லும் அணுகு சாலையிலும் மற்றும்

பிரதான சாலையிலும் புதியதாக சிமெண்ட் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணிக்கு மாண்புமிகு மேயர் அவர்களின் 29.01.2026 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டு மன்ற தீர்மான எண்.111(ம)112, நாள் 30.01.2026ன்படி நிறைவேற்றபட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மண்டலம்–4, பகுதி–09, வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் வளாகத்தின் உள்ளே IWEP siteற்கு செல்லும் அணுகு சாலையிலும் மற்றும் பிரதான சாலையிலும் புதியதாக சிமெண்ட் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணிக்கு, "இரண்டு உறைகள்" ஒப்பம் என்ற முறையில் ஒப்ப அறிவிப்பு தமிழ் நாளிதழ் "தினகரன்" மற்றும் ஆங்கில நாளிதழ் "New Indian Express" 04.02.2026 ஆகியவற்றில் அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 05.02.2026 அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 12.02.2026 அன்று, மண்டலம்–4, பகுதி–09, வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் வளாகத்தின் உள்ளே IWEP siteற்கு செல்லும் அணுகு சாலையிலும் மற்றும் பிரதான சாலையிலும் புதியதாக சிமெண்ட் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணிக்கு பெறப்பட்ட ஒப்பங்கள் திறக்கப்பட்டு, தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் திறக்கப்பட்டு 23.02.2026 அன்று தேர்வு செய்யப்பட்டார்கள். அவற்றில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

சிப்பம்–1

பணியின் பெயர்: மண்டலம்–4, பகுதி–09, வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் உள்ளே Integrated waste to energy plant facilities (IWEP) siteற்கு செல்லும் அணுகு சாலைக்கு புதியதாக சிமெண்ட் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணி.

அட்டவணை–I–a (பி4/0394/2026, சிப்பம்–1)

S. No (1)	File No. B.R.R.C.No. (2)	No. of Bidder Partici pated (3)	No. of Bidder Quailfied (4)	Name of the L1 Bidder (5)	Tender Value with GST 18% (Rs.) (6)	Contractor Quoted % (7)	Contractor Quoted Amount Rs. (8)
1	B4/0394/2026-1	3	3	MENAKAA AND CO	36996627.06	(+)4.70 %	38735468.53

திறக்கப்பட்ட 3 ஒப்பங்களில், 3 ஒப்பந்ததாரர்கள் தகுதி பெற்றனர். அவற்றில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது 2025–26 ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் விலை கூடுதலாக இருந்ததாலும், மேலும் விலை குறைப்பு கோரி ஒப்பந்ததாரருக்கு கடிதம் அளிக்கப்பட்டது. அதற்கு ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

அட்டவணை – II–a (பி4/0394/2026, சிப்பம்–1)

S. No (1)	File No. BRR.C.No. (2)	Name of the Bidder (L1) (3)	Tender Value with GST 18% (Rs.) (4)	Contractor Quoted % (5)	After Negotiation Contractor Quoted % (6)
1	B4/0394/2026-1	MENAKAA AND CO	36996627.06	(+)4.70 %	(+)4.60 %

சிப்பம்–2

பணியின்பெயர்: மண்டலம்–4, பகுதி–09 வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் உள்ளே கேட் எண்:1 அருகே உள்ள நீர் தேங்கும் பகுதியை (B கால்வாய்) அருகில் உள்ள பிரதான சாலையுடன் இணைக்கும் புதிய சிமெண்ட் கான்க்ரிட் சாலை அமைக்கும் பணி

அட்டவணை–I–b (பி4/0394/2026, சிப்பம்–2)

S. No (1)	File No. B.R.R.C.No. (2)	No. of Bidder Partici pated (3)	No. of Bidder Quailfied (4)	Name of the L1 Bidder (5)	Tender Value with GST 18% (Rs.) (6)	Contractor Quoted % (7)	Contractor Quoted Amount Rs. (8)
1	B4/0394/2026-2	4	3	RVS CONSTRUCTIONS	68907505.00	(+)2.84%	70864478.14

திறக்கப்பட்ட 4 ஒப்பங்களில், 3 ஒப்பந்ததாரர்கள் தகுதிபெற்றனர். அவற்றில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது 2025–26 ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் விலை கூடுதலாக இருந்ததாலும், மேலும் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. ஆனால், ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு ஏதும் அளிக்க இயலாது என தெரிவித்துள்ளார். விலைக்குறைப்புக்கு பின்னர் ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

அட்டவணை – II–b (பி4/0394/2026, சிப்பம்–2)

S. No (1)	File No. BRR.C.No. (2)	Name of the Bidder (L1) (3)	Tender Value with GST 18% (Rs.) (4)	Contractor Quoted % (5)	After Negotiation Contractor Quoted % (6)
1	B4/0394/2026-2	RVS CONSTRUCTIONS	68907505.00	(+)2.84%	(+)2.84%

மேற்காணும் அட்டவணை–II–a மற்றும் II–bல் காணும் விவரங்களின்படி, சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால், ஒப்பந்ததாரர் அளித்த விலைக்குறைப்பு அலுவலக மதிப்பீட்டை விட கூடுதலாக இருந்தாலும், மூலப்பொருள்கள் விலை ஏற்றம், தொழிலாளர்கள் ஊதிய உயர்வு,போக்குவரத்து வாகன செலவு மற்றும் சுங்க சாலை கட்டணம் உயர்வினை கருத்தில் கொண்டும் விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்கள் விலைகுறைப்பிற்கு பின் அளித்துள்ள விலைப்புள்ளிகளுக்கு பணியினை வழங்க 27.02.2026 அன்று நடந்த ஒப்பங்கள்

கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கப்பட்டது. அதன் விவரம் அட்டவணை–IIIல் பின்வருமாறு.

அட்டவணை – III பி4/0394/2026, சிப்பம்–1 &2

S. No (1)	File No. BRR.C.No. (2)	Package (3)	Work Description (4)	Name of the Bidder (L1) (5)	After Negotiation Contractor Quoted Amount (Including GST 18%) (6)	After Negotiation Contractor Quoted % Based on SOR 2025-26 (7)
1	B4/0394/2026	1	Formation of new cement concrete approach road to integrated waste to energy plant facilities site (IWEP) From New Bridge to IWEP site at Kodungaiyur Dumping ground campus in Dn-37, Zone-4	MENAKAA AND CO	38476492.14	(+)4.00%
2	B4/0394/2026	2	Formation of new cement concrete link road connecting main entrance gate 1 at Kodungaiyur Dumping ground campus in Dn-37, Zone-4	RVS CONSTRUCTIONS	70864478.14	(+)2.84%

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், மண்டலம்–4, பகுதி–09 வார்டு – 37ல் கொடுங்கையூர் குப்பை கிடங்கின் வளாகத்தின் உள்ளே IWEP siteற்கு செல்லும் அணுகு சாலையிலும் மற்றும் பிரதான சாலையிலும் புதியதாக சிமெண்ட் கான்க்ரீட் சாலை அமைக்கும் பணிகளுக்கு மேற்காணும் அட்டவணை–III, கலம்–5ல் காணும் ஒப்பந்ததாரர்களுக்கு, கலம்–6ல் குறிப்பிட்டுள்ள தொகைக்கு பணிகள் வழங்கியமைக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.52/2026, நாள்.17.06.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.132/2026, நாள்.19.06.2026ன்படி

இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

பே.த.சா.து.ந.க.எண்.பி4/0574/2026-1(ம)2

தீர்மான எண்: 259/2026 பொருள் எண்.25

பெருநகர சென்னை மாநகராட்சி – பேருந்து தட சாலைகள் துறை – மண்டலம்-11, வார்டு-143ல் கூவம் ஆற்றின் கரையோரம் (1மீ – 315மீ மற்றும் 315மீ – 490மீ) தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றி அமைத்தல் பணி – குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர். M. Kavitha மற்றும் திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt. Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்கியமைக்கு பின்னேற்புஅனுமதி.

மண்டலம்–11, வார்டு–143ல் கூவம் ஆற்றின் கரையோரம் (0மீ – 315மீ மற்றும் 315மீ – 490மீ) தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக அமைப்பதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் 24.09.2025 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டு மன்ற தீர்மான எண்.1058, நாள்.29.09.205ன்படி நிறைவேற்றபட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மண்டலம்–11, வார்டு–143ல் கூவம் ஆற்றின் கரையோரம் (0மீ – 315மீ மற்றும் 315மீ – 490மீ) தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றி அமைத்திட, "இரண்டு உறைகள்" ஒப்பம் என்ற முறையில் ஒப்ப அறிவிப்பு தமிழ் நாளிதழ் "தினகரன்" மற்றும் ஆங்கில நாளிதழ் "The Times of India" ஆகியவற்றில் 18.02.2026 அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 19.02.2026 அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 26.02.2026 அன்று, மண்டலம்–11, வார்டு–143ல் கூவம் ஆற்றின் கரையோரம் (0மீ – 315மீ மற்றும் 315மீ – 490மீ) தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றி அமைத்தல் பணிக்கு பெறப்பட்ட ஒப்பங்கள் திறக்கப்பட்டு, தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் திறக்கப்பட்டு 26.02.2026 அன்று

தேர்வு செய்யப்பட்டார்கள். அவற்றில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

சிப்பம்–1

பணியின் பெயர்: மண்டலம்–11, வார்டு–143ல் கூவம் ஆற்றின் கரையோரம் (315மீ – 490மீ) தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றி அமைத்தல் பணிக்கு 5 ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டு, 26.02.2026 அன்று அவர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டது. இதில் 4 ஒப்பந்ததாரர்கள் தகுதி பெற்றனர். தகுதி பெற்ற 4 ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணங்கள் 28.03.2026 அன்று திறக்கப்பட்டது. அதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர். M.Kavitha அவர்களின் விலை விவர பட்டியல் பின்வருமாறு.

அட்டவணை–I–(a) (பி4/0574/2026, சிப்பம்–1)

S. No (1)	File No. B.R.R.C.No. (2)	No. of Bidder Partici pated (3)	No. of Bidder Quailfied (4)	Name of the L1 Bidder (5)	Tender Value with GST 18% (Rs.) (6)	Contractor Quoted % (7)	Contractor Quoted Amount Rs. (8)
1	B4/0574/2026-1	5	4	M. Kavitha	59602381.41	(-)15.00 %	50662620.22

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர். M.Kavitha அவர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. ஆனால், ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு ஏதும் அளிக்க இயலாது என தெரிவித்துள்ளார். விலைக்குறைப்புக்கு பின்னர் ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

அட்டவணை – I–(b) (பி4/0574/2026, சிப்பம்–1)

S. No (1)	File No. BRR.C.No. (2)	Name of the Bidder (L1) (3)	Tender Value with GST 18% (Rs.) (4)	Contractor Quoted % (5)	After Negotiation Contractor Quoted % (6)
1	B4/0574/2026-1	M. Kavitha	59602381.41	(-)15.00 %	(-)15.00 %

சிப்பம்–2

பணியின் பெயர்: மண்டலம்–11, வார்டு–143ல், (0மீ – 315மீ) மாதா கோயில் 6வது குறுக்கு தெரு முதல் சின்ன நொளம்பூர் பாலம் வரை, கூவம் ஆற்றின் ஓரம் தடுப்பு சுவர் அமைத்தல் பணி மேற்கண்ட பணிக்கு 6 ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டு, 26.02.2026 அன்று அவர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டது. இதில் 5 ஒப்பந்ததாரர்கள் தகுதி பெற்றனர். தகுதி பெற்ற 5 ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணங்கள் 28.03.2026 அன்று திறக்கப்பட்டது. அதில் பணிக்கான ஒப்ப நிபந்தனைகள் வ.எண். 12.4ன் படி, குறைந்தபட்ச விலைப்புள்ளியாக, திருவாளர்.M.Kavitha, திருவாளர்.Thomas Iyadurai Infrastructure Pvt. Ltd. மற்றும் திருவாளர். Sree Venkateswara Constructions ஆகிய மூன்று

ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் சம விகிதத்தில் ஒப்பந்த விலைபுள்ளிகள் பெறப்பட்டது. அவர்களின் விலை விவர பட்டியல் பின்வருமாறு.

அட்டவணை–II–(a) (பி4/0574/2026, சிப்பம்–2)

S. No. (1)	File No. B.R.R.C.No. (2)	No. of Bidder Partici pated (3)	No. of Bidder Quailfied (4)	Name of the L1 Bidder (5)	Tender Value with GST 18% (Rs.) (6)	Contractor Quoted % (7)	Contractor Quoted Amount Rs. (8)
1	B4 /0574 / 2026-2	6	5	M. Kavitha	54527817.61	(-)14.999%	46349190.24
2				Thomas Iyadurai Infrastructure Pvt. Ltd.		(-)14.99%	46354097.75
3				Sree Venkateswara Constructions		(-)14.99%	46354097.75

சம விகிதத்தில் ஒப்பந்த விலைப்புள்ளி அளித்திருந்த மூன்று ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அவற்றில், குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

அட்டவணை – II–b (பி4/0574/2026, சிப்பம்–2)

S. No (1)	File No. BRR.C.No. (2)	Name of the Bidder (L1) (3)	Tender Value with GST 18% (Rs.) (4)	Contractor Quoted % (5)	After Negotiation Contractor Quoted % (6)
1	B4/0574/2026-2	Thomas Iyadurai Infrastructure Pvt. Ltd.	54527817.61	(-)14.99%	(-)21.29%

மேற்காணும் அட்டவணை–I–b மற்றும் II–bல் காணும் விவரங்களின்படி, சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால், ஒப்பந்ததாரர் அளித்த விலைக்குறைப்பு அலுவலக மதிப்பீட்டைவிட குறைவாக உள்ளதாலும், மூலப்பொருள்கள் விலை ஏற்றம், தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, போக்குவரத்து வாகன செலவு மற்றும் சுங்க சாலை கட்டணம் உயர்வினை கருத்தில் கொண்டும் விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்கள் விலைகுறைப்பிற்கு பின் அளித்துள்ள விலைப்புள்ளிகளுக்கு பணியினை வழங்க 03.03.2026 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கப்பட்டது. அதன் விவரம் அட்டவணை–IIIல் பின்வருமாறு.

அட்டவணை – III பி4/0574/2026, சிப்பம்–1 & 2

S. No (1)	File No. B.R.R.C.No. (2)	Package (3)	Work Description (4)	Name of the Bidder (L1) (5)	After Negotiation Contractor Quoted Amount (Including GST 18%) (6)	After Negotiation Contractor Quoted % Based on SOR 2025-26 (7)
1	B4/0574/2026	1	Construction of Retaining Wall from Chainage 315m to 490m Abutting Cooum River and Forming of Culvert and BT Road at Union Road in Division-143, Zone-11.	M. Kavitha	50662620.22	(-)15.00%
2	B4/0574/2026	2	Construction of Retaining Wall Abutting Cooum River at Union Road from Chainage 0m to 315m (from Madha Koil Cross Street to Chinna Nolambur bridge) in Division-143, Zone-11.	Thomas Iyadurai Infrastructure Pvt. Ltd.	42918845.24	(-)21.29%

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், மண்டலம்–11, வார்டு–143ல் கூவம் ஆற்றின் கரையோரம் (0மீ – 315 மீ (ம) 315மீ – 490மீ) தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கு மேற்காணும் அட்டவணை–III, கலம்–5ல் காணும் ஒப்பந்ததாரர்களுக்கு, கலம்–6ல் குறிப்பிட்டுள்ள தொகைக்கு பணி வழங்கியமைக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.51 /2026, நாள். 17.06.2026–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இவ்வினத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி நிர்ணயித்த ஒப்பத் தொகையைவிட ஒப்பந்ததாரர்கள் குறைவான சதவீதத்தில் ஒப்பபுள்ளி அளித்துள்ளதால் பணியின் தரத்தினை உறுதி செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன்

தீர்மான எண். 131/2026, நாள்.19.06.2026ன்படி இதனை நிலைக்குழு (வவிமநி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

பொ.து.ந.க.எண்.ஈ3/13266/2026

தீர்மான எண்: 260/2026 **பொருள் எண்.26**

பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – பணியமைப்பு – அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.

அரசாணை (வாலாயம்) எண்.1745, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.18.05.2026, அரசாணை (வாலாயம்) எண்.1952, பொது (சிறப்பு–அ) துறை, நாள். 02.06.2026, அரசாணை (வாலாயம்) எண்.2047, பொது (சிறப்பு–அ) துறை, நாள். 09.06.2026, அரசாணை (வாலாயம்) எண்.816, பொது (சிறப்பு–அ) துறை, நாள். 06.03.2026, அரசாணை (2டி) எண்.311, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணிகள் அலகு, பணி எண்.1 பிரிவு, நாள். 26.02.2026. அரசாணை (2டி) எண்.316, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணிகள் அலகு, பணி எண்.1 பிரிவு, நாள். 26.02.2026 மற்றும் மாவட்ட ஆட்சியர் (பொ.) அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/001/2026, நாள்: 13.05.2026ன்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
1.	டாக்டர்.ஜி.எஸ்.சமீரன், ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி.	அரசாணை (வாலாயம்) எண்.1745, பொது (சிறப்பு–அ), நாள்.18.05.2026.	19.05.2026 மு.ப.

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
2	திரு.செ.சரவணன், இணை ஆணையர் (பணிகள்), பெருநகர சென்னை மாநகராட்சி.	அரசாணை (வாலாயம்) எண். 1952, பொது (சிறப்பு–அ), நாள்.02.06.2026.	09.06.2026 மு.ப.
3.	திருமதி.சித்ரா விஜயன், துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) பெருநகர சென்னை மாநகராட்சி.	அரசாணை (வாலாயம்) எண். 2047, பொது (சிறப்பு–அ), நாள்.09.06.2026	10.06.2026 மு.ப.
4.	திரு.நா.காளிதாஸ், மாவட்ட வருவாய் அலுவலர்/ உதவி ஆணையர் முதுநிலை (மண்டலம்) மண்டலம்–13, பெருநகர சென்னை மாநகராட்சி.	அரசாணை (வாலாயம்) எண். 816, பொது (சிறப்பு–அ), நாள்.06.03.2026	09.03.2026 மு.ப.
5.	திருமதி.ம.ரா.கண்ணகி, மாவட்ட வருவாய் அலுவலர் (அம்மா உணவகம்) மண்டலம்–13, பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (வாலாயம்) எண். 816, பொது (சிறப்பு–அ), நாள்.06.03.2026	16.03.2026 மு.ப.
6.	திரு.இரா.ராஜன் பாபு, துணை ஆட்சியர் (நிலம் (ம) உடைமைத்துறை வட்டார அலுவலகம் (தெற்கு), பெருநகர சென்னை மாநகராட்சி.	அரசாணை 2டி) எண்.311, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணிகள் அலகு, பணி எண்–1, பிரிவு, நாள்.26.02.2026.	04.03.2026 மு.ப.
7.	திருமதி.சீ.சொரூபராணி,	அரசாணை 2டி) எண்.316, வருவாய்	09.03.2026

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
	துணை ஆட்சியர் (நிலம்(ம)உடைமைத்துறை), வட்டார அலுவலம் (வடக்கு), பெருநகர சென்னை மாநகராட்சி	மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணிகள் அலகு, பணி எண்–1, பிரிவு, நாள்.26.02.2026.	மு.ப.
8.	திரு.R.பிரகாஷ், தனி வட்டாட்சியர், வட்டார அலுவலகம் (வடக்கு), பெருநகர சென்னை மாநகராட்சி	சென்னை மாவட்ட ஆட்சியர் (பொ) அவர்களது செயல்முறை ஆணை எண்.அ1/001/2026, நாள்.13.05.2026	18.05.2026 மு.ப.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

சகு.நக.எண்.சகு.1/00933/2026

தீர்மான எண்: 261/2026 **பொருள் எண்.27**

பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – சட்ட குழுமம் – நிலை வழக்குரைஞர்களை பணிக்கால நீட்டிப்பு செய்தமைக்கும் தொடர் கட்டணம் (Retainer Fees) வழங்கவும் –மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

மன்ற தீர்மான எண்.326/2022, நாள்.30.07.2022, மன்ற தீர்மான எண்.358/2022, நாள்.30.08.2022 மற்றும் மன்ற தீர்மான எண்.710/2022, நாள்.28.11.2022 ஆகிய மன்ற தீர்மானங்களின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக நீதிமன்ற வழக்குகளை கையாளுவதற்காக 24 நிலை வழக்குரைஞர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

மேற்காணும், 24 நிலை வழக்குரைஞர்களில் திரு. நூருதின் அவர்கள் குற்றவழக்கில் சம்மந்தப்பட்டு கைது செய்யப்பட்டதால் 19.05.2023 நாளிட்ட ஆணையின்படி, நிலை வழக்குரைஞர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார்.

மன்ற தீர்மான எண்.575/2023, நாள்.31.10.2023 மற்றும் மன்ற தீர்மான எண்.035/2024ன்படி, முறையே 2 (ம) 3 நிலை வழக்குரைஞர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, அதில் ஒருவர் முறையாக வழக்குகளை கையாளாததால் நிலை வழக்குரைஞர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

மன்ற தீர்மான எண்.369/2024, நாள். 30.09.2024ன்படி மேற்காணும் 23 நிலை வழக்குரைஞர்களுக்கு முறையே 01.08.2023 முதல் 31.01.2024 வரையிலும் மற்றும் 01.02.2024 முதல் 31.05.2024 வரையிலும் காலநீட்டிப்பு செய்யவும் மற்றும் தொடர் கட்டணம் வழங்கவும் ஆணை பெறப்பட்டது.

நிலை வழக்குரைஞர்களின் விவரங்கள் பின்வருமாறு,

அட்டவணை – I

வ. எண்	நிலை வழக்குரைஞர்களின் பெயர் திரு / திருமதி	பதிவு எண்	பணி ஒதுக்கீடு
1	G.T .சுப்ரமணியன்	Ms.998/1989	உயர்நீதிமன்றம்
2	A.C.மணிபாரதி	Ms.936/1999	உயர்நீதிமன்றம்
3	G. ஸ்ரீராம்	Ms.1018/1993	நகரஉரிமையியல் நீதிமன்றம்
4	D. புவனசுந்தரம்	Ms.405/1993	நகரஉரிமையியல் நீதிமன்றம்
5	P .சின்னராஜா	Ms.757/2005	நகரஉரிமையியல் நீதிமன்றம்
6	J .சீனிவாசன்	Ms.3191/2007	நகரஉரிமையியல் நீதிமன்றம்

7	A. அருண்பாபு	Ms.98/1997	உயர்நீதிமன்றம்
8	S. கோபிநாதன்	Ms.8481/1991	உயர்நீதிமன்றம்
9	P. T .ரமாதேவி	Ms.1732/2000	உயர்நீதிமன்றம்
10	K. அஸ்வினிதேவி	Ms.1049/2009	உயர்நீதிமன்றம்
11	D.B.R. பிரபு	Ms.2187/2005	உயர்நீதிமன்றம்
12	E.C. ரமேஷ்	Ms.355/2004	உயர்நீதிமன்றம்
13	M. மணிவேலன்	Ms.226/2016	நகரஉரிமையியல் நீதிமன்றம்
14	S. சந்தோஷ்	Ms.1290/2007	நகரஉரிமையியல் நீதிமன்றம்
15	S.S.தேன்மொழி	Ms.2157/2006	நகரஉரிமையியல் நீதிமன்றம்
16	R.ஸ்ரீதர்	Ms.1049/2006	உயர்நீதிமன்றம்
17	ப்பி.பிரித்வி சோப்டா	Ms.2817/15	உயர்நீதிமன்றம்
18	எம்.சுரேஷ்குமார்	Ms.727/1994	நகரஉரிமையியல்நீதிமன்றம்
19	எஸ்.வனிதாஜாய்ஸ்ராணி	Ms.1414/2007	நகரஉரிமையியல்நீதிமன்றம்
20	ஜெ. ஜென்னி	E.777/2005	நகரஉரிமையியல்நீதிமன்றம்
21	என்.ஆர். ரமேஷ்கண்ணா	Ms.1476/1994	தேசிய பசுமை தீர்ப்பாயம்
22	எம்.பி.சிவஞானம்	Ms 4027/2012	நகரஉரிமையியல்நீதிமன்றம்
23	எம். புருஷோத்தமன்	Ms. 87/2018	நகரஉரிமையியல்நீதிமன்றம்
24	B.ரகுராமன்	MS400/2016	நகரஉரிமையியல்நீதிமன்றம்
25	J. கண்ணன்	MS3801/2018	நகரஉரிமையியல்நீதிமன்றம்
26	A. நிர்மலா ஜெயராணி	MS4148/2019	நகரஉரிமையியல்நீதிமன்றம்
27	C. கணேஷ்பாண்டியன்	MS948/2015	நகரஉரிமையியல்நீதிமன்றம்

மேற்படி, மன்ற தீர்மான எண்.450/2024, நாள். 30.10.2024 மற்றும் மன்ற தீர்மான எண்.146/2024, நாள்.24.02.2026ன்படி திரு.சி.கணேஷ்பாண்டியன், நிலை வழக்குரைஞர்

அவர்களை 01.11.2024 முதல் 30.11.2025 வரை ஓராண்டு காலத்திற்கும், மேலும், 2 மாத காலத்திற்கு 31.01.2026 வரையிலும் கால நீட்டிப்பு செய்தும் (ம) தொடர் கட்டணம் வழங்கவும் மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறப்பட்டுள்ளது.

மேலும், மன்ற தீர்மான எண்.220/2025, நாள்.28.02.2025ன்படி 26 நிலை வழக்குரைஞர்களுக்கு 01.02.2025 முதல் 31.01.2026 வரை ஓராண்டு கால நீட்டிப்பு செய்தும் (ம) தொடர் கட்டணம் வழங்கவும் மன்றத்தின் ஆணை பெறப்பட்டுள்ளது.

மேற்படி, அட்டவணையில் உள்ள 27 நிலை வழக்குரைஞர்களின் கால நீட்டிப்பு 31.01.2026 வரை முடிவு பெற்றதால், 01.02.2026 முதல் 31.01.2027 வரை மீண்டும் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும் மேலும், 27 நிலை வழக்குரைஞர்களுக்கு மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும், மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு, ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை 21.04.2026 அன்று பெறப்பட்டது.

எனவே,

1. மேற்காணும் 27 நிலை வழக்குரைஞர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக 01.02.2026 முதல் 31.07.2026 வரை or till new counsels are appointed நடைமுறை விதிகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு, ஒதுக்கப்படும் வழக்குகளை கையாள பணி நீட்டிப்பு செய்தமைக்கும்,
2. மேற்படி, 27 நிலை வழக்குரைஞர்களுக்கு மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து,

மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.09.வ.து.ந.க.எண்.ஆர்3/00377/2026

தீர்மான எண்: 262/2026 **பொருள் எண்.28**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் – 09 – வருவாய் துறை – பகுதி 26, கோட்டம் 112 – வெள்ளாளர் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 24 – பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை என்ற பெயரில் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டுள்ளது – சமுதாய நலக்கூடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், வாடகை மற்றும் முன் வைப்பு தொகை குறித்து நிர்ணயம் செய்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, உதவி பொறியாளர் அவர்களின் 24.02.2026 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் 09, பகுதி 26, கோட்டம் 112 வெள்ளாளர் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600 024 என்ற முகவரியில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகரட்சிக்கு சொந்தமான இடத்தில் பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை என்ற பெயரில் புதியதாக சமுதாய நல கூடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடம் தரை தளம் 6460 ச.அடி, முதல் தளம் 3834 ச.அடி, மற்றும் படி கூண்டு, மின்தூக்கி 392 ச.அடி ஆக மொத்தம் 10686 சதுர அடிகள் ஆகும் என தெரிவித்து அதற்கு வாடகை மதிப்பீடு செய்து கட்டணத் தொகை நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வரிமதிப்பீட்டாளர், கோட்டம் 112 அவர்களின் 25.02.2026 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட சமுதாய நலக் கூடம் தரை தளத்தில் 6460 சதுர அடிகள் முழுவதும் உணவு செய்யும், உணவருந்தும் மற்றும் கழிப்பறை இடமாகவும் மற்றும் முதல் தளத்தில் 3834 ச.அடி சுபநிகழ்ச்சி பொது மக்கள் அமரும் இடமாகவும் உள்ளதென தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 112 வெள்ளாளர் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600024 ல் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் பேரறிஞர் அண்ணா மாளிகை என்ற பெயரில் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் தண்ணீர் வசதி, மின்சார வசதி, குளியல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகள் கொண்டதாகும். இக் கட்டிடத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டி உள்ளது.

மேற்காணும் பேரறிஞர் அண்ணா மாளிகை என்ற பெயரில் உள்ள சமுதாய நலக்கூடத்திற்கு குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.7.50 (GRS) என பெருநகர சென்னை மாநகராட்சி சொத்துவரி விதிப்பில் நிர்ணயம் செய்யப்பட்டு அந்த மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கணக்கீட்டு விவரம்

கட்டிடத்தின் விவரம்

தரைதளம்	6460 ச.அடி

முதல் தளம்	3834 ச.அடி
படியறை மற்றும் மின்தூக்கி அறை	392 ச.அடி
மொத்தம்	10,686 ச.அடி

கட்டிடத்தின் மொத்த அளவு 10,686 ச.அடி x 7.50 (BSR) x 12
ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள் = ரூ. 24,044/-

ஒரு நாள் வாடகை ரூ. 24,000/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)
அரைநாள் வாடகை ரூ.12,000 /- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

மேற்கண்ட கணக்கீட்டின் படி ஒரு நாள் வாடகை ரூ. 24,000/'-, அரை நாள் வாடகை ரூ.12,000/- எனவும் (இச்சமுதாய நலக்கூடத்தில் நடத்தப்படும் சுப நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே இவ் வாடகை பொருந்தும்) நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரக் கட்டணம், நிகழ்ச்சி நடத்துபவர்களிடம் தனியே வசூலிக்கப்படும். மேலும், தற்போது நடைமுறையிலுள்ள சேவைவரி (GST) தொகை வாடகை தொகையுடன் சேர்த்து வசூலிக்கப்படும். சமுதாய நலக்கூடத்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை பொறுத்து இந்த முன் வைப்புத் தொகை ரூ.10,000/- வரை நிர்ணயம் செய்யலாம். இந்த இடம் சென்னையில் ஆற்காடு நெடுஞ்சாலையின் அருகே வெள்ளாளர் தெருவில் அமைக்கப்பட்டுள்ளது.

1. சமுதாய நலக்கூடத்தினை வாடகைக்கு ஒதுக்கீடு பெறும் விண்ணப்பதாரர், அதன் அசல் ஆணையுடன் நிகழ்ச்சி நடைபெறும் நாள் அன்று சம்மந்தப்பட்ட கோட்டம் 112 அலுவலகத்தினை அணுகி, சமுதாய நலக் கூடத்தின் சாவியினை பெற்றுக்கொள்ள வேண்டும். நிகழ்ச்சி முடிந்ததும் சமுதாய நலக்கூடத்தின் பொருட்களைத் தவிர, மற்ற அனைத்து பொருட்களும் அகற்றப்பட வேண்டும்.
2. விண்ணப்பதாரருக்கு சமுதாய நலக்கூடத்திற்கான சாவி கோட்டம் 112, கோட்ட உதவி பொறியாளர் அலுவலகத்தினால் வழங்கப்படும்.
3. நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்கட்டணத்திற்கான தொகையானது வைப்புத்தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு மீதமுள்ள தொகை மண்டல அலுவலகத்தினால் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும். வைப்புத் தொகையை விட கூடுதலாக மின்சாரம் பயன்படுத்தப்பட்டால், அதற்கான தொகையினை விண்ணப்பதாரர் மண்டலம் அலுவலகத்தில் கேட்புக் காசோலையாக செலுத்திட வேண்டும்.
4. நிகழ்ச்சியின் போது சமுதாய நலக்கூடத்திற்கு விண்ணப்பதாரரால் நடத்தப்படும் நிகழ்ச்சியால் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான இழப்பீடுத் தொகையினை விண்ணப்பதாரர் ஏற்க வேண்டும்.
5. வாடகைக்கு ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நலக்கூடத்தினை பயன்படுத்திட வேண்டும்.

6. நிபந்தனைகளை கண்காணிக்கும் பணி மற்றும் சமுதாய நலக்கூடங்களின் பராமரிப்பு பணிகள் யாவும் தொடர்ந்து மண்டல அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும்.
7. முன்பதிவு செய்த அதே சமுதாய நலக்கூடம் விண்ணப்பதாரர் கோரும் நாளில் வேறு நிகழ்ச்சிக்காக முன்பதிவு செய்யாமல் காலியாக இருக்கும் பட்சத்தில் மாற்று தேதியில் முன்பதிவு செய்வதற்கு ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்படும்.
8. வெள்ளச்சேதம், இயற்கையின் சீற்றங்கள் ஏற்படும் காலங்களில் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவசர தேவை ஏற்படின் தங்களுக்கு வாடகைக்கு விடப்பட்ட மாநகராட்சி சமுதாய நலக்கூடம் குறுகிய கால முன் அறிவிப்புடன் பொது நலன் கருதி பெருநகர சென்னை மாநகராட்சியின் அவசர உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இதன் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.
9. இச்சமுதாய நலக்கூடம் சமுதாய, கலாச்சார நிகழ்ச்சிகளுக்காக வாடகைக்கு விடப்படும். அரசியல் சார்ந்த நிகழ்ச்சிக்கு அனுமதிக்கப்படமாட்டாது.
10. அரசியல் கட்சிகள் சம்மந்தமான கொடிகள் யாதும் இக்கட்டிடத்தில் பறக்கவிடக்கூடாது.
11. நிபந்தனைகளும், வாடகை விகிதங்களும் தேவைப்படும் போது சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் மாற்றப்படலாம்.
12. மின்சார விசை உபயோகத்திற்கான யூனிட் ஒன்றுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கட்டணம் வீதம் செலுத்த வேண்டும். மின்சாரத்தின் மூலமாய் அதிக அலங்காரங்கள் செய்து கொள்ள வேண்டுமானால் பெருநகர சென்னை மாநகராட்சி, மின்சார பொறியாளரிடம் முன்னதாக உத்தரவு பெற்றுக் கொள்ள வேண்டும்.
13. அலுவல் நடத்துபவர்கள் பந்தல் விஷயமாகவும், ஒலி பெருக்கி விஷயமாகவும் வேண்டி அதற்கான உரிமை ஆணைகளை (LICENCE) தம் சொந்த செலவில் பெருநகர சென்னை மாநகர காவல் நிலையத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.
14. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு இச்சமுதாய நலக்கூடம் வாடகைக்குப் பெற வரும் விண்ணப்பங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ பூரண உரிமை உண்டு.
15. எக்காரணம் கொண்டும் முன்பதிவு ரத்து செய்யப்பட மாட்டாது. விண்ணப்பதாரரால் ரத்து செய்ய கோரும்பட்சத்தில் செலுத்தப்பட்ட வாடகை மற்றும் சேவை வரி நீங்கலாக முன்பணம் மட்டும் திரும்ப வழங்கப்படும்.

எனவே, கோட்டம் 112, பகுதி 26, வெள்ளாளர் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600024 என்ற விலாசத்தில் பேரறிஞர் அண்ணா மாளிகை என்ற பெயரில் புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு ஒரு நாள் வாடகை ரூ. 24,000/– (இருபத்து நான்காயிரம் மட்டும்), அரை நாள் வாடகை ரூ. 12,000/– (பன்னிரண்டாயிரம் மட்டும்) மற்றும் சேவை வரி (GST) தனியே என

நிர்ணயம் செய்யவும், முன் வைப்பு தொகையை ரூ.10,000/– ஆக நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரபட்டமைக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.134/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்1/365/2026

தீர்மான எண்: 263/2026 **பொருள் எண்.29**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் – 9, கோட்டம் – 120, கஜபதிலால் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005ல் – பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டுள்ளது – சமூக நல கூடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதித்து வாடகை மற்றும் முன்வைப்பு தொகையினை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 9, கோட்டம் – 120, பகுதி – 27, ராஜாஜி நகர், கஜபதிலால் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005ல் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு பொது மக்கள் சுபநிகழ்ச்சிகள் நடத்த பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி உள்ளது.

இச்சமுதாய நலக்கூடம் தரைத் தளம் 3816 ச.அடி, முதல் தளம் 3816 ச.அடி, இரண்டாம் தளம் 3816ச.அடி, மற்றும் படிகூண்டு 130ச.அடி ஆகமொத்தம் 11578ச.அடிகள் ஆகும் மேற்கண்ட சமுதாய நலக்கூடம் தரைத்தளத்தில் 3816 சஅடிகள் முழுவதும் வாகன நிறுத்தம் இடமாகவும், முதல் தளத்தில் உணவருந்தும்

இடமாகவும், இரண்டாம் தளத்தில் சுப நிகழ்ச்சி பொது மக்கள் அமரும் இடமாகவும் உள்ளது.

இந்த சமுதாய நலக்கூடம் சேப்பாக்கம் திருவல்லிகேணி சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம், தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதி, குளிர்சாதன வசதி, குளியல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ–7.50 என GRS என பெருநகர சென்னை மாநகராட்சி சொத்து வரி விதிப்பில் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, கோட்டம் –120, பகுதி 27, ராஜாஜி நகர், கஜபதிலால் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–600 005ல் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு இந்த மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

<u>கணக்கீட்டுத்தாள்</u>

கட்டிடத்தின் விவரம்

தரைதளம்	3816 ச.அடி
முதல் தளம்	3816 ச.அடி
இரண்டாம் தளம்	3816 ச.அடி
படியறை மற்றும் மின்தூக்கி அறை	130 ச.அடி
மொத்தம்	11,578 ச.அடி

<u>கட்டிடத்தின் மொத்த அளவு 11,578 ச.அடி x 7.50 (BSR)</u> x 12

ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள் = ரூ. 26,050.50/–

ஒரு நாள் வாடகை ரூ. 26,100/– (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

அரைநாள் வாடகை ரூ.13,050 /– (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

மேற்கண்ட கணக்கீட்டின் படி ஒரு நாள் வாடகை ரூ. 26,100/'–, அரை நாள் வாடகை ரூ.13,050/– எனவும் (இச்சமுதாய நலக்கூடத்தில் நடத்தப்படும் சுப நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே இவ் வாடகை பொருந்தும்) நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரக் கட்டணம், நிகழ்ச்சி நடத்துபவர்களிடம் தனியே வசூலிக்கப்படும். மேலும், தற்போது நடைமுறையிலுள்ள சேவைவரி (GST) தொகை வாடகை தொகையுடன் சேர்த்து வசூலிக்கப்படும். சமுதாய நலக்கூடத்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை பொறுத்து இந்த முன் வைப்புத் தொகை ரூ. 10,000/– வரை நிர்ணயம் செய்யலாம். இந்த இடம் சென்னையின் பிரதான பகுதியான டாக்டர். பெசன்ட் சாலையில் அமையப் பெற்றது.

1. சமுதாய நலக்கூடத்தினை வாடகைக்கு ஒதுக்கீடு பெறும் விண்ணப்பதாரர், அதன் அசல் ஆணையுடன் நிகழ்ச்சி நடைபெறும் நாள் அன்று சம்மந்தப்பட்ட கோட்டம் –120 அலுவலகத்தினை அணுகி, சமுதாய நலக் கூடத்தின் சாவியினை பெற்றுக்கொள்ள வேண்டும். நிகழ்ச்சி முடிந்ததும் சமுதாய

நலக்கூடத்தின் பொருட்களைத் தவிர, மற்ற அனைத்து பொருட்களும் அகற்றப்பட வேண்டும்.

2. விண்ணப்பதாரருக்கு சமுதாய நலக்கூடத்திற்கான சாவி கோட்டம்–120, கோட்ட உதவி பொறியாளர் அலுவலகத்தினால் வழங்கப்படும்.
3. நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்கட்டணத்திற்கான தொகையானது வைப்புத்தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு மீதமுள்ள தொகை மண்டல அலுவலகத்தினால் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும். வைப்புத் தொகையை விட கூடுதலாக மின்சாரம் பயன்படுத்தப்பட்டால், அதற்கான தொகையினை விண்ணப்பதாரர் மண்டலம் அலுவலகத்தில் கேட்புக் காசோலையாக செலுத்திட வேண்டும்.
4. நிகழ்ச்சியின் போது சமுதாய நலக்கூடத்திற்கு விண்ணப்பதாரரால் நடத்தப்படும் நிகழ்ச்சியால் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான இழப்பீடுத் தொகையினை விண்ணப்பதாரர் ஏற்க வேண்டும்.
5. வாடகைக்கு ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நலக்கூடத்தினை பயன்படுத்திட வேண்டும்.
6. நிபந்தனைகளை கண்காணிக்கும் பணி மற்றும் சமுதாய நலக்கூடங்களின் பராமரிப்பு பணிகள் யாவும் தொடர்ந்து மண்டல அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும்.
7. முன்பதிவு செய்த அதே சமுதாய நலக்கூடம் விண்ணப்பதாரர் கோரும் நாளில் வேறு நிகழ்ச்சிக்காக முன்பதிவு செய்யாமல் காலியாக இருக்கும் பட்சத்தில் மாற்று தேதியில் முன்பதிவு செய்வதற்கு ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்படும்.
8. வெள்ளச்சேதம், இயற்கையின் சீற்றங்கள் ஏற்படும் காலங்களில் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவசர தேவை ஏற்படின் தங்களுக்கு வாடகைக்கு விடப்பட்ட மாநகராட்சி சமுதாய நலக்கூடம் குறுகிய கால முன் அறிவிப்புடன் பொது நலன் கருதி பெருநகர சென்னை மாநகராட்சியின் அவசர உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இதன் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.
9. இச்சமுதாய நலக்கூடம் சமுதாய கலாச்சார நிகழ்ச்சிகளுக்காக வாடகைக்கு விடப்படும் அரசியல் சார்ந்த நிகழ்ச்சிக்கு அனுமதிக்கப்படமாட்டாது.
10. அரசியல் கட்சிகள் சம்மந்தமான கொடிகள் யாதும் இக்கட்டிடத்தில் பறக்கவிடக்கூடாது.
11. நிபந்தனைகளும், வாடகை விகிதங்களும் தேவைப்படும் போது சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் மாற்றப்படலாம்.
12. மின்சார விசை உபயோகத்திற்கான யூனிட் ஒன்றுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கட்டணம் வீதம் செலுத்த வேண்டும். மின்சாரத்தின் மூலமாய் அதிக அலங்காரங்கள் செய்து கொள்ள வேண்டுமானால் பெருநகர சென்னை மாநகராட்சி, மின்சார பொறியாளரிடம் முன்னதாக உத்தரவு பெற்றுக் கொள்ள வேண்டும்.

13. அலுவல் நடத்துபவர்கள் பந்தல் விஷயமாகவும், ஒலி பெருக்கி விஷயமாகவும் வேண்டி அதற்கான உரிமை ஆணைகளை (LICENCE) தம் சொந்த செலவில் பெருநகர சென்னை மாநகர காவல் நிலையத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.
14. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு இச்சமுதாய நலக்கூடம் வாடகைக்குப் பெற வரும் விண்ணப்பங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ பூரண உரிமை உண்டு.
15. எக்காரணம் கொண்டும் முன்பதிவு ரத்து செய்யப்பட மாட்டாது. விண்ணப்பதாரரால் ரத்து செய்ய கோரும்பட்சத்தில் செலுத்தப்பட்ட வாடகை மற்றும் சேவை வரி நீங்கலாக முன்பணம் மட்டும் திரும்ப வழங்கப்படும்.

எனவே, கோட்டம் 120, பகுதி 27, கஜபதிலால் தெரு, சென்னை 600005 புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு ஒரு நாள் வாடகை ரூ. 26,100/– (இருபதாயிரத்து நூறு மட்டும்), அரை நாள் வாடகை ரூ. 13,050/– (பதிமூன்றாயிரத்து ஐம்பது மட்டும்) மற்றும் சேவை வரி (GST) தனியே என நிர்ணயம் செய்யவும், முன் வைப்பு தொகையை ரூ.10,000/– ஆக நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "19.06.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.133/2026, நாள்.19.06.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/0257/2026

தீர்மான எண்: 264/2026 **பொருள் எண்.30**

பெருநகர சென்னை மாநகராட்சி – நிலம் மற்றும் உடைமை துறை – மண்டலம்-9, வார்டு-116 சென்னை மெரினா கடற்கரையில் கல்வியின் வளர்ச்சி குறித்த சிலை நிறுவுதல் (INSTALLATION OF KALVEEIN VALARCHI STATUE) சிலை அமைப்பதற்கு பள்ளிக்கல்வி துறையால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது – சென்னை மெரினா கடற்கரையில்

கல்வியின் வளர்ச்சி குறித்த சிலை நிறுவிட மாவட்ட அளவிலான குழுவில் உள்ள உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கையாக அரசின் ஒப்புதல் பெற வேண்டி வருவாய் நிர்வாக ஆணையருக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

அரசாணையில் கல்வியின் வளர்ச்சியினை வெளிப்படுத்தும் விதமாக சென்னையிலுள்ள மெரினா கடற்கரையில் 20.6 அடி x 12.6 அடி என்ற அளவில் சிலையினை அமைக்க பள்ளிக் கல்வித் துறையின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், மேலும், மெரினா கடற்கரையில் இச்சிலை அமையவுள்ள இடம் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் இச்சிலையினை நிறுவுவதற்கு சென்னை மாநகராட்சியிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும், மேலும் சிலை அமையவுள்ள பீடம் அமைத்திடவும் அதன் சுற்றுப்புற இடத்தினை அழகுற செய்திடவும் உரிய பணிகள் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவித்து, சென்னை மாநகரின் முக்கிய இடத்தில் இச்சிலையினை அமைப்பதால் பொதுமக்கள் பார்வையிட ஏதுவாக இருக்கும் என்றும், சென்னை மெரினா கடற்கரையில் மேற்படி சிலையினை அமைப்பதற்கு உரிய அனுமதியினை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது

மேலும் சிலை அமைப்பது தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில அகற்றல் பிரிவு, நாள்.16.09.2025 அரசாணை (நிலை) எண்.629–ன் படி புதியதாக சிலைகள் மற்றும் கொடி கம்பங்கள் நிறுவுதல், ஏற்கனவே உள்ள சிலைகள் மற்றும் கொடி கம்பங்களை மாற்றுதல் / இடம் மாற்றம் செய்தல் தொடர்பாக நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) வெளியிட்டுள்ளது. அதன் படி ஒவ்வொரு மாவட்ட அளவிலான குழுவானது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைவராகவும், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் தலைவராகவும் கீழ்கண்ட அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள்:

1. காவல் துறை கூடுதல் ஆணையர் (சென்னை நகரம்)
2. காவல்துறை துணை ஆணையர், சம்மந்தப்பட்ட காவல் துறை மாவட்டம்
3. வட்டார துணை ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி
4. உதவி ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி
5. கோட்டப்பொறியாளர், மாநில நெடுஞ்சாலை துறை
6. செயற்பொறியாளர், பொதுப்பணி துறை

சிலைகள் அமையவுள்ள இடமானது போக்குவரத்திற்கோ, பொது மக்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தாது என்றும், சட்டம்–ஒழுங்கு பிரச்சனை எழ வாய்ப்பு இல்லை என்றும், தெரியவருகிறது. எனவே, மேற்படி சிலையினை அமைக்க குழுவில் ஒப்புதல் வழங்கலாம் என மாவட்ட அளவிலான குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, வார்டு–116, மைலாப்பூர் வட்டம், திருவல்லிகேணி கிராமம், பிளாக் எண். 44, புல எண். 3371/1 (ம) 3375/1ல் சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள இடத்தில் கல்வியின் வளர்ச்சி குறித்து (Installation of Kalveein Valarchi Statue) 20.6 அடி x 12.6 அடி என்ற அளவில் சிலையினை நிறுவுவதற்கு அரசின் ஒப்புதல் பெறவேண்டி மேற்கண்ட உறுப்பினர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தி ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கையாக அரசின் ஒப்புதல் பெற வேண்டி உரிய முன்மொழிவினை வருவாய் நிர்வாக ஆணையர் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் அவர்களுக்கு 09.03.2026 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, வார்டு–116, மைலாப்பூர் வட்டம், திருவல்லிகேணி கிராமம் பிளாக் எண். 44 புல எண். 3371/1 (ம) 3375/1ல் சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள இடத்தில் கல்வியின் வளர்ச்சி குறித்து (Installation of Kalveein Valarchi Statue) 20.6 அடி x 12.6 அடி என்ற அளவில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிகுட்பட்டு சிலையினை நிறுவியதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 19.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2026 அன்று தீர்மான எண்.136/2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.2.ந.க.எண். சி1/1559/2026

தீர்மான எண்: 265/2026 **பொருள் எண்.31**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-2 – கோட்டம்–15 முதல் 22 வரை – அண்டை வீட்டு திட்டத்தின் கீழ் (சுய உதவி குழுக்கள் மூலம் -SHG) கோட்ட அலுவலகம், பகுதி அலுவலகம், மண்டல அலுவலகம், மற்றும் லாரி நிலையம் ஆகிய இடங்களில் தூய்மை பணி செய்யும் 85 தற்காலிக தினக்கூலி பணியாளர்களின் பணிக்காலம் 13.06.2026 அன்று முடிவடையவுள்ளது – இந்த பணியாளர்களின் பணிக்காலத்தினை 17.06.2026 முதல் 16.06.2027 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு பணிநீடிப்பு செய்ய நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2ல் (மணலி) பகுதி–4 மற்றும் 5, வார்டு–15 முதல் 22 வரை 43.93 சதுர கி.மீ பரப்பளவுள்ள 8 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 12 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1344 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் மண்டலம்–2 பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தின் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருவதால் இப்பகுதியில் தோராயமாக 60 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் தினந்தோறும் சேகரிக்கப்படும், தூய்மை பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு 332 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே.) அவர்களின், 10.03.2021 நாளிட்ட குறிப்பில், மண்டலம்–2ல் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தனியார் மயமாக்கப்பட்டு ளதால், மண்டலங்களில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு 113 பணியாளர்களை ஒதுக்கீடு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மண்டலம்–2ல் தற்காலிக பணியாளர்கள் எவரும் நியமிக்கப்படாததால், ஆணையர் அவர்களின் 01.05.2025 நாளிட்ட நிர்வாக அனுமதியின்படி, அண்டை வீட்டு குழுவின் கீழ் 85 SHG தற்காலிக பணியாளர்களை கொண்டு 14.06.2025 முதல் 13.06.2026 வரை பணிபுரிய நிர்வாக அனுமதி ஒப்புதல் பெறப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது 13.06.2026 அன்றுடன் முடிவடையும் தருவாயில் உள்ளதால், 14.06.2026 முதல் 16.06.2026 வரை மூன்று தினங்களுக்கு இடைவெளி அளித்து நிர்வாக நலன்கருதி 17.06.2026 முதல் 16.06.2027 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு பணிநீடிப்பு செய்ய நிர்வாக அனுமதி பெற வேண்டியது அவசியமாகிறது.

இந்நிகழ்வில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின்படி திடக்கழிவு மேலாண்மைத்துறையின் கீழ் வரும் அனைத்து மண்டலங்களிலும் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்டுள்ள தற்காலிக

தினக்கூலி தூய்மை பணியாளர்களுக்கு (Unskilled worker) நாள் ஒன்றிற்கு 01.04.2025 முதல் தினக்கூலி ரூ.753/– லிருந்து ரூ,761/– ஆக உயர்த்தி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது. மண்டலம்–2ல் SHG அண்டை வீட்டு குழுவின் கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

வ. எண்	பணிபுரியும் இடம்	தற்போது பணிபுரியும் மற்றும் பணி நீட்டிப்பு செய்ய வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை
1.	கோட்ட அலுவலகம் (வார்டு –15 முதல் 22 வரை) மற்றும்	47 நபர்கள்
2.	மண்டல அலுவலகம்	18 நபர்கள்
3.	பூங்கா தூய்மை பணி (மியா வாக்கி)	5 நபர்கள்
4.	பகுதி அலுவலகம் 4 மற்றும் 5	10 நபர்கள்
5.	லாரி நிலையம் தூய்மை பணி	5 நபர்கள்
	மொத்தம்	**85 நபர்கள்**

எனவே,

1 மண்டலம்-2, பகுதி-4 மற்றும் 5 வார்டு -15 முதல் 22 வரை பகுதிகளில் கோட்ட அலுவலகம், பகுதி அலுவலகம், மண்டல அலுவலகம் மற்றும் லாரிநிலையம் ஆகிய இடங்களில் பணிபுரியும் மொத்தம் 85 (SHG) தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு 17.06.2026 முதல் 16.06.2027 வரை பணிபுரிய பணிநீடிப்பு செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி 17.06.2026 முதல் பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

2 மேற்கண்ட பணியாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.761/– வீதம் 85 பணியாளர்களுக்கு 17.06.2026 முதல் 16.06.2027 வரை ரூ.761 x 85 நபர்கள் x 365 நாட்கள் = ரூ. 2,36,10,025/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து பத்தாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) கணக்கு குறியீடு 40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண் எண்.210 – 100 – 601 (Payment to Casual Staff Conservancy Works) கீழ் மேற்கொள்ளவும். மேற்கண்ட தொகையினை நிதிஆலோசகர் அவர்கள் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து

கொள்ளவும்,

3 மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.761/- என்பது 2025 – 2026 ஆம் ஆண்டு அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம், எதிர்வரும் காலங்களில் 2026-2027 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியம் அரசினால் உயர்த்தி நிர்ணயம் செய்யப்படின், அவ்வாறு உயர்த்தி வழங்கும் தினக்கூலி ஊதியத்தை வழங்க அனுமதி வேண்டியும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 16.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2026 அன்று தீர்மான எண்.059/2026–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 19.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின்படி, மண்டலம்-2ல் துப்புரவு பணிகள் தொய்வின்றி நடைபெற, 60 வயதுக்கு மேற்பட்ட பணியாளர்கள், நீண்ட நாள் பணிக்கு வராத பணியாளர்கள் மற்றும் முழு உடற்தகுதி இல்லாத தற்காலிக துப்புரவு பணியாளர்களையும் பணியிலிருந்து விடுவித்து அவர்களுக்கு பதிலாக புதிய பணியாளர்களை பணியமர்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2026 அன்று தீர்மான எண்.135/2026–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.இ4/6623/2026

தீர்மான எண்: 266/2026 பொருள் எண்.32

பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை தலைமையாசிரியர்கள் மூலமாக நியமிக்கவும் மற்றும் அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக ECS மூலம் வழங்குவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப்பள்ளிகளும், 130 நடுநிலைப்பள்ளிகளும், 46 உயர்நிலைப்பள்ளிகளும் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர்களின் சேர்க்கை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டங்களால் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை இக்கல்வியாண்டிலும் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக இடைநிலை ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்துவது அவசியமாகிறது. தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் D.T.Ed. தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

2025–2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் நலன் கருதி 61 தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் ரூ.12,000/– ஊதியத்தில் மன்றத்தீர்மான எண்.737/2025, நாள்.30.06.2025ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டனர்.

தற்போது, 2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் நலன் கருதி அப்பள்ளிகளில் கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு தற்காலிக இடைநிலை ஆசிரியர்களின் தேவை உள்ளது.

ஆண்டு	அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	பணிபுரிந்து வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை	காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை	SMC மூலம் நிரப்ப தகுந்த பணியிடங்களின் எண்ணிக்கை	குறிப்பு
2025-26	2209	1911	298	61	113 இடைநிலை ஆசிரியர்கள் ஓய்வு பெற்றதனால் காலியான பணியிடங்களை நிரப்பிட தேவை ஏற்பட்டுள்ளது.
2026-27	2209	1798	411	167	

2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 167 தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் (SG Teachers) அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் பணியமர்த்திக் கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. கீழ்கண்ட அட்டவணையின்படி தற்காலிகமாக பணியமர்த்தப்படும் தற்காலிக இடைநிலை ஆசிரியர்களுக்கு ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்கள்) ஊதியம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

வ. எண்.	தற்காலிக பதவியின் பெயர்	தேவைப்படும் தற்காலிக ஆசிரியர்களின் எண்ணிக்கை	மாத தொகுப்பு ஊதியம் (ரூ)	ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டிய கால அளவு (ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை)	மொத்த ஊதியம் (கலம் எண். 3 x 4 x5 = 6))
1	தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள்	167	12,000	11 மாதங்கள்	2,20,44,000

மேற்சொன்னதின் அடிப்படையில் 2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை பணியமர்த்துவது அவசியமாகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப 167 தற்காலிக இடைநிலை ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை பணியமர்த்துவதற்கு அனுமதியும்,
2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு கல்வி அலுவலர் அவர்களின் வாயிலாக தலைமை ஆசிரியர்களின் SMC வங்கி கணக்கில் செலுத்தி பின்பு

தற்காலிக இடைநிலை ஆசிரியர்களுக்கு RTGS/NEFT மூலமாக ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்ட தற்காலிக இடைநிலை ஆசிரியர்களுக்கு ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) ஊதியமான ரூ. 2,20,44,000/-னை (ரூபாய் இரண்டு கோடியே இருபது இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) கணக்கு குறியீட்டு எண். 80-82-01, 210-10-06-13 (தற்காலிக பணியாளர்கள் ஊதியம் – ஆசிரியர்) என்கிற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 11.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2026 அன்று தீர்மான எண்.21/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதி (ம)நிதி)வின் கூட்டம் 19.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2026 அன்று தீர்மான எண்.137/2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப் (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தீர்மான எண்: 267/2026 **பொருள் எண்.33**

பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை தலைமையாசிரியர்கள் மூலமாக நியமிக்கவும் மற்றும் அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக ECS மூலம் வழங்குவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப்பள்ளிகளும், 130 நடுநிலைப்பள்ளிகளும், 46 உயர்நிலைப்பள்ளிகளும் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர்களின் சேர்க்கை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டங்களால் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் 6ஆம் வகுப்பு 10ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை இக்கல்வியாண்டிலும் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்துவது அவசியமாகிறது. தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் இளங்கலை பட்டம் மற்றும் B.Ed. தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

2025–2026 ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் நலன் கருதி 300 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் ரூ.15,000/– ஊதியத்தில் மன்றத்தீர்மான எண்.738/2025, நாள்.30.06.2025ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டனர்.

தற்போது, 2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் நலன் கருதி அப்பள்ளிகளில் கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு 250 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களின் தேவை உள்ளது.

ஆண்டு	அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	பணிபுரிந்து வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை	காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை	SMC மூலம் நிரப்ப தகுந்த பணியிடங்களின் எண்ணிக்கை	குறிப்பு
2025-26	1669	1089	580	300	64 பட்டதாரி ஆசிரியர்கள் ஓய்வு பெற்றதனால் காலியான பணியிடங்களை நிரப்பிட தேவை ஏற்பட்டுள்ளது
2026-27	1669	TRB Appointment-201 teachers. (1089+20164=1226) 1226	443	250	

2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 250 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் (B.T. Teachers) அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் பணியமர்த்திக் கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. கீழ்கண்ட அட்டவணையின்படி தற்காலிகமாக பணியமர்த்தப்படும் தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்கள்) ஊதியம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

வ. எண்.	தற்காலிக பதவியின் பெயர்	தேவைப்படும் தற்காலிக ஆசிரியர்களின் எண்ணிக்கை	மாத தொகுப்பு ஊதியம் (ரூ.)	ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டிய கால அளவு (ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை)	மொத்த ஊதியம் (கலம் எண். 3 x 4 x 5 = 6))
1	தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள்	250	15,000	11 மாதங்கள்	4,12,50,000

மேற்சொன்னதின் அடிப்படையில் 2026–2027ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் 250 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை பணியமர்த்துவது அவசியமாகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி

எண்ணிக்கைக்கு ஏற்ப 250 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை பணியமர்த்துவதற்கு அனுமதியும்,

2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு கல்வி அலுவலர் அவர்களின் வாயிலாக தலைமை ஆசிரியர்களின் SMC வங்கி கணக்கில் செலுத்தி பின்பு தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களுக்கு RTGS/NEFT மூலமாக ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும்,
3. மேற்குறிப்பிட்ட தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஜூன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை (11 மாதங்களுக்கு) ஊதியமான ரூ. 4,12,50,000/-னை (ரூபாய் நான்கு கோடியே பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) கணக்கு குறியீட்டு எண். 80-82-01, 210-10-06-13 (தற்காலிக பணியாளர்கள் ஊதியம் – ஆசிரியர்) என்கிற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 11.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2026 அன்று தீர்மான எண்.22/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 19.06.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2026 அன்று தீர்மான எண்.138/2026-ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.அ4/12234/2026

தீர்மான எண்: 268/2026 **பொருள் எண்.34**

பெருநகர சென்னை மாநகராட்சி– கல்வித்துறையின் நிர்வாக வசமுள்ள மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னைப் பள்ளிகள், அரசுப்பள்ளிகளில் 200 மாணவர்களுக்கு ஒரு Sweeper, 10 கழிப்பறைகளுக்கு 1 Scavanger என தற்காலிக தூய்மை பணியாளர்கள் நிர்ணயம் செய்வதற்கும், மண்டலம் 8, சமுதாய கல்லூரி மண்டலம் 9 தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் 13 அரசு ஆதி திராவிட தொடக்கப்பள்ளிகளுக்கு தூய்மை பணியாளர்களை பணியமர்த்தவும் – தினக்கூலியாக ஊதியம் ரூ.761/- உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 1829 தற்காலிக தூய்மை பணியாளர்கள் SMC (பள்ளி மேலாண்மை குழு) மூலம் நியமணம் செய்ய அனுமதி.

அரசாணை நிலை எண். 166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள்.23.11.2016ல் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள உள்ளாட்சி பள்ளிகள், அரசு பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை பராமரிக்க பெருக்குபவர் / துப்புரவு பணியாளர்களை SMC (பள்ளி மேலாண்மை குழு) மூலம் தற்காலிக தூய்மை பணியாளர்களை நியமனம் செய்து அப்பராமரிப்பு பணிகளை நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் வசூலிக்கும் கல்வி வரியின் மூலம் மேற்கொள்ளுமாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையின் 23.01.2017, 30.03.2017, 31.05.2017 மற்றும் 14.09.2022 நாளிட்ட சுற்றறிக்கையில் மண்டலம் –1 முதல் 15 வரை மேற்காணும் அரசாணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகள் அரசு பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை பராமரிக்க பெருக்குபவர்/ துப்புரவு பணியாளர்களை ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் 11 மாதங்களுக்கு/ (ஜுன் – 2026 முதல் ஏப்ரல் –2027 வரை) ஒவ்வொரு பள்ளிக்கும் பணிகளை மேற்கொள்ள SMC (பள்ளி மேலாண்மை குழு) மூலம் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது.

மன்றத்தீர்மான எண்.1214/2025, நாள்.22.12.2025ன் படி 200 பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு தூய்மை பணியாளர் (One Sweeper for 200 students) (200:1) மற்றும் 10 கழிப்பறைகளுக்கு ஒரு துப்புரவு பணியாளர் (One Scavenger for Ten Toilets) (10:1) என்ற விகிதத்தில் மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள அனைத்து சென்னை பள்ளிகளில் 1829 தற்காலிக தூய்மை பணியாளர்கள் பணியமர்த்திட அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், 2026–2027 கல்வி ஆண்டின் படி பள்ளி மாணவ மாணவியரின் எண்ணிக்கைக்கேற்ப 200 பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு தூய்மை பணியாளர் (One Sweeper for 200 students) (200:1) மற்றும் 10 கழிப்பறைகளுக்கு ஒரு துப்புரவு

பணியாளர் (One Scavenger for Ten Toilets) (10:1) என்ற விகிதத்தில் மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள அனைத்து சென்னை பள்ளிகளுக்கு 1829 தற்காலிக தூய்மை பணியாளர்கள் SMC (பள்ளி மேலாண்மைகுழு) மூலம் தற்காலிக தூய்மை பணியாளர்களை பணியமர்த்திட அனுமதி வேண்டப்படுகிறது.

தற்காலிக தூய்மை பணியாளர்களின் பணியிடங்களின் விவரங்கள் சம்மந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

GREATER CHENNAI CORPORATION - EDUCATION DEPARTMENT							
200:1 (Sweeper and Scavenger)							
S.NO	ZONE	AEO'S	NO.OF. CHENNAI SCHOOLS	NO. OF GOVT SCHOOLS	SWEEPER	SCAVENGER	TOTAL
1	1	1	26	4	53	40	93
2	2	2	17	8	49	33	82
3	3		13	4	34	23	57
4	4	3	46	3	105	74	179
5	5	4	42	7	72	74	146
6	6	5	48	6	94	87	181
7	7	6	35	4	61	52	113
8	8	7	30	5	70	68	138
9	COMMUNITY CENTRE(Z-8)	7	1	-	2	2	4
10	9	8	53	5	78	86	164
11	ITI (Z-9)	8	1	-	2	2	4
12	10	9	36	8	130	109	239
13	11	6	12	13	48	30	78
14	12	10	11	8	31	26	57
15	13		24	4	90	57	147
16	14	11	8	5	24	19	43
17	15		16	7	60	44	104
TOTAL			419	91	1003	826	1829

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்கள் 1 முதல் 15 வரையிலுள்ள பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள், கழிவறைகளின் எண்ணிக்கை மற்றும் 200 மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேற்காணும் அட்டவணையின்படி தேவைப்படும் 1829 தற்காலிக தூய்மை பணியாளர்களை மண்டலங்களிலுள்ள ஒவ்வொரு பள்ளிகளுக்கும் பணியமர்த்தி கொள்ள அனுமதியும்,
2. ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ஜூன் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை

   11 மாதங்களுக்கு துப்புரவு/ தூய்மை பணியாளர்களை மண்டல அலுவலகங்கள் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னை/அரசு பள்ளிகளுக்கு SMC (பள்ளி மேலாண்மைகுழு) மூலமாக தற்காலிகமாக பணியாளர்களை பணியமர்த்துவதற்கும்,

3. இனி வருங்காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னை பள்ளிகள்/ அரசுப்பள்ளிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மைத்துறையின் சுற்றறிக்கை மூலம் அவ்வப்பொழுது தினக்கூலி உயர்த்தி வழங்கப்படுவதை ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று வழங்கிடவும்,
4. ஒரு கல்வி ஆண்டிற்கு தேவைப்படும் மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னை பள்ளிகள்/ அரசுப்பள்ளிகளுக்கு பணியமர்த்தப்படும் துப்புரவு/ தூய்மை பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாளொன்றுக்கு ரூ.761/- வீதம் ஒரு மாதத்திற்கு 26 நாட்களுக்கு (ரூ.19786) 11 மாதங்களுக்கு (19,786 x 1829 x 11) ரூ. 39,80,74,534) தோராயமாக ரூ.40,00,00,000/- தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு தேவைப்படும் நிதி கல்வித்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு நிதி நிர்வாகப்பிரிவின் மூலமாக கணக்கு தலைப்பு எண்: 80-82-01 (210-100-605) Payment to casual staff –School maintenance நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,
5. பள்ளிகளுக்கான பட்டியலில் மண்டலம் ஏதேனும் மாறியிருந்தால் கல்வி அலுவலர் மூலமாக உரிய ஒப்புதல் பெறவும்,
6. இனிவரும் காலங்களில் கல்வி அலுவலர் கல்வித்துறை வாயிலாக அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் மூலம் RTGS வாயிலாக தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும்,
7. இனிவரும் காலங்களில் தற்காலிக தூய்மை பணியாளர்களை நீக்கவோ பணியமர்த்தவோ கல்வி அலுவலர் அவர்களுக்கு அனுமதி வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

